GOKULAM

கோகுலம்

அக்டோபர் 2002

ரூ.6/-



புத்துணர்ச்சி தரும் பானம்! பக்.32



கண்கவர் மண் பொம்மைகள்!

வண்ணம் தீட்டுங்கள்





டிக்... டிக்... டிக்...

சென்ற ஆண்டு பள்ளியிலே
சிறுவர் ஓட்டப் பந்தயத்தில்
வென்று வாங்கிப் பெருமையுடன்
வீட்டில் மாட்டிய பரிசாகும்!

அண்ணன் தம்பி உறவேபோல்
அதனுள் இரண்டு முட்களுமே
ஒன்றன் பின்பு ஒன்றாக
ஒழுங்காய்ச் சுற்றிச் சுழன்றோடும்!

பன்னி ரண்டு எண்களுக்குள்
பகலும் இரவும் வலமாகச்
சண்டை இன்றித் தொடர்ந்தோடிச்
சரியாய்க் கணித்து மணி கூறும்!

என்றும் எனது கடமைகளை
இனிதாய் முடித்துப் புவியினிலே
நின்று நிலைத்த புகழ் பெறவே
நேரம் காட்டும் கடிகாரம்!

தளவை. இளங்குமரன்



கோகுலம்

அக்டோபர் 2002

மலர் : 20
இதழ் : 9

அலகு - அறிவு

கூர்மையான அலகுள்ள பறவைகள் புத்திசாலித்தனமானவை என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்து உள்ளனர். ஒரு கூட்டில் பிறந்த 'ஃப்ளை கேட்சர்' எனப்படும் ஈக்களை உண்ணும் பறவைகளின் குஞ்சுகளை எடுத்து, இன்னொரு கூட்டில் அவற்றை வைத்தனர். அந்தக் கூட்டில் பல பறவைகள் இருந்தன. அந்தக் குஞ்சுகள் தங்களுக்கு அனுசரணையாக உள்ள பறவைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றிற்கு அருகில் கூடுகள் அமைத்து வசிக்கத் துவங்கின என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

விருப்பம்!

பிரிட்டிஷ் மக்களில் பெரும்பாலோர் அந்நாட்டை விட்டு வெளியேறி வேறுநாடுகளில் குடியேற விரும்புகின்றனர். அந்நாட்டில் நிலவும் கடுங்குளிர், அதிக விலைவாசி ஆகியவற்றைத் தாங்க முடியவில்லை என்று கூறியுள்ளனர். டெலிகிராஃப் பத்திரிகை நடத்திய ஆய்வில் 54 சதவீத பிரிட்டிஷ் மக்கள் அமெரிக்கா, ஸ்பெயின், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் குடியேற விருப்பம் தெரிவித்துள்ளனர். 1948-ஆம் ஆண்டு நடத்திய ஆய்வில் 42 சதவீதம் பேரும், 1975ஆம் ஆண்டு நடத்திய ஆய்வில் 40 சதவீதம் பேரும் நாட்டை விட்டு வெளியேற விரும்பினர்.

கோகுலம்

சாக்லேட் சாப்பிடலாம்!

சாக்லேட், காபி, கோகோ ஆகியவற்றைச் சாப்பிடுவோருக்குப் புற்று நோயும் இதய நோயும் வராது என்று லண்டனில் உள்ள யுனிவர்சிடி காலேஜ் பயோகெமிஸ்ட்கள் தெரிவித்துள்ளனர். புற்றுநோய் செல்களை எதிர்க்கும் திறன் கொண்ட காஃபைன், தியோபிலைன் என்ற மருந்துகள் சாக்லேட், காபி, கோகோ ஆகியவற்றில் அதிகம் உள்ளன.





உயிர்களிடத்தில் அன்பு வேணும்
- தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
- பாரதியார்.

நியூஸ்

260வது பிறந்த நாள்!

உலகிலேயே அதிக நாள் வாழக்கூடிய பிராணி ஆமை. எகிப்து தலைநகர் கெய்ரோவில் உள்ள மிருகக் காட்சி சாலையில் ஒரு பெரிய ஆமை தனது 260வது பிறந்த நாளை கொண்டாடியுள்ளது. இது 1742ஆம் ஆண்டு பிறந்தது.

புதிய கண்டுபிடிப்பு!

கிட்டப்பார்வை, தூரப்பார்வை கோளாறு போன்று அபரோப்பியா என்ற புதிய பார்வைக் கோளாறை உலகிலேயே முதன் முறையாக சென்னை அகர்வால் கண்மருத்துவமனை மருத்துவர் அமர் அகர்வால் கண்டுபிடித்திருக்கிறார். இக்கண்டு பிடிப்புக்காக இவருக்குச் சர்வதேச கண் மருத்துவ அமைப்பு விருது வழங்கி சிறப்பிக்க உள்ளது. கிட்டப்பார்வை, தூரப்பார்வை போன்ற குறைபாடு உடையவர்கள் உரிய கண்ணாடி அணிந்தால் பார்வை அட்டையில் உள்ள ஏழு வரிகளையும் படிக்க முடியும். ஆனால் அபரோப்பியா குறைபாடு உள்ளவர்கள் கண்ணாடி அணிந்தால் கூட அட்டையில் உள்ள ஏழு வரிகளையும் படிக்க முடியாது. பொதுவாகக் கிட்டப்பார்வை குறைபாடு உள்ளவர்களுக்கு அபரோப்பியா குறைபாடும் இருக்க வாய்ப்புண்டு. இப்புதிய கண்டுபிடிப்பால் அபரோமீட்டர் கருவி மூலம் குறையைத் துல்லியமாகக் கணக்கிட்டுச் சிகிச்சை அளித்து சரி செய்து விடலாம்.

செல்லப் பிராணிகள்

ஆஸ்துமா, ஒவ்வாமை போன்ற நோய்களிலிருந்து குழந்தைகளைக் காக்க, அவர்களை நாய், பூனை போன்ற செல்லப் பிராணிகளுடன் விளையாட விட வேண்டும் என்று ஓர் ஆராயச்சி முடிவு தெரிவிக்கிறது. அமெரிக்காவில் ஜார்ஜியா மாகாணத்தில் பிறந்த ஒன்று முதல் ஏழு வயது வரையிலான 474 குழந்தைகளைச் சோதனையில் ஈடுபடுத்தினர். நாய், பூனைகளுடன் விளையாடிய குழந்தைகளுக்கு ஒவ்வாமை, ஆஸ்துமா போன்ற நோய்கள் குறைவாக இருப்பதைக் கண்டறிந்துள்ளனர்.



"ஏய்! போய் இரண்டு கட்டு கருட்டு வாங்கிட்டு, அண்ணாச்சி கடையிலே ஊறுகாய் பாக்கெட்டு வாங்கிட்டு வா" என்ற கருப்பசாமியைப் பார்த்த அஹமது, உடனே பணத்தை வாங்கிக் கொண்டு ஓடினான். காலையிலேயிருந்து வேலை சரியாக இருந்தது அஹமதுக்கு. பன்னிரண்டு வயதான அஹமது மிகவும் நன்றாகப் படிப்பான். கணக்கு தான் சரியாக வராது. அவன் கொஞ்சம் முயன்று இருந்தால், கணக்கை அழகாக மண்டையில் ஏற்றியிருக்கலாம். மாறாக, தன் அப்பா அறிவுரை கூறினார் என்று கோபித்துக் கொண்டு வீட்டை விட்டு ஓடி வந்து விட்டான். அவன்

அழ.வள்ளியப்பா நினைவு சிறுகதைப் போட்டியில் மூன்றாம் பரிசு பெற்ற கதை

வீட்டை விட்டு வந்து ஒரு மாதத்திற்கு மேல் ஆகிவிட்டது. ஒருநாள் பசி தாங்க முடியாமல் மயக்கமாகச் சாலையில் விழுந்தபோது அந்தக் கருப்பசாமி தான் அஹமதைத் தூக்கிக் கொண்டு போய் பிரியாணி வாங்கிக் கொடுத்தான்.

அன்றிலிருந்து அஹமதை நிறைய வேலை வாங்கி சக்கையாகப் பிழிகிறான். காலை எழுந்தவுடன் டீ வாங்கிக் கொடுப்பான் கருப்பசாமி. அதோடு இரவு சாப்பாடுதான். என்றைக்காவது மதியம் கஞ்சி வழங்கப்படும். தன்னுடைய வயதையொத்த இன்னும் இரு பையன்கள் அங்கு இருப்பதைக் கண்டு திகைத்தான் அஹமது. ஒருவன் பீட்டர், எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டு இருந்தான். ஆசிரியர் திட்டியதால் அவன் வீட்டிற்குச் செல்லாமல் படிப்பிற்குப் பயந்து கொண்டு அப்படியே ஓடி வந்து விட்டான். இன்று இங்கு நாயாய் உழைக்கிறான். அதே போல அருணும் பணக்கார வீட்டுப் பையன். அவன் வீட்டிலேயே திருடியதால் அம்மா அடித்தாரென்று வந்து விட்டான்.

அஹமதுக்குத் தன் அம்மாவை நினைக்க நினைக்க அழுகை அடைத்தது. காலையில் அம்மா எழுப்பும்போதெல்லாம், "என்னை ஏன் இப்படி விடியற்

ஓடிப் போன அஹமது



காலையிலே எழுப்பறே? விடு'' என்று அம்மாவைத் திட்டிக் கொண்டே தூங்குவான். ''கண்ணா அஹமது! மணி ஆகிவிட்டது. ஹார்லிக்ஸ் கொண்டு வந்திருக்கேன். குடிச்சுட்டுப் படிடா'' என்று கெஞ்சும் அம்மாவின் நினைவு வந்து விட்டது அவனுக்கு. 'ஓ'வென அழுதான். அதற்குள் இடி இறங்கியது போல அவன் முதுகில் ஓர் அடி இறங்கியது. "என்னடா! பகலிலேயே கனவு காணுறியா? அறிவு இல்ல. பீடி கட்டு வாங்கிட்டு வரச் சொன்னா, கனவு கண்டுக்கிட்டு வர்றீயா?'' என்ற கருப்பசாமி அஹமதைச் சட்டையைப் பிடித்துக் கொண்டு தரதரவென இழுத்துச் சென்றதை பார்த்த பீட்டரால் பயப்படாமல் இருக்க முடியவில்லை. பீட்டர் 'ஓ'வென அலற, அருண் கையை வைத்து அவன் வாயைப் பொத்தினான்.

கருப்பசாமி கையில் அன்று ஒரு பைசா கூட இல்லாததால், மூவரையும் அழைத்து மூவருக்கும் ஒவ்வொரு கையில் கட்டு போட்டான். ''ஏலே பாருங்கடா! மூணு பேரும் வேற வேற ஏரியாவிற்குப் போய் இன்றைக்குப் பிச்சை எடுக்கணும். என் கையில காசு இல்லை. நீங்க பிச்சை எடுத்துக் கொண்டு வர்றதைதான் நான் சாயங்காலம் சாப்பிடணும். ஏலேய்! என்னை எவனாச்சும் ஏமாத்திட்டுத் தப்பிச்க போறதுக்கு பிளான் பண்ணினீங்க, செத்தீங்க. எல்லா ஏரியாவுலயும் என்னோட ஆட்கள் இருக்காங்க. நீங்க தப்பிச்சுப் போறதுக்கு பிளான் பண்ணினா, மண்டையைப் பொளந்துடுவேன். ஜாக்கிரதை'' என்றான். மூவரும் பயந்து கொண்டே சென்றனர்.

அஹமது பஜார் பகுதியில் பிச்சை எடுக்கச் சென்றான். அம்மாவின் நினைவு அவனை அழுக்கியது. 'இந்த வெயிலில்

நின்று இவ்வளவு கஷ்டப்பட வேண்டுமா? இது தேவையா? அங்கு எனக்காக அப்பா வயலில் வெயிலில் நின்று கஷ்டப்பட்டாரே. அவர் விருப்பப்படி கொஞ்சம் முயற்சி எடுத்து கணக்குப் பாடத்தை மண்டையில் ஏற்றிக் கொண்டிருந்தால், எனக்கு இந்த நிலைமை வந்திருக்காது. என் பெற்றோர் எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பார்கள். என் அப்பாதான் வெயிலில் நின்று கஷ்டப்படுகிறார் என்று என்னைக் கஷ்டப்படாமல் ஏ.ஸி. அறையில் உட்கார வைத்து சம்பாதிக்க வைக்க வேண்டும் என்று நினைத்தவருக்கு நான் செய்த துரோகத்தால் விளைந்த பயனை அனுபவிக்கிறேன். இன்று எவனோ ஒரு முகம் தெரியாத காட்டுமிராண்டிக்காக நடுத் தெருவில் நின்று பிச்சை எடுத்து அல்லல்படுகிறேன்' என்று தன்னை நினைத்து மிகவும் வருந்தினான் அஹமது.

'அப்பா என்னிடம் ஆசையாக வந்து கணக்கைக் கொஞ்சம் சிரமம் எடுத்துக் கவனமாகப் படி என்றபோதெல்லாம் எனக்கு எவ்வளவு கோபம் வரும்? எடுத்தெறிந்து பேசுவேன். ஆனால் அவர் பொறுமை காப்பார். அவர் கைவிரல் கூட என் மீது பட்டதில்லை. இவன் என்னடா வென்றால் என்னை தினம் தினம் அடித்தே கொன்று விடுவான் போல் இருக்கிறதே. என் பெற்றோர் அவ்வளவு வறுமையில் இருந்தபோதிலும் எனக்கு அழகழகாக உடைகளை வாங்கிக் கொடுப்பார்கள். ஆனால் என்னுடைய மடமையான செயலால் இன்று நான் பிச்சைக்காரனாகி விட்டேன்' என்று நினைத்துக் கொண்டிருக்கும் போது அவன் நெஞ்சே வெடித்து விடும் போல் இருந்தது. அழுகை பீறிட்டது.

அப்போதுதான் எதிரே இருந்த போலீஸ் ஸ்டேஷன் அவன் கண்ணில் பட்டது. அதற்குள் அவன் நுழைந்து விட்டால் கருப்பசாமியின் ஆட்களால் அவனை ஒன்றும் செய்ய முடியாது என்று எண்ணி உடனே ஸ்டேஷனுக்குள் நுழைந்தான் அஹமது. இன்ஸ்பெக்டரிடம் எல்லா விஷயங்களையும் சொன்னான். அவரும் போலீஸ்காரர்கள் ஐவரை அனுப்பி கருப்பசாமியையும், அவனது ஆட்களையும் பிடித்து வரச் சொன்னார். அனைவரும் பிடிபட்டனர். அருண், பீட்டர் ஆகியோரையும் விடுவித்து அவரவர் பெற்றோரிடம் சேர்ப்பித்தனர். அவர்கள் மூவரும் புது உலகத்தில் காலடி எடுத்து வைத்தனர்.

- சி. வினோத்குமார்,
பன்னிரெண்டாம் வகுப்பு,
மயிலாடுதுறை.

பிஞ்சுக் கரங்களின் கண்டுபிடிப்புகள்!



❖ 1820ல் ஃபிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 'லூயிஸ் பிரெய்லி' என்ற கண்பார்வையற்ற 15 வயதுச் சிறுவன் கண் பார்வையற்றவர்கள் கல்வி பயில உதவும் 'பிரெய்லி' முறையைக் கண்டுபிடித்தான். இந்தக் கண்டுபிடிப்பு, கண் பார்வையற்றவர்கள் எழுத்துகளைத் தடவிப் பார்த்துப் புரிந்து கொண்டு கல்வி பயிலப் பயன்படுகிறது.

❖ 1856ல் இங்கிலாந்தைச் சேர்ந்த 'வில்லியம் பெர்க்கின்' என்ற 18 வயதுச் சிறுவன் வேதியியல் முறையில் துணிகளுக்குச் சாயம் ஏற்றப் பயன்படும் சாயங்களைக் கண்டுபிடித்தான். இந்தக் கண்டுபிடிப்பால் நாம் இன்று கண்கவர் வண்ணங்களில் ஆடைகளை அணிந்து மகிழ்கிறோம்.

❖ 1873ல் ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த 'செஸ்ட்டர் கிரீன்வுட்' என்ற 15 வயதுச் சிறுவன் பனிச்சறுக்கு விளையாட்டின் போது பயன்படக் கூடிய காது உறைகளைக் கண்டுபிடித்தான். இந்தக் கண்டுபிடிப்பு குளிரால் காதுகள் பாதிக்கப்படாமல் இருக்கப் பயன்படுகிறது.

❖ 1962ல் ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த 'ராபர்ட் பேட்ச்' என்ற ஐந்தே வயதான சிறுவன், சிறுவர்கள் விளையாடக்கூடிய 'ட்ரக்'கைக் கண்டுபிடித்தான். இந்த ட்ரக்கின் பாகங்களைத் தேவையற்றபோது தனித்தனியே பிரித்துக் கொள்ளலாம். தேவையான போது சேர்த்துக் கொள்ளலாம். மேலும் இந்த ஒரு ட்ரக்கைக் கொண்டே மேலும் பல ட்ரக்குகளை எளிதாக உருவாக்கிக் கொள்ளலாம்.

— மு. பெரியசாமி



கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

ஓவியப் போட்டி, பொது அறிவுப் போட்டி, அனுபவங்கள், துணுக்குகள், படக்கதைகள்... இன்னும் ஏராளமான அம்சங்களையும் தாங்கி வரும் கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்! உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் பரிசளியுங்கள்.

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :


சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

செய்து பாருங்கள்



ஒரு பொருளைப் பார்க்காமல் அதைத் தொடுவதன் மூலம் மட்டும் அறிந்து கொள்வதென்பது எளிதல்ல. இதை ஒரு சிறிய சோதனையின் மூலம் அறியலாம்.

உங்களுக்குத் தேவை ஒரு துணி துவைக்கப் பயன்படுத்தும் பிரஷ், நண்பன். உங்கள் நண்பன் முதுகில் பிரஷ்ஷில் மேலிருந்து கீழாகத் தேய்த்து விடுங்கள். இரண்டு, மூன்று முறை இப்படி செய்துவிட்டு, பிரஷ்ஷை உங்கள் சட்டையில் தேய்க்கும்போதே நண்பனின் முதுகில் கையால் தேய்க்கவும். உங்கள் நண்பன் முதுகில் படுவது கையா? பிரஷ்ஷா என்பதை அவனால் சரியாகச் சொல்ல இயலாது. ஏனெனில் நண்பனின் மூளை பிரஷ்ஷின் ஒலியையும், தொடு உணர்வையும இணைத்துப் பார்த்து அறிகிறது. இதே சோதனையைக் கண்ணால் பார்த்துக் கொண்டு முன்புறம் செய்தால் எளிதில் அறிந்து கொள்வீர்கள்.



இரண்டு பென்சில்களை எடுத்துக் கொள்ளுங்கள். நண்பன் கண்களை மூடிக் கொள்ள சொல்லிவிட்டு, அவனது உள்ளங் கையில் பென்சிலால் தொடுங்கள். ஒரு பென்சில், இரண்டு பென்சில், விரல் என மாற்றி மாற்றித் தொடுங்கள். நண்பன் எதால் தொடுகிறீர்கள் என்பதை சரியாகச் சொல்வான். இதையே முதுகுப் பக்கத்தில் செய்து பாருங்கள். அவனால் சரியாகச் சொல்ல முடியாது. தடுமாறுவான். இதற்குக் காரணம் உள்ளங்கையில் உணர்ச்சி செல்கள் அதிகம், முதுகுத் தோலில் உணர்ச்சி செல்கள் குறைவு என்பது தான்.

* ஆனந்தன்

கேரம் ஆட்டத்தில் ஸ்ட்ரைகரை ('அடிப்பான்') வைத்துக் கொண்டு, எந்தக் காயை (coin) பாக்கெட் பண்ணலாம் என்று எவ்வளவு நேரம் யோசிக்கலாம்? பதினைந்து நொடிகள்தான்! அதன் பின்னரும் 'அடிப்பானை' வைத்துக் கொண்டு முழித்துக் கொண்டிருந்தால் நடுவர் இடையில் புகுந்து அடிக்கும் வாய்ப்பைப் பிடுங்கி விடுவார். ''கேரம் ஆட்டத்தை எல்லோரும் சுலபமாக ஆடலாம்; அதிலொன்றும் சந்தேகம் இல்லை. ஆனால் போட்டி என்று வந்து விட்டால் பல கடுமையான விதிகள் இருக்கின்றன'' என்கிறார் தமிழ்நாடு கேரம் விளையாட்டு சங்கத்தின் செயலாளரான ஆனந்தன்.



கடந்த 35 ஆண்டுகளாக தமிழகத்தில் கேரம் ஆட்டம் வளர்ச்சியுற வேண்டும் என்று பாடுபட்டுக் கொண்டிருப்பவர் இவர். தேசிய, உலக அளவில் சிறந்து விளங்கும் பல கேரம் ஆட்டக்காரர்கள் இவரிடம் பயிற்சி எடுத்துக் கொண்டவர்கள்தான்.

யாரும் ஆடலாம் கேரம்!

கேரம் போர்டு சதுரத்தின் நீள - அகலம் 29 அங்குலம். போர்டுக்குள் Base line என்று சொல்லப்படும் அடிக்

வியக்க வைக்கும்

விளையாட்டு உலகம்



கோடுகள், எட்டு சிவப்பு வட்டங்கள், ஆட்டக்காரர்களின் எல்லைகளைத் தெரியப்படுத்தும் வகையில் இரு சிவப்பு வட்டங்களின் இடையில் இருந்து புறப்படும் அம்புக் கோடுகள், நான்கு மூலைகளில் பாக்கெட்டுகள் உள்ளன. ஸ்ட்ரைகரை சிவப்பு வட்டத்தின் மீது வைத்து ஆடும் போது வட்டம் முழுவதும் மறைக்கப்பட்டிருக்க வேண்டும். அது தவிர ஸ்ட்ரைகர் அம்புக் கோட்டின் மீது படக் கூடாது. அதே போல அடிக்கோடுகளில் ஸ்ட்ரைகரை வைத்து ஆடும் போது, அது இரு கோடுகளையும் தொடும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் அபராதம் உண்டு. ஆடும்போது போர்டை கைகளால் துடைக்கக் கூடாது. ஸ்ட்ரைகரை வைத்து ஆடும் போது அல்லது ஸ்ட்ரைக்கரை போர்டிலிருந்து எடுக்கும் போது மற்ற காய்களைத் தொட்டுவிட்டால் பெனால்டி உண்டு.

அம்புக் கோட்டின் மீது காய்கள் இருந்தாலும் அடித்து பாக்கெட்டில் தள்ளலாம். தரையிலிருந்து இரண்டடி உயரத்தில்தான் கேரம் போர்டை வைத்து ஆட வேண்டும். போர்டுக்கு மேலே ஒளி விளக்குகள் அமைப்பது கட்டாயம்.

மொத்தம் மூன்று ஆட்டங்கள் ஆட வேண்டும். அதில் இரு ஆட்டங்களில் வெற்றி பெறுபவர் வெற்றி வீரராக அறிவிக்கப்படுவார். ஒவ்வொரு ஆட்டத்திற்கும் 25 புள்ளிகள். சிவப்பு காய்க்கு மூன்று புள்ளிகள், கறுப்பு, வெள்ளை காய்க்குத் தலா ஒரு புள்ளி. 25 புள்ளிகளை எடுத்து ஒரு ஆட்டக்காரர் வெற்றி பெறுவதற்கு முன்னால் பல 'போர்டுகள்' ஆட வேண்டியிருக்கும். வெள்ளைக் காய்களுக்கு உரிய போட்டியாளர் தனது எல்லா காய்களையும் போட்டு விட்ட நிலையில், எதிராளியின் கறுப்புக் காய்கள் எத்தனை மீதம் போர்டில் இருக்கிறதோ அது கணக்கிடப்பட்டு வெற்றியாளர் தரப்பில் புள்ளிகள் சேர்க்கப்படுகின்றன. இப்படியாக ஒவ்வொரு ஆட்டத்திலும் 25 புள்ளிகள் சேர்க்க வேண்டும். இப்படி 25 புள்ளிகளைச் சேர்க்கப் பல போர்டுகள் ஆட வேண்டியிருப்பதாலும், நேரத்தின் அவசியம் கருதியும் ஆடும் 'போர்டுகளின்' எண்ணிக்கை இப்போது சில போட்டிகளில் எட்டாகக் குறைக்கப்பட்டுவிட்டது. அதன்படி எட்டு போர்டுகள் ஆடி முடிக்கப்பட்ட நிலையில் புள்ளிகள் கணக்கிடப்பட்டு வெற்றி, தோல்வி நிர்ணயிக்கப்படுகிறது.

கேரம் ஆட்டத்தில் சிவப்புக் காயைப் போடுவதென்பது ஒரு முக்கியமான அம்சம். போட்டியிடும் இரு தரப்பும், சிவப்புக் காயை முந்திப் போடுவதில் ஆர்வம் காட்டும். காரணம் தோற்றால் கூட அந்த சிவப்புக் காய்க்குரிய மூன்று பாயிண்ட் எதிராளிக்குச் சேராதல்லவா!

கேரம் போட்டிகளில் வயதின் அடிப்படையில் ஐந்து விதமான பிரிவுகள் இருக்கின்றன. ஆடவர் (ஒற்றையர் ஆட்டம்) ஆடவர் (இருவர்), மகளிர் (ஒருவர்), மகளிர் (இருவர்) மற்றும் Mixed அணி என்று தனித்தனி போட்டிகள். "ஐந்து வயதில் பயிற்சி பெறத் துவங்குவது சிறந்த ஆட்டக்காரராக வர வழி வகுக்கும்" என்கிறார் ஆனந்தன். அந்த வயதில் விரல்களைச் சுண்டி ஸ்ட்ரைகரை அடிக்கப் பழகினால் போகப் போக நல்ல பிடிப்பு (grip) கிடைக்கும். மொத்தம் மூன்று விதமான பிடிப்புகள் இருக்கின்றன. ஒரு காயைப் போடுவதற்கும் ஒரே சமயத்தில் இரண்டு அல்லது மூன்று காயைப் போடுவதற்கும் பிடிப்புகளில் யுக்தியைக் கையாள வேண்டும். தனது காய்கள் எதிராளியின் அடிக்

கோகுலம் சுழல் கோப்பை

கோகுலம் இதழ்களில் ஓராண்டில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ அப்பள்ளிக்குச் சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு தூத்துக்குடி, மேலச்சீத்தை, புதுடெல்லி, மடிப்பாக்கம், நல்லூர், செங்கல்பட்டு ஆகிய ஊர்களில் உள்ள பள்ளிகள் கடுமையான போட்டியில் இருக்கின்றன. இன்னும் இரண்டே மாதத்தில் கோப்பையை வெல்வது யார் எனத் தெரிந்து விடும்.

கோடுகளின் கீழே இருக்கும் பட்சத்தில் அவற்றை 'கட்' செய்தோ, 'டபுள்' செய்தோ பாக்கெட்டுக்குள் தள்ளுவது ஒரு கலை. காய்களை முதலில் வட்டமாக அடுக்கி வைத்தவுடன் முதலில் அடிப்பவர் சரியான பலத்துடன் கூடிய பிடிப்புடன் ஸ்ட்ரைகரைப் பயன்படுத்தி அடித்தால் நான்கு காய்களைக் கூட ஒரே சமயத்தில் பாக்கெட்டில் தள்ளலாம். அதே போல எதிராளியின் காய்களைத் தனது அடிக்கோடுகளுக்குக் கீழே தள்ளி, அவரைச் சங்கடப்படுத்துவதும் ஒரு யுக்தி.

கேரம் போட்டியிலும் பாய்வதும், பதுங்குவதும் யுக்தியாகக் கையாளப்படுகிறது. "இதற்கெல்லாம் தினசரி நான்கு மணி நேரப் பயிற்சி தேவை" என்கிறார் ஆனந்தன். கிரிக்கெட்டுக்கு அடுத்தபடியாக பட்டி, தொட்டிகளில் ஆடப்படும் விளையாட்டுகளில் கேரமும் ஒன்று. இதன் தாயகம் இந்தியாதான். முகலாய சாம்ராஜ்யத்தின்போது வெறும் தரையில் கட்டம் போட்டு ஆடப்பட்டு, காலப்போக்கில் இப்போதுள்ள நிலையை அடைந்திருக்கக் கூடும் என்கிறார்கள்.

கேரம் போர்டுகள் இந்தியாவில் தான் தயாரிக்கப்படுகின்றன. ஆனால் போர்டின் வழவழப்பான மேல் பகுதி - 2 மில்லி மீட்டர் ply wood மட்டும் வெளி நாடுகளில் இருந்து தருவிக்கப்படுகிறது. அம்புக்குறிகள், சிவப்பு வட்டங்கள், அடிக்கோடுகள் ஆகியவற்றைப் போட்டு விற்பனைக்கு அனுப்புகிறார்கள். வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கின்றனர். முன்பெல்லாம் ஸ்ட்ரைகரைத் தந்தத்தில் செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் தந்தப் பொருட்கள் தடை செய்யப்பட்டு விட்ட படியால் பிளாஸ்டிக்கில் ரசாயனம் கலந்து இப்போது ஸ்ட்ரைகர் செய்கிறார்கள். ஸ்ட்ரைகரின் எடை 15 கிராம் இருக்க வேண்டும். கேரம் ஆடுபவர்களில் 80 சதவீதம் ஆட்காட்டி விரலைப் பயன்படுத்தித்தான் ஆடுகிறார்கள். மீதம் இருப்பவர்கள் நடு விரலைப் பயன்படுத்துகிறார்கள். இந்த விரல்களுக்குப் பக்க பலமாக, துணையாக, கட்டை விரலும், மோதிர விரலும் இருக்கின்றன. வழவழப்பான போர்டை மேலும் வழவழப்பாக்க போரிக் பவுடர் போடுகிறார்கள்.



"எக்ஸ்-ரே எடுக்க சீட்டு எழுதிக் கொடுத்தேனே, ஏன் எடுக்கலை?"

"நீங்க எழுதிக் குடுத்த சீட்டை எக்ஸ்-ரேவெல்லாம் எடுக்க முடியாதாம் டாக்டர். ஜெராக்ஸ் மட்டும்தான் எடுக்க முடியுமாம்!"

- எம்.வினோத், விருத்தாசலம்

"கேரம் உட்கார்ந்து ஆடும் ஆட்டம் தானே, அதற்கு உடலைத் தகுதியாக வைத்துக் கொள்வது அவசியமா?"

"கண்டிப்பாக" என்கிறார் ஆனந்தன். "ஒரு குறிப்பிட்ட வயது வரைதான் கண்கள் கூரிய பார்வை கொண்டதாக இருக்கும். அது தவிர உடலை வளைத்தும் சாய்த்தும் ஆட வேண்டும். கால்களை நன்றாக தரையில் அழுத்தி ஊன்றினால் தான் ஸ்ட்ரைகரை அடிக்கும் போது விரல்களுக்கு உரிய சக்தி கிடைக்கும்" என்கிறார் ஆனந்தன். இது தவிர மிக முக்கியமாக நாற்பது வயதுக்கு மேல் நரம்புகளின் செயல்பாடுகள் மந்தமாவதன் காரணமாக ஸ்ட்ரைகரைக் கொண்டு அடிக்கும் வேகமும் குறையுமாம். எனவே கேரம் ஆட்டக்காரர்கள் குறைந்த பட்ச உடற்பயிற்சி தினமும் செய்ய வேண்டும்.

தமிழகத்தில் மரிய இருதயம், ஆரோக்கியராஜ் போன்ற சிறந்த வீரர்கள் இருக்கிறார்கள். பெண்களும் இந்த ஆட்டத்தில் சிறந்து விளங்குகிறார்கள். ஆனால் கேரம் ஆட்டம், ஆசிய விளையாட்டிலோ, ஒலிம்பிக் விளையாட்டிலோ இன்னமும் சேர்க்கப் படவில்லை. "இருபது நாடுகள் பிரதிநிதித்துவம் இருந்தால்தான் ஆசிய விளையாட்டில் கேரம் இடம்பெறும். இன்னமும் ஒன்றிரண்டு ஆண்டுகளில் அது நடக்கும். அப்போது தமிழக வீரர்கள் வெற்றி உலா வருவார்கள்" என்று உறுதியுடன் சொல்கிறார் ஆனந்தன்.

— ப்ரியன்

படங்கள் : **ராஜன்**

எல்லோரும் சிரிக்கலாம்





பரிசு ரூ. 100/-

"எங்கப்பாவுக்குப் பால் வியாபாரம் கை கொடுக்காததால், பள்ளிக்கூடம் ஆரம்பிக்கலாம்னு முடிவு பண்ணிட்டார்..."

"மறுபடியும் கறக்கற தொழில்தானா?"

- ஜி.கே.எஸ். மூர்த்தி, கோபி செட்டிபாளையம்

பரிசு ரூ. 50/-


"காலமே மாறிப் போச்சுடி! அந்தக் காலத்துல எலிக்காகப் பொறி வைப்பாங்களாம்! இப்ப பொறிக்காக எலி வைக்கிறாங்க!"

"எதை வச்சு சொல்றே?"


"கணிப்'பொறி'க்காக 'மவுஸ்' வைக்கிறாங்களே!"

- திருநெல்வேலி எஸ். கவிதா

பரிசு ரூ. 25/-



வாங்க!



பரிசு ரூ. 15/-

"உன் பெயர் சிங்காரம்தானே... பின் ஏன் யார் கேட்டாலும் 'சிங்'னு மட்டும் சொல்றே?"

"டாக்டர்தான், உன்கிட்டே 'காரம்'ன்ற பேச்சே கூடாதுன்னு சொல்லிட்டாரு!"

- அரவக்குறிச்சிப்பட்டி மனோஜ்குமார்

பரிசு ரூ. 15/-

"ராமு... உன்னுடைய சைக்கிள் காணாமல் போயிடுச்சி."

"நல்ல காலம் டாடி. அந்த நேரம் நான் அந்த சைக்கிள்ல போகாம இருந்தேன், போயிருந்தேன்னா நானும் சேர்ந்து காணாம போயிருப்பேன்!"

- விட்டுக்கட்டி மு. பெரியசாமி





கண்கவர் மண் பொம்மைகள்!

பொம்மைகளில் மண் பொம்மைகள், மர பொம்மைகள், துணி பொம்மைகள், கண்ணாடி பொம்மைகள், பிளாஸ்டிக் பொம்மைகள் எனப் பல வகை பொம்மைகள் உள்ளன.

அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரை மண் பொம்மைகள் நம்மோடு இருந்து வருகின்றன.

நகரத்துக் குழந்தைகளுக்குக் களிமண்ணை வைத்து விளையாடக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்திருக்காது. ஆனால் கிராமப்புறங்களில் வசிப்பவர்களுக்கு இத்தகைய அருமையான சந்தர்ப்பம் நிச்சயம் கிடைத்திருக்கும்.

சின்ன வயதிலேயே நம் கற்பனை வளத்தை அதிகரிப்பதில் களிமண்ணுக்கு முக்கியப் பங்கு இருக்கிறது. ஒவ்வொருவரும் அவரவர் விருப்பம், கற்பனைக்கு ஏற்றவாறு களி மண்ணால் பொம்மை செய்து மகிழ்வார்கள். ஒருமுறை சரியாக வராவிட்டாலும் திரும்பத் திரும்ப மாற்றி, நாம் நினைக்கும் உருவத்தைக் கொண்டு வந்துவிடலாம் களிமண்ணில்.

களிமண்ணில் பொம்மை செய்வதால் கைக்கும், விரல்களுக்கும் நல்ல பயிற்சி ஏற்படுகிறது. கற்பனை வளம் பெருகுகிறது. மனதை ஒரு முகப்படுத்தி செயல்பட வைக்கிறது.

களிமண் கிடைக்காத இடங்களில் சைனா க்ளே என்னும் சீன களிமண் கடைகளில் கிடைக்கிறது. இதை வைத்து உருவங்களைச் செய்து பயிற்சி பெறலாம். விரைவில் காயாது. சைனா களிமண் வாங்க முடியாதவர்கள் மைதா மாவைப் பிசைந்து பொம்மை செய்யப் பயன்படுத்தலாம். மைதா மாவில் செய்யப்படும் பொம்மைகளைப் பயிற்சிக்கு மட்டுமே பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஓரளவு பயிற்சி பெற்ற பின்பு களிமண்ணை நன்கு பிசைந்து முதலில் சிறு, சிறு உருவங்களைச் செய்து பழக வேண்டும். சிறிய குச்சியைக் கொண்டு கண், காது, தலை போன்றவற்றிற்கு டிசைன் செய்யலாம். பொம்மை செய்து முடித்த பின் நிழலில் காய வைக்க வேண்டும். மறு நாள் சிறிது தண்ணீர் எடுத்து பொம்மை மேல் தெளித்து கையால் சீராகத் தேய்த்து விட வேண்டும். பொம்மை நன்கு காய்ந்ததும் உருவத்துக்கு ஏற்ற வண்ணத்தைப் பூச வேண்டும். வண்ணம் காய்ந்ததும் சாதாரண களிமண் பொம்மை கண்கவர் வண்ண பொம்மையாகக் காட்சியளிக்கும். செய்து பாருங்கள்.



அட்டையில் : **ஸ்வாதி**

வண்ணப்படம் : **ஸ்ரீஹரி**



நிலாவும் கிழவியும்

நாச்சியார் ஓர் ஏழை கூனல் கிழவி. அவள் தன் ஓலைக் குடிசை வாசலில் தினமும் ராட்டையில் தறி நூல் சுற்றுவாள். அதைத் தறி நெய்கிற சோமனுக்குக் கொடுத்து கூலிக்காசை வாங்கிக் கஞ்சி காய்ச்சி ஜீவனம் செய்து வந்தாள்.

தினமும் அந்தி மாலை நேரம் தன் வீட்டு வாசலைப் பெருக்கிச் சுத்தம் செய்வாள். அப்பொழுது வானம் இருட்டி நிலா உதயமாகிவிடும்.

நிலாவுக்கு நீண்ட நாட்களாக ஓர் ஆசை. கிழவியின் கூனல் முதுகைத் தொட்டு விளையாட வேண்டும் என்று.

ஒரு நாள் கிழவி வாசலைப் பெருக்கும் போது நிலா கீழே இறங்கி வந்தது. யாரோ தன் முதுகைத் தொடுவது போல கிழவி உணர்ந்தாள். "யாரது முதுகைத் தொடறது?" என்று கேட்டாள். பதில் இல்லை. மறுபடியும் முதுகை யாரோ தொடுவது போல் உணர்ந்தாள். உடனே கிழவிக்கு மூக்குக்கு மேல் பொத்துக் கொண்டு கோபம் வந்து விட்டது. கோபத்தில் தான் செய்வதை அறியாமல், கையில் வைத்திருந்த பெருக்கு மாற்றால் முதுக்கு மேல் இரண்டு அடி கொடுத்தாள்.

அடி வாங்கிய நிலாவுக்குக் கோபம் வந்தது. விளையாட்டுக்கு முதுகைத் தொட்டதுக்குக் கிழவி அடிச்சிட்டாளே என்று வருந்தியது.

அவளைப் பழிவாங்கத் துடித்தது. உடனே கிழவியையும் அவள் ராட்டையையும் தூக்கிக் கொண்டு விண்ணை நோக்கிச் சென்றது.

தன் இடத்தை அடைந்ததும் நிலாவின் கோபம் தணிந்தது. தன் வேலையே கருமமாக வாழ்ந்த கிழவியை விளையாட்டாகத் தொட்ட தன் தவறை எண்ணி வருந்தியது நிலா.

நிலா தன் தவறுக்குப் பிராயச்சித்தமாகக் கிழவியையும் ராட்டையையும் தன்னுடனே பத்திரமாக வைத்துக் கொண்டது.

இன்று பார்த்தால் கூட கிழவி நிலாவில் ராட்டை சுற்றுவது தெரியும்.

— எஸ்.எஸ். மணியம்

ஜாம்பவான் – கண்ணன் யுத்தம்!

சத்திராஜித் என்ற அரசன் தவமிருந்து சூரிய பகவானிடம் சியமந்தகமணி எனும் ரத்தினத்தைப் பெற்றான். அது ஒவ்வொரு நாளும் தேவைக்கு ஏற்ப பொன் தரக் கூடியது.

சத்திராஜித் அந்தப் பிரகாசமான ரத்தினத்தை ஹாரத்தில் பதித்து அணிந்துகொண்டு கண்ணனைப் பார்க்க வந்தபின் சூரியனே வருவது போல இருந்தது. கிருஷ்ணர், சத்திராஜித்தை நோக்கி, "இத்தகைய அபூர்வ ரத்தினம், அதனைப் பாதுகாக்கும் வல்லமை பெற்றவரிடம்தான் இருக்க வேண்டும்; எனவே இதை உத்திரசேனரிடம் தந்துவிடு" என்று கூறினார். சத்திராஜித் மறுத்துவிட்டான். கண்ணனும் வற்புறுத்தாமல் விட்டுவிட்டார்.



ஒருநாள் சத்திராஜித்தின் தம்பி பிரசேனன் அந்த ஹாரத்தை அணிந்து வேட்டைக்குச் சென்றான். அடர்ந்த காட்டில் ஒரு சிங்கம் அவனையும் அவன் ஏறி வந்த குதிரையையும் கொன்று விட்டது. அதே காட்டில் வசித்து வந்த ஜாம்பவான் (கரடி உருவத்தினர்) ஹாரத்தை எடுத்துக்கொண்டு போய் தம் குகையில் குழந்தையின் தொட்டிலுக்கு மேல் கட்டி விட்டார். இந்த ஜாம்பவான்தான் ராமர், சீதையைத் தேடி அலைந்தபோது அவருக்குப் பெரிதும் உதவியவர்.

பிரசேனன் திரும்பி வராததைக் கண்ட சத்திராஜித், ஏற்கெனவே சியமந்தகமணியைக் கண்ணன் கேட்டதை நினைவு கூர்ந்தான். உடனே, கிருஷ்ணர்தான் தன் தம்பியைக் கொன்று ஹாரத்தை அபகரித்துவிட்டார் என்று நம்பி அதையே பலரிடமும் கூறினான். இந்த விஷயம் கண்ணன் காதுகளுக்கும் எட்டியது.

தம் மீது அவதூறு சுமத்தப்படுவதை விரும்பாத கிருஷ்ணர், உண்மையை உலகுக்கு உணர்த்த, யாதவ வீரர்களுடன் காட்டுக்குப் போனார். பிரசேனன் கொல்லப்பட்டிருப்பதையும் அங்கிருந்து காலடிச் சுவடுகள் செல்வதையும் பார்த்து, தொடர்ந்து போய், ஜாம்பவானின் குகையை அடைந்தார். யாதவ வீரர்களை வெளியே நிறுத்தி, தாம் மட்டுமே குகைக்குள் நுழைந்தார்.

ஜாம்பவானிடம், சியமந்தகமணியைப் பெற்றுச் செல்ல வந்ததாகக் கூறினார் கிருஷ்ணர். "என்னை வென்று எடுத்துப் போ" என்றார் ஜாம்பவான். தொடர்ந்து இருபத்தேழு நாட்கள் இருவருக்கும் இடையே யுத்தம் நடந்தது. ஜாம்பவான் களைத்துப் போனார். "நீ யார்? என்னை ஸ்ரீ ராம்பிரானைத் தவிர வேறு யாராலும் வெல்ல முடியாதே?" என்று கேட்டார்.

ஸ்ரீ கிருஷ்ணர் அவருக்கு ராமனாகவும் கிருஷ்ணனாகவும் மாறி மாறி காட்சி அளித்தார்! "ராமகிருஷ்ணா! ராமகிருஷ்ணா!" என்று பக்தியுடன் கூவி வணங்கினார் ஜாம்பவான். சியமந்தகமணியைத் தந்து, தமது மகள் ஜாம்பவதியையும் கண்ணனுக்கு மணமுடித்து வைத்தார்.

கண்ணன் துவாரகை திரும்பி, சத்திராஜித்தை வரவழைத்து, சியமந்தகமணியை அவனிடம் தந்தார். சத்திராஜித் தன் தவறுக்குப் பிராயச்சித்தமாக பேரழகியான தன் மகள் சத்தியபாமாவை கண்ணனுக்கு மனைவியாக்கி சியமந்தகமணியைச் சீதனமாகவும் கொடுத்தான். கண்ணன் சத்தியபாமாவை ஏற்ற போதிலும் "சியமந்தக மணிக்கு நீ ஆசைப்பட்டாய்; அது உன்னிடமே உன் ஆயுட்காலத்துக்கு இருக்கட்டும்" என்று கூறிவிட்டார்.

அந்த சியமந்தகமணியால் சத்திராஜித்துக்கு மேலும் துன்பமே ஏற்பட்டது. அந்தக் கதையை அப்புறம் பார்க்கலாம். இப்போதைக்குக் கண்ணன் கூறிய அறிவுரையை மறுபடி நினைத்துப் பார்ப்போம்: ஒரு பொருளை வைத்திருக்க ஒருவனுக்குத் தகுதி வேண்டும். தகுதி இல்லாதவன் பெற்றால் அதனால் துன்பம்தான் ஏற்படும். இதனால்தான் 'தகுதி அறிந்து தானம் செய்' என்று நம் முன்னோர்களும் சொன்னார்கள்.

- ஆசிரியர்

ஏழுமலைக்கு வயது ஏறிற்றே ஒழிய படிப்பு வரவில்லை. பெற்றோரைப் பறி கொடுத்த அவனை அதிகம் கண்டிக்கவும் பாட்டியின் மனம் இடம் கொடுக்கவில்லை!

ஒருநாள் பாட்டியின் உறவில் ஒருத்தி அவளைப் பார்க்க வந்தவள் ''வேலைக் காவது அனுப்பு. இல்லாவிடில் ஒன்றுக்கும் உதவாமல் போய் விடுவான்'' என்று எச்சரித்தாள்.

பாட்டி மறுநாள் ஏழுமலையிடம் ''எந்த வேலை கிடைத்தாலும் செய்து அனுபவம் பெற்று வா. சாயங்காலம்தான் வீட்டுக்குள் வரலாம்'' என்று கதவைச் சார்த்தி தாளிட்டுக் கொண்டாள்.

ஏழுமலைக்குப் பத்து வயது. 'என்ன வேலை செய்வது? எங்கு சென்று வேலை கேட்பது?' என்று குழம்பியபடி நடந்தான். கால் போனபடி நடந்தவன் அடுத்த கிராமத்து சந்தையில் நிற்பதை ஜனங்களின் பேச்சரவங்களினால் உணர்ந்தான்.

''திடீருன்னு கை சுளுக்கிடுச்சு. நீட்டி காசு வாங்கி சில்லறை கொடுக்க முடியலே. இன்னைக்கு ஒரு நாளைக்கு மட்டும் உதவி செய்ய நல்ல ஆளா இருந்தா சொல்லேன். சந்தையன்னிக்குக் கடையை மூடினா நல்ல வருமானம் போயிடும்'' என்றார் ஒருவர்.



துண்டில் நெய்யை முடிந்த ஏழுமலை!

இதைக் கேட்ட ஏழுமலை சுறுசுறுப்பானான். ஓடிப்போய் பேசியவர் முன் நின்றான்.

''ஐயா! என் பேர் ஏழுமலை. பூங்குடி கிராமத்துலே கங்கா பாட்டியுடைய பேரன். வேலை தேடித்தான் வந்தேன். என்னை நம்பி அந்த வேலையைத் தாங்க'' என்று பணிவோடு கேட்டான்.

இருவரும் அவனை ஏற இறங்கப் பார்த்தனர்.

''புது ஆளை நம்ப முடியாது. அசந்த நேரம் இருக்கிறதைச் சுருட்டிட்டு ஓடிடுவான்'' என்றார் ஒருவர்.

''நான் அப்படிப்பட்ட ஆளில்லைய்யா'' என்று கெஞ்சினான் ஏழுமலை.

''இருக்கட்டும், சுந்தரம். நான் ஏமாறும் ஆளில்லே! ஒத்தாசைக்கு ஆள் வேணுங்கற கட்டாயம். நான் வரேன். வா, தம்பி'' என்று இன்னொருவர் முன் நடக்க மகிழ்ச்சியோடு பின் தொடர்ந்தான் ஏழுமலை.

மாலதி

கூப்பிடு தூரத்தில்தான் கடை இருந்தது. சிறிய மளிகைக்கடை. கூட்டம் அலை மோதியது. செட்டியார் விலை சொன்னார். காசை வாங்கிக் கல்லாவில் போட்டு மீதிப் பணம் கொடுக்கிற வேலை மட்டும்தான். பொட்டலம் கட்ட ஒரு பையன் இருந்தான். இருட்டியது. செட்டியார் சந்தோஷத்துடன் ''சுறுசுறுப்பா வேலை செஞ்சே தம்பி. இந்தா'' என்று ஒரு ஐந்து ரூபாய் நாணயத்தைக் கொடுத்தார். அதைப் பெற்றுக் கொண்டு ஓட்டமும் நடையுமாகத் தன் கிராமத்துக்குப் புறப்பட்டான்.

பாட்டியிடம் தன் அனுபவங்களைச் சொல்ல வேண்டும் என்ற ஆசை. பணத்தைப் பார்த்தவுடன் பாட்டியின் முகம் எப்படி மலரும் என்ற கற்பனை! கீழே கிடந்த வாழைப் பழத் தோலை கவனிக்காமல் கால் வைத்ததின் விளைவு! 'அம்மா' என்றலறியபடி மல்லாக்க விழுந்தான். விழுந்த வேகத்தில் கையிலிருந்த காசு எங்கே உருண்டது என்று தெரியவில்லை! தேடி அலுத்து உடலில் சிராய்ப்புகளோடு வீடு வந்து சேர்ந்தான்.

பாட்டியிடம் அழுது கொண்டே நடந்தவற்றைச் சொன்னான். ''போனால் போகிறது! விடு. நீ ஒழுங்கா வேலை செய்து சம்பாதிச்சுக் கொண்டு வந்தேன் என்கிற வார்த்தையே மனதில் தேனாய் இனிக்கிறது. நாளைக்கு வேலைக்குப் போகிற இடத்திலே கொடுக்கிறதைப் பத்திரமா துண்டிலே முடிஞ்சுட்டு வா'' என்று காயத்தைத் துடைத்து மருந்து போட்டாள் பாட்டி.

மறுநாள் உற்சாகமாய் எந்த ஊரில் சந்தை நடக்கிறதென்று விசாரித்துக் கொண்டு புறப்பட்டான் ஏழுமலை. அவனுக்கு அன்றைக்கு ஒரு நெய்க் கடையில் வேலை கிடைத்தது. வேலை முடிந்து முதலாளி அரைக்கிலோ நெய்யை ஊதியமாகக் கொடுத்தார்.

அதைத் துண்டிலே கொட்டி, கட்டிக் கொண்டு புறப்பட்டான் ஏழுமலை. பார்ப்பவர்கள் கேலி செய்து சிரித்தனர். நல்ல மனம் கொண்டவர்கள் அறிவுரை கூறினர். ஏழுமலை எதற்கும் செவி சாய்க்கவில்லை!

கை, தோள், உடம்பு பூராவும் நெய் வழிய வந்து நின்ற பேரனைப் பார்த்து பாட்டிக்கு எரிச்சலாய் இருந்தது.

''நீ சரியான முட்டாள்'' என்று பாட்டி திட்ட,

''போ, பாட்டி! நீ ஏன் சொல்ல மாட்டே! நேற்றைக்கு நீதானே கொடுக்கிறதைப் பத்திரமா துண்டிலே முடிஞ்சிட்டு வரச் சொன்னே! எத்தனையோ பேர் ஜாடி வாங்கி எடுத்துட்டுப் போகச் சொன்னாங்க! நான்



கேட்கலையே! உன் பேச்சை நான் எப்பவுமே மீற மாட்டேன்'' என்று பெருமையோடு சொன்னான் ஏழுமலை. பாட்டிக்கு அழுவதா, சிரிப்பதா என்றே தெரியவில்லை! ஏழுமலையைச் சீயக்காய் தேய்த்துக் குளிக்கச் செய்தாள்.

பிறகு இதமாக ''நெய் மாதிரி சாமான்களை ஜாடியிலே போட்டுதான் எடுத்துட்டு வரணும். நாளைக்கு அந்த மாதிரி செய்யறியா?'' என்று கேட்டாள்.

ஏழுமலை தலை அசைத்தான்.

அடுத்தநாள் நெய்க்கடையில் வேலை இல்லை! கோழிகள் விற்பவருக்கு ஒத்தாசையாக இருந்தான். அவர் மாலையில் கோழிகள் விற்று முடிந்ததும் மீதமிருந்த ஒரு கோழியை அவனுக்கு ஊதியமாகக் கொடுத்தார்.

ஏழுமலை ஒரு ஜாடி வாங்கி அதில் கோழியைப் போட்டு அமுக்கி மூட முயற்சிப்பதைக் கண்டு பலரும் ஏளனம் செய்தனர். சிலர் புத்தியும் கூறினர். ஏழுமலை எதையும் காதில் வாங்காமல் கஷ்டப்பட்டு மூடி எடுத்து வருகையில் வழியில் கோழி மூடியைத் தள்ளிக் கொண்டு அவனைக் கொத்தி விட்டு ஓடி விட்டது. விரட்டி வெகு தூரம் ஏழுமலை அலைந்ததுதான் மிச்சம்!

நடந்ததைக் கேட்டறிந்த பாட்டி தலையில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்துவிட்டாள். பிறகு மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டு 'அனுபவம் இல்லை' என்று சொல்லிக் கொண்டாள்.

''கோழியோட காலைப் பிடிச்சு தலை கீழாத் தூக்கிட்டு வரணும்; உயிர் பிராணிகளை ஜாடியிலே அடைக்கக் கூடாது'' என்று நயமாகப் புத்தி சொன்னாள் பாட்டி.



மறுநாள் ஏழுமலைக்குப் பெரிய ஆட்டுப் பண்ணையில் வேலை கிடைத்தது. புழுக்கை அள்ளி சுத்தம் செய்து ஆடுகளைக் குளிப்பாட்டி இருட்டும் வரை வேலை நிமிர விடவில்லை. பண்ணையின் சொந்தக்காரர் அவனுக்கு ஒரு ஆட்டையே பரிசாக அளித்தார்.

ஆட்டின் கால்களைப் பிடித்துத் தலைகீழாகத் தொங்கவிட்டுக் கொண்டு நடந்தான் ஏழுமலை. ஆடு திமிறியது. ''ஆட்டைக் கழுத்திலே கயிறு சுற்றிக் கட்டிக் கொண்டு போகணும்'' என்று பலரும் கூற சட்டை செய்யாமல் சென்றான் ஏழுமலை!

சரசரவென்று பாம்பொன்று நெளிய, பயந்த ஏழுமலை ஆட்டை விட்டு விட்டான். ஆடு செத்தேன், பிழைத்தேன் என்று இருட்டில் ஓடிவிட்டது. அன்றைக்கும் வெறுங்கை யோடு வந்த பேரனைப்



''வகுப்பில எந்தக் கேள்வி கேட்டாலும் தெரியாது, தெரியாதுன்னு சொல்ற உங்க பையன் இன்னிக்கித்தான் ஒரு கேள்விக்கு சரியான பதில் சொன்னான்.''

''என்ன கேள்வி கேட்டீங்க?''

''குயிலுக்குக் கூடு கட்டத் தெரியுமான்னு கேட்டேன்...!''

- மு. பெரியசாமி

பார்த்து பாட்டிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை!

இடுப்பொடிய வேலை பார்த்துவிட்டு கொடுத்ததைத் தொலைத்துவிட்டு வந்திருக்கிறானே என்று ஆதங்கமாயிருந்தது.

''கழுத்திலே ஒரு கயிற்றைக் கட்டி சமர்த்துப் பிள்ளையானா இழுத்து வந்திருக்கும்'' என்று புலம்பினாள்.

அடுத்த நாள் ஏழுமலை வேலை செய்த இடம் ஒரு மிட்டாய் கடை. சந்தையில் சுறுசுறுப்பாக வியாபாரம் செய்ததற்காக முதலாளி மகிழ்ச்சியுடன் ஒரு கண்ணாடி பாட்டில் நிறைய மிட்டாய்களைப் போட்டுத் தந்தார்.

ஏழும்லை ஞாபகமாக கயிறு கொண்டு வந்திருந்தான். அதை பாட்டிலின் கழுத்தில் கட்டி இழுத்துக் கொண்டு போனதை எல்லோரும் வேடிக்கை பார்த்தனர். பாட்டில் சீக்கிரமே கல்லில் மோதி உடைந்து மிட்டாய்கள் சிதறின.

''பாட்டி! நீ சொன்னியேன்னு கயிறு கட்டி இழுத்து வந்தேன். மூடிதான் மிச்சம்'' என்ற ஏழுமலையைப் பார்த்து இந்த உலகத்தில் இவன் எப்படி பிழைக்கப் போகிறான் என்று பாட்டி கவலைப்பட்டாள்.

''ஆடு, மாடுகளைத்தான் கயிறு கட்டி இழுத்து வரலாம். கண்ணாடி பாட்டிலை தலையில் வைத்து இரண்டு கைகளாலும் பிடிச்சுக்கிட்டு வரணும். கையிலே கொண்டு வந்தாக்கூட நழுவி உடைஞ்சிடலாம்'' என்று பக்குவமாகச் சொல்லி அனுப்பினாள்.

அன்றைக்கு ஏழுமலை வேலை செய்த இடம் வெண்ணெய்க் கடை. ஊரில் திருவிழா ஆனதால் வெண்ணெய் அமோகமாக விற்றது. மதியமே வெண்ணெய் தீர்ந்துவிட்டது. கடைக்காரர் மகிழ்ச்சியோடு ஒரு பெரிய பந்தளவு வெண்ணெய்யை வாழை இலையில் சுற்றிக் கொடுத்தார்.

அதைத் துணியில் சுற்றி தன் தலையில் வைத்துக் கொண்டு ஏழுமலை ஊருக்குச் சென்றான். கொளுத்தும் வெயிலில் வெண்ணை உருகி நெற்றி, கண், மூக்கு, வாய், கன்னம், மார்பு, முதுகு என்று வாய்க்காலாக ஓடியது.

ஜமீந்தாரின் ஏழு வயது மகள் தேன்மொழி இதைப் பார்த்து குலுங்கக் குலுங்கச் சிரித்தாள். மகளுக்குத் திருவிழாவைக் காண்பிக்க கூடவே வந்த ஜமீந்தார் இதைக் கண்டு பூரித்தார். பின்னே? பேச முடியாதவள் சத்தமாகச் சிரித்தால் சந்தோஷப்பட மாட்டாரா?

''எதுக்கும்மா சிரிக்கறே?'' என்று கேட்டார் பண்ணையார்


''பாருங்கப்பா அந்த மட்டியை! வெண்ணெய்யை யாராவது வெயில்லே தலையிலே வைச்சுட்டுப் போவாங்களா?'' என்று கேட்டாள்.

''அம்மா! அவன் மட்டியாயிருக்கலாம்! ஆனால் உன்னைப் பேச வச்சவன். உங்கம்மா இறந்த அதிர்ச்சியிலே உனக்குப் பேச்சு வரலே! நானும் பார்க்காத மருத்துவர் இல்லே! போகாத கோயில் இல்லே! நீராடாத தீர்த்தம் இல்லே! இவன் பண்ணின கோமாளித்தனத்தாலே உன் அதிர்ச்சி நீங்கி பேசிட்டே'' என்று குரல் தழுதழுக்கச் சொன்னார் ஜமீன்தார்.

அதேசமயம் பேரன் பண்ணுகிற கூத்தைத் திருவிழா கண்டு திரும்பியவர்கள் சொல்ல, பாட்டி விரைந்து வந்து கொண்டிருந்தவள் ஜமீன்தாரின் பேச்சைக் கேட்டாள். தான் அவனது பாட்டி என்று அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

ஜமீன்தார் ஏழுமலையின் பாட்டிக்கு ஏராளமான பொருளும், பயிரிட நிலமும், குடியிருக்க வீடும் கொடுத்தார். பெரியவர்கள் வார்த்தையை மீறக்கூடாது என்ற கொள்கையும், உண்மையான உழைப்பும் ஏழுமலையை உன்னத நிலைக்கு உயர்த்தின.

குறுக்கெழுத்துப் புதிர்



இடமிருந்து வலம்

1. ராமர் ஒடித்த வில்லின் பெயர் (5)

5. நான்கு புறமும் இது இருந்தால்தான் வீடு உருவாகும் (3)

7. பச்சையம் இல்லாத தாவரம் (3)

9. காக்கைக்கு இது கடூரம்; குயிலுக்கு இது இனிமை (3)

வலமிருந்து இடம்

2. காந்தியடிகள் ________ உண்ண மாட்டேன் என்று சத்தியம் செய்தார் (3)

4. நன்றாகப் படித்து, நேர்மையாக உழைத்தால் ________யும் பட்டமும் தேடி வரும் (3).

6. கோபம் (3)

10. கணவாய் மீனை இப்படியும் அழைக்கலாம் (5)


மேலிருந்து கீழ்

1. ________ பெரு வெள்ளம் (4)

2. இவரின் இயற்பெயர் சித்தார்த்தன் (4)

6. பிரச்னை ______________ ஆகி விடும்போது மிகவும் கஷ்டமாகி விடுகிறது (4).

7. ஜாமெட்ரி பாக்ஸில் இது இருக்கும். இதைக் கொண்டு வட்டம் போடலாம் (4)



கீழிருந்து மேல்

3. அர்ஜுனன் இந்த வித்தையில் சிறந்தவன் (2)

4. வாண வேடிக்கை (4)

5. நவராத்திரியின்போது பருப்பு, தானியங்களைக் கொண்டு இது செய்வார்கள் (4)

8. விமானம் ______ வழி போக்குவரத்துக்குப் பயன்படுகிறது (2)

9. ________ பார்த்தால் சுற்றம் இல்லை (4)

10. பெருங்கடல்களில் ஒன்று (4)


- ஜி.எஸ். கார்த்திக், எட்டாம் வகுப்பு,
வைரவிழா மே.நி.பள்ளி,
கோபிசெட்டிபாளையம்

விடை : 64ஆம் பக்கம்

உயர் பண்பு!

ஒருமுறை ஆபிரகாம் லிங்கன் சென்று கொண்டிருந்த வழியில் கட்டட வேலை நடந்து கொண்டிருந்தது. கட்டடத்தின் மேல் பகுதிக்கு ஒரு பெரிய கட்டையை ஏற்ற வேண்டியிருந்தது. அங்கிருந்த மேலாளர் அவருக்குக் கீழே வேலை செய்த ஒன்பது பேரையும் கத்தி, சத்தம் போட்டு, அக்கட்டையை மேலே ஏற்றுமாறு ஆணை பிறப்பித்துக் கொண்டிருந்தார். அந்த ஒன்பது பேரும் எவ்வளவோ முயன்றும் அக்கட்டையைக் கட்டடத்தின் மேல் பகுதிக்குக் கொண்டு செல்ல முடியவில்லை.

காலையிலேயே மாலை வந்துவிட்டதே!


• ஐன்ஸ்டீன்


• ராஜேந்திர பிரசாத்

லிங்கன் இதைப் பார்த்தார். இன்னும் ஒருவர் உதவி செய்தால் அக்கட்டை கட்டடத்தின் மேல் பகுதியைச் சென்றடைந்து விடும் என்று தெரிந்து கொண்டார். அந்த மேலாளர் உதவுவதாகத் தெரியவில்லை. எனவே, லிங்கன் அங்கு சென்று ஒன்பது பேருடன் பத்தாவது ஆளாகச் சேர்ந்து கொண்டு, கட்டையை மேல்பகுதிக்குக் கொண்டு சேர்த்தார். அங்கிருந்தவர்கள் அவருக்கு நன்றி கூறி, அவர் யார் எனக் கேட்டனர். லிங்கன் அவர்களிடம் "ஏதேனும் உதவி தேவை என்றால் குடியரசு மாளிகைக்குச் சொல்லி அனுப்புங்கள். நான் இந்நாட்டின் குடியரசுத் தலைவர்" என்றார்.

— மு. பெரியசாமி, விட்டுக்கட்டி.

சிரிப்பு....

விஞ்ஞானி ஐன்ஸ்டீன் ஒரு 'ஹாபி' யாக வயலின் வாசிப்பார். ஒருநாள் அவர் வயலினை இசைத்துக் கொண்டிருந்தபோது ஹங்கேரி நாட்டைச் சேர்ந்த புகழ் பெற்ற நகைச்சுவை நடிகர் மோல்நார் வந்தார். வயலின் இசையைக் கேட்டு இடையிடையே சிரித்தார். அவரிடம், "நான் வயலின் வாசிக்கும்போது சிரிக்கிறீரே. நீங்கள் நகைச்சுவை வேடத்தில் நடிப்பதைப் பார்த்து நான் எப்போதாவது சிரித்திருக்கிறேனா?" என்று கேட்டார் ஐன்ஸ்டீன்.

- அ. பேச்சியப்பன், ராஜபாளையம்.

ரயில் பயணம்

ஜி.டி. நாயுடுவுக்கு நிறைய புத்தகங்கள் படிக்கும் ஆர்வம் இருந்தது. படிக்க வேண்டிய புத்தகங்கள் அதிகமாகி விட்டால் அவற்றைப் படித்து முடிப்பதற்கென்றே ரயில் பிரயாணம் செய்வார். முதல் வகுப்பில் கோயம்புத்தூரிலிருந்து புறப்பட்டால் அந்த ரயில் வண்டி போகும் கடைசி ஸ்டேஷன் வரை பிரயாணம் செய்வார். "ரயில் பிரயாணத்தினால் பிறருடைய தொல்லைகளின்றி நிறையப் புத்தகங்களைப் படிக்க முடிகிறது" என்பார். படிப்பில் ஆர்வம் கொண்ட ஜி.டி. நாயுடு விஞ்ஞானம், பொறியியல் துறைகளைப்

பற்றிய 18000 புத்தகங்களும், உளநூல் தொடர்புடைய 3000 நூல்களும் படித்து விட்டு நூலகத்தில் வைத்திருந்தார்.

- சு. கண்ணகி, மிட்டூர்.

காலை... மாலை...

கலைமகள் ஆசிரியர் – எழுத்தாளர் கி.வா.ஜ. அவர்கள் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள ரயிலில் சென்றார். காலையில் அந்த இடத்தை அடைந்ததும், அவரை அனைவரும் மாலை அணிவித்து வரவேற்றனர். அப்போது கி.வா.ஜ. அவர்கள் "காலையிலேயே மாலையும் வந்து விட்டதே" என்றார். அவரது சிலேடையைக் கேட்ட அனைவரும் சிரித்து மகிழ்ந்தனர்.

- பெ. நடராசன், பத்தாம் வகுப்பு
ஸ்ரீ சேதுமாணிக்கம் உயர்நிலைப் பள்ளி, மேலச்சீத்தை.

மாணவன் ஒருவன் இருந்தான். அவனும் கேள்வித் தாளைப் பார்த்து விழித்துக் கொண்டு இருந்தான். 'கேள்விகள் இவ்வளவு கடினமாக இருக்கின்றதே, எப்படி பதில் எழுதுவது?' என்று எண்ணி விழிக்கவில்லை. எட்டுக் கேள்விகளில் எந்த நான்கிற்கு விடை எழுதுவது? என்றுதான் விழித்தான்.

சிறிது நேர யோசனைக்குப் பிறகு கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தான். எட்டுக் கேள்விகளுக்கும் விடை எழுதி விட்டான். விடைகளின் அடியிலே ஒரு குறிப்பையும் எழுதி வைத்தான்.

பரீட்சை அதிகாரி அவர்களே, எட்டுக் கேள்விகளுக்கும் விடை எழுதிவிட்டேன். ஏதேனும் நான்கு விடைகளுக்கு 'மார்க்' போட்டால் போதும் என்று எழுதியிருந்தான்.

பரீட்சை அதிகாரி, அவனது விடைகளைப் படித்துப் பார்த்தார். குறிப்பையும் படித்துப் பார்த்தார். அவருக்கு ஒரே திகைப்பாக இருந்தது. எழுதியிருந்த எட்டு விடைகளுமே சரியாக இருந்ததால் எந்த நான்கு விடைகளுக்கு மார்க் போடுவது என்று அவருக்குப் புரியவில்லை!

ஆசிரியரையே திகைக்க வைத்தவன், பின்னாளில் வக்கீலாகி, அந்தத் தொழிலையும் உதறித்தள்ளிவிட்டு தேச விடுதலைக் காகப் பாடுபட்டான். காந்திஜியின் முக்கிய சீடராகவும், நம் பாரத நாட்டின் முதல் ஜனாதிபதியாகவும் ஆன 'பாபு ராஜேந்திர பிரசாத்' தான் அந்த மாணவன்!

- ஏ.எஸ். யோகானந்தம்.


• கி.வா.ஜ.


• ஜி.டி.நாயுடு


• ஆபிரகாம் லிங்கன்

கேள்வி - பதில்

பள்ளியில் பரீட்சை நடந்து கொண்டிருந்தது. கேள்வித்தாளில் மொத்தம் எட்டுக் கேள்விகள் இருந்தன. அவற்றில் நான்கு கேள்விகளுக்கு மட்டும் விடை எழுதினால் போதும் என்று கூறப்பட்டிருந்தது. ஆனால் எட்டுக் கேள்விகளுமே கடினமாக இருந்தன. கேள்வித் தாளைப் பார்த்த மாணவர்கள் அனைவரும் எதிர் பார்த்த கேள்விகள் ஒன்று கூட வரவில்லையே என்ன செய்வது என்று திகைத்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்களில் மிகவும் கெட்டிக்கார

விடுகதைப் பக்கம்

I 1. ஒலி கொடுத்து அழைப்பான்; உரையாடலில் திளைப்பான் - அவன் யார்?

2. விபத்தில்லாமல் வெடிப்பான். காற்றில் சிதறி பறப்பான் — அவன் யார்?

3. ஓட்டுக்குள்ளே



ஓட்டுக்குள்ளே வீடு, வீட்டுக்குள்ளே யாரு?

வீடு. வீட்டுக்குள்ளே யாரு? - அது என்ன?

- எஸ். இலட்சுமணன், பெரியதச்சூர், திண்டிவனம்.

II 1.அட்டைக்கு ஆயிரம் கண்கள்; முட்டைக்கு மூன்று கண்கள், நான் பெற்ற செல்லத்திற்கு ஒரு கண் - அவை என்ன?

2. குருவிக்கு முழம் வால் - அது என்ன?

3. பூ பூக்கும், காய் காய்க்கும், பழம் பழுப்பதில்லை - அது என்ன?

4. ஓடையிலே ஓடாத நீர், ஆனால் உப்புக் கரிக்கும் நீர்- அது என்ன?

5. வெள்ளைக் காளான் பூத்திருக்கிறது; வேண்டியவர்க்கெல்லாம் காத்திருக்கிறது - அது என்ன?

- த.சங்கர், இராமசமுத்திரம், ஏம்பலம் அஞ்சல், வந்தவாசி வட்டம், திருவண்ணாமலை மாவட்டம்.

III 1. அச்சு இல்லாத சக்கரம்; அழகு தரும் சக்கரம் - அது என்ன சக்கரம்?

2. அரைச் சாண் குள்ளனுக்கு, கால் சாண் தொப்பி - அது என்ன?

3. பள்ளிக்குப் போக மாட்டான்; பாடம் படிக்க மாட்டான்; சரியாகக் கணக்குச் சொல்வான் - அவன் யார்?

4. புரியாத மொழி பேசும்; புவனமெல்லாம் பார்த்து வரும்; பணம் கொடுத்தால் பறந்து வரும் - அது என்ன?

5. மூன்றெழுத்து முனிவரே; முதலெழுத்து அழகரே; மூன்று கோடு முனிவரே; முழி முழிக்கும் அழகரே - அவர் யார்?

6. வேகாத வெயிலில் வெள்ளையன் விளைகிறான் - அவன் யார்?

— எஸ். அமீர்ஜான், பன்னிரெண்டாம் வகுப்பு, அரசினர் மேல்நிலைப்பள்ளி, நல்லூர்

IV 1. ஓங்கி உதைத்தால் ஓடத் தயார் - அவன் யார்?

2. எல்லா நேரமும் கொட்டும், ஆனால் சத்தம் கேட்காது - அது என்ன?

3. தலையில் கிரீடம் உண்டு; அரசனும் அல்ல; தளதளக்கும் மேனியும் உண்டு; பெண் அல்ல; சந்தைக்கு வருவதுண்டு; விரும்புவார் பலரும் உண்டு - அது என்ன?

4. விரலிலே ஒட்டியிருக்கும், தரையிலே முட்டிடும் - அது என்ன?

5. இரவெல்லாம் பூங்காடு; பகலெல்லாம் வெறுங்காடு - அது என்ன?

— ஆர். அம்பிகா, ஒன்பதாம் வகுப்பு, அக்னு எஸ். சுந்தர் மெட்ரிக் பள்ளி, அண்ணாநகர், மதுரை.

V 1. கண்ணீர் விட்டபடியே களத்தில் இறங்குவான் - அவன் யார்?

2. எங்க அக்கா, குள்ள அக்கா தாவி தாவி போறா - அவள் யார்?

3. நீளமான மனிதனுக்கு நிழல் இல்லை - அவன் யார்?

4. ஜான் மச்சான் குனிய வச்சான் - அவன் யார்?

— சி. அனுசுயா, ஒன்பதாம் வகுப்பு, அ.பிரிவு, அரசினர் மேல்நிலைப்பள்ளி, நல்லூர்.

விடைகள்: I 1. டெலிபோன், 2. பருத்திக்காய், 3. ஆமை. II 1. சல்லடை, தேங்காய், ஊசி, 2. கரண்டி, 3.முருங்கை, 4. வியர்வை, 5. சாதம். III 1. வளையல், 2. பேனா, 3. கால்குலேட்டர், 4. தந்தி, 5. அணில், 6. உப்பு IV 1. ஸ்கூட்டர், 2. கண்ணிமை, 3. கத்தரிக்காய், 4. கால் மெட்டி, 5. வானம் V 1. எழுதுகோல், 2. தவளை, 3. சாலை, 4. நெருஞ்சி முள்

புதிர் உலகம்

I விஜயன் நாள் ஒன்றுக்கு 5 சாக்லேட் வாங்கிச் சாப்பிடுவான். 5 காலி உறைகளைக் கடைக்காரரிடம் கொடுத்தால் ஒரு சாக்லெட் இலவசம். இப்படியே ஐந்து நாட்களில் எத்தனை சாக்லெட் வாங்கி இருப்பான்?

- பெ. நடராசன்,
பத்தாம் வகுப்பு,
ஸ்ரீ சேதுமாணிக்கம் உயர்நிலைப் பள்ளி,
மேலச்சீத்தை இராமநாதபுரம்.

II விக்கி, கோவிலருகில் இருந்த குளத்தில் இருந்து சில தாமரை மலர்களைப் பறித்துக் கொண்டு கோவிலுக்குள் சென்றான்.

பறித்து வந்த பூக்களில் மூன்றில் ஒரு பங்கைப் பிள்ளையாருக்கும், ஐந்தில் ஒரு பங்கைச் சிவனுக்கும், ஆறில் ஒரு பங்கை அம்பாளுக்கும் சமர்ப்பித்தான்.

பறித்து வந்த மலர்களில் கால் பங்கை நவக்கிரகங்களுக்கும் சூட்டினான்.

அவ்வளவும் போக அவன் கையிலிருந்தது 6 பூக்கள். அப்படியானால் விக்கி பறித்துச் சென்ற பூக்கள் எத்தனை?

-ஆர். பிரசன்னா, காந்தி கிராமம்.

III ஒரு வீட்டில் மின்துண்டிப்பு ஏற்படுகிறது. அங்கே ஒரு மெழுகு வர்த்தியும், விளக்கும் உள்ளது. முதலில் எதைக் கொளுத்துவர்?

- ஜெ. விக்னேஷ்,
பத்தாம் வகுப்பு,
எஸ்.ஏ.வி. மேல்நிலைப்பள்ளி,
தூத்துக்குடி.

IV என் அப்பா நான் பள்ளி செல்லும்போது முதல் நாள் 1 ரூபாய், மறுநாள் 2 ரூபாய், அடுத்த நாள் 3 ரூபாய்... என தந்து கொண்டிருப்பார். பள்ளியிலிருந்து திரும்பியதும் தினமும் ஒரு ரூபாயைத் திருப்பி தந்து விடுவேன் எனில் நான் 5 நாட்களில் வைத்திருக்கும் பணம் எவ்வளவு?

- ரா. லாவண்யா, ஆறாம் வகுப்பு,
ஸ்ரீசேது மாணிக்கம்
உயர்நிலைப்பள்ளி,
மேலச்சீத்தை.



V இரண்டு தட்டுள்ள தராசில் ஒரு தட்டில் ஒரு கிலோ கனமான இரும்பையும் மற்றொரு தட்டில் ஒரு கிலோ இலேசான பஞ்சையும் வைத்தால் எது அதிக கனமாக இருக்கும்? ஏன்?

-கே.எஸ். குமார், வத்ராப்,
விருதுநகர் மாவட்டம்.

குதிரையைக் காப்பாற்றுவது எப்படி?

VI மன்னர் ரவிவர்மா அமர்நாத்திடம் ஒரு சிவப்புத் துணி போர்த்தப்பட்ட குதிரையைக் கொடுத்தனுப்பி சந்தைக்குப் போய் இரண்டு அரிசி மூட்டைகளை வாங்கி வரச் சொன்னார். வாங்கி வரும் பொழுது வழியில் ஒரு இரயில் தண்டவாளத்தில் குதிரை கால் இடறி விழுந்ததில் குதிரையின் கால்கள் எழ முடியாத நிலையில் ஊனமாயின. அரிசி மூட்டையும் தண்டவாளத்தின் ஒரு பகுதியில் விழுந்திருந்தது. அப்பொழுது இரயில் தூரத்தில் வருவது தெரிந்தது. இன்னும் ஐந்து நிமிடத்தில் குதிரை, அரிசி மூட்டைகளை அப்புறப்படுத்த முடியாது. எந்தப் பொருளை இழந்து விட்டுச் சென்றாலும் மன்னரிடமிருந்து அமர்நாத்தின் தலை தப்பாது. எப்படி குதிரை, அரிசி மூட்டைகளை இழக்காமல் அமர்நாத் அதை அரசவைக்குக் கொண்டு செல்வான்?

- தேனி பிரபு

விடை - 39 ஆம் பக்கம்

தலையெழுத்தைத் திருத்திய மாணவி!

எழுத்து...

தமிழ் கட்டுரை வகுப்பில், ஒரு மாணவியின் எழுத்து மிகவும் மோசமாக இருந்ததால், கட்டுரை நோட்டைத் தரும்பொழுது ''எழுத்தா எழுதியிருக்கே எழுத்து. தலை எழுத்து மாதிரி'' என எங்கள் தமிழாசிரியை திட்டினார். அனைவரும்



தங்கள் கட்டுரையில் ஆசிரியை சுட்டிக் காட்டியிருந்த தவறுகளை இடது பக்கம் திருத்தி எழுதினோம். வகுப்பு முடியும் பொழுது கட்டுரை நோட்டுகளைத் திரும்ப சமர்ப்பிக்கும்படி ஆசிரியை சொன்னார். எல்லோரும் நோட்டுகளைச் சமர்ப்பித்துவிட, திட்டு வாங்கிய மாணவி மட்டும் எழுதிக் கொண்டே இருந்தாள். ''நோட்டை வைக்காம என்ன செய்யறே?'' என ஆசிரியை கேட்டதற்கு, அவளுக்குப் பக்கத்திலிருந்த மாணவி, ''அவள் தலை எழுத்தைத் திருத்தி எழுதிக்கிட்டு இருக்கிறாள் டீச்சர்'' என்றதும் ஆசிரியை சிரித்து விட்டார்.

- எஸ். சௌம்யாயனி, ஒன்பதாம் வகுப்பு, புனித அலாய்சியஸ் ம.மே.நி.பள்ளி, தூத்துக்குடி

கிண்டல்...

எங்கள் வகுப்பாசிரியர் கணபதி என்பவர் நகைச்சுவை உணர்வு அதிகம் கொண்டவர். அவ்வப்போது மாணவர்களின் பெயரை வைத்து 'கமெண்ட்' அடிப்பார். ஒருமுறை ஞானசேகரன் என்ற மாணவனை, ''ஞானம் என்றால் அறிவு. சேகரன் என்றால் சேகரிப்பவன். அப்படியென்றால் அறிவைச் சேகரிப்பவன் என்று உனது பெயருக்கு அர்த்தம். ஆனால் உன் 'மார்க்'கைப் பார்க்கும்போது உன் பெயருக்கே அர்த்தமில்லாமல் இருக்கிறதே'' என்று நையாண்டி செய்தார். அவனோ ''ஞானசேகரின் பெயரில் என்ன சார் இருக்கிறது? உங்கள் பெயர்கூடத்தான் கணபதி. நீங்கள் அந்த விநாயகரைப் போல கட்டை பிரம்மச்சாரியாகவா இருக்கறீர்கள்?



திருமணம் செய்து கொண்டு மூன்று குழந்தைகளுடன் மகிழ்ச்சியாகத்தானே உள்ளீர்கள்'' என்று ஸ்பாட் டயலாக் அடிக்க ஆசிரியர் கப்சிப். அதற்குப் பின் கணபதி ஆசிரியர் எந்த மாணவனையும் பெயரை வைத்து கிண்டல் செய்வதில்லை.

- ஜி.கே.எஸ். மூர்த்தி, கோபிசெட்டிப்பாளையம்

கணக்கில் வீக்!

எங்கள் வகுப்பாசிரியர் முதல் மாதத் தேர்வுக்கான மதிப்பெண் பட்டியல் அடிப்படையில் ஒவ்வொரு மாணவனாக அழைத்து அவனது நிறைகுறைகளைச் சுட்டிக்காட்டி அடுத்த தேர்வுக்கு எவ்வாறு படிக்க வேண்டும் என்பதையும் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். அப்போது சசிகுமார் என்ற

எங்கள் பள்ளியில் நடந்தது!

மாணவனுடைய மதிப்பெண் பட்டியல் வர, அவனை ஆசிரியர் அருகில் அழைத்தார். அவன் எல்லா பாடத்திலும் குறைந்த மதிப்பெண்களே வாங்கியிருந்தான். அவர் எங்களுக்கு கணிதம் எடுப்பதால் முதலில் கணிதத்தில் அவன் மார்க்கைப் பார்த்து, "என் சப்ஜெக்ட்ல ரொம்ப குறைஞ்ச மார்க் தான் எடுத்திருக்கே - ஏன்?" என்று கேட்டார். அவனோ, "நான் கணக்குல வீக் சார்!" என்றான். "அப்ப மத்த பாடத்திலேயும் ஏன் குறைஞ்ச மார்க் எடுத்திருக்கே?" என்று கேட்டார். அவனும், "கணக்குல வீக்னு அதை மட்டும் படிச்சதால மத்த பாடங்களைப் படிக்கலை சார்!" என்றான். உடனே நாங்கள் அனைவரும் சிரித்து விட்டோம். பிறகு ஆசிரியர், "நீ தினமும் இரவு ஏழு மணிக்கு வா, நான் உனக்கு ட்யூஷன்



எடுக்கிறேன்" என்றார். அவனும் நன்றி கூறினான்.

- எம். வினோத், விருத்தாசலம்

முரண்பாடு

ஆசிரியர் "டேய் கழுதை! நான் கேட்கிற கேள்விக்கு ஒழுங்கா பதில் சொல்லாவிட்டால் உதைச்சிடுவேன்" என்று சொல்லிவிட்டு 'முரண்பாடு' என்பதற்கு உதாரணம் கேட்டார். அந்த மாணவன் உடனே "சார்! நீங்க என்னைப் பார்த்து கழுதைன்னு சொல்லிட்டு நீங்க உதைச்சிடுவேன்னு சொல்றீங்களே



அதுதான் முரண்பாடுக்குச் சரியான உதாரணம்" என்றான். மாணவர்களின் கலகலப்பில் ஆசிரியரும் இணைந்து கொண்டார்!

- எஸ். பிரசாந்த், நெல்லை

முட்டை என்ன வடிவம்?

எங்கள் அறிவியல் ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருக்கையில் "முட்டையின் வடிவம் என்ன?" என்று கேட்டார். கோளம், நீள் கோளம், நீள் வட்டம் என்று ஆளுக்கொரு பதிலைச் சொன்னோம். என் தோழி ஒருத்தி "வட்டம்" என்றாள். "வட்டமாக எந்த முட்டை உள்ளது?" என்று ஆசிரியர் கேட்க, அவள், "அம்மா ஆம்லெட் போட்டதும் முட்டை வட்டமாக இருக்கும்" என்றாள். அப்புறம் ஒரே சிரிப்புதான்.

- நா. பாண்டியம்மாள், பத்தாம் வகுப்பு, ஸ்ரீசேதுமாணிக்கம் உயர்நிலைப் பள்ளி, இராமநாதபுரம்.




மாலா தேடிய மணப்பெண்

4

கதை : விஜி   படம் : சேகர்




இது விசேஷமான வில். அரக்கனுடையது. அவன் வருவதற்குள் எடுத்துச் சென்று விடு. உனக்கு மிகவும் உதவும்:
நன்றி இளவரசே! வருகிறேன்!
மாலா இரண்டு நாள் பயணம் செய்து ஓர் ஆற்றை அடைந்தாள்.
ஆஹா! இந்த ஆற்றிற்கு அப்பால் உள்ள பகுதியில் தான் பறவைகள் வசிப்பதாக இளவரசர் சொன்னார். ஆனால் இதைக் கடப்பது எப்படி?
ம்... வெள்ளம் கரைபுரண்டு ஓடுது. இதில் போக முடியாது. காத்திருக்க வேண்டியதுதான்!



இரண்டு நாட்கள் கழித்து -
சே! ரெண்டு நாளா தண்ணீர் குறையவே இல்லையே. சரி, இந்த அம்பைத் தண்ணீருக்குள் விட்டு ஆழத்தை அறியலாம்.
அட! ஆற்றில் பாதை ஏற்படுதே! இது சக்தி வாய்ந்த அம்புதான்! நான்தான் இதன் பயன் தெரியாமல் நேரத்தை வீணடித்துவிட்டேன்.
மாலா சிரமமின்றி அக்கரையை அடைந்தாள்.
இந்த இடம் எவ்வளவு அழகு!


அப்போது-
ஏய் பெண்ணே ஓடு... புலி வருது.
திரும்பிய மாலா அம்பை எடுத்தாள்.
ஆ! புலி இந்த அம்புக்குப் பயந்து ஓடுதே! ஆஹா! யார் என்னை எச்சரித்தது? ஒருவரையும் காணோம்.
மாலா அங்குள்ள பழங்களைப் பறித்துச் சாப்பிட உட்கார்ந்தாள்.
அவை விஷப் பழங்கள். சாப்பிடாதே.
தொடரும்



உலக மக்கள் தொகையில் பாதிபேர் தேநீர் அருந்துகின்றனர். பெரும்பான்மை யானவர்களின் விருப்ப பானமான தேநீர் விலை மலிவானதும்கூட. வியாபார நோக்கில் காபிக்கு அடுத்த இடத்தில்தான் தேநீர் இருக்கிறது. ஏனென்றால் தேயிலை அது பயிரிடப்படும் நாடுகளிலேயே பெரும் பகுதி பயன்படுத்தப்படுகிறது. தேயிலை யின் கதை சுவாரசியமானது. கிறிஸ்து பிறப்பதற்கு இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன்பே சீனர்கள்தான் முதன் முதலில் தேநீர் அருந்தினர். 'சென்னு' என்ற சீன மாமன்னர் தனது பயணத்தின்போது களைப்பு மேலிட மரங்கள் அடர்ந்த இடத் தில் அமர்ந்தார். பணியாட்களை அழைத்து சுடுதண்ணீர் கொண்டு வரச் சொன்னார். பணியாள் கொண்டு வந்த சுடுதண்ணீரில் மன்னர் அமர்ந்திருந்த மரத்திலிருந்து இலை ஒன்று விழுந்தது. உடனே நீரின் நிறம் மாறியதுடன் சுவையும் மணமும் அருமையாக இருந்தது. அதுதான் கேமினெல்லா சைனன்சிஸ் என்ற தாவரப் பெயரில் அழைக்கப்படும் தேயிலை.

மோகனா

தேயிலையின் பிறப்புக்கு இன்னொரு கதையும்கூட கூறப்படுகிறது. தருமா என்ற

புத்த பிட்சு புத்தரின் கருத்துகளைப் பரப்ப சீனாவுக்குச் சென்றார். அப்போது அந்தப் புனிதப் பயணம் முடியும்வரை உறங்குவதில்லை என்ற சபதமும் எடுத்துக் கொண்டார். அவர் பயணம் செய்யும்போது தினமும் தியானம் செய்வார். ஒருமுறை தியானத்தின்போது களைப்பு மிகுதியில் தூங்கிவிட்டார். விழித்த தருமா கண் இமைகளைப் பிடுங்கி வீசினார். இமைகள் வீசப்பட்ட இடம் கண்ணுக்குக் குளிர்ச்சியான, செழிப்பான இலைகள் உள்ள பகுதியாக இருந்தது. அந்த இலைகளைப் பறித்து, நீரில் போட்டு, கொதிக்க வைத்து, வடிகட்டிக் குடித்தார். ஆச்சரியப்படும்படி அந்நீரின் தூண்டுதலால் சோர்வு நீங்கி புத்துணர்ச்சி பெற்றார். இப்படித்தான் தற்செயலாகத் தேநீர் புத்துணர்ச்சி பானமாக மாறியது.



புத்துணர்ச்சியூட்டும் பானம்!

தேயிலை கண்டுபிடிக்கப்பட்டு கிட்டத்தட்ட மூவாயிரம் ஆண்டுகள் வரை 'மருத்துவ குணம்' கொண்ட பானமாகவே பயன்படுத்தப்பட்டு வந்தது. தேநீரை ஆசியா முழுவதும் பரப்பிய பெருமை புத்த பிட்சுகளையே சேரும். கி.பி. 300 ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான் தேநீர் தினமும் பருகும் பானமாகப் புழக்கத்திற்கு வந்தது. கி.பி. 800 ஆம் ஆண்டுகளில்தான் தேயிலை ஜப்பானுக்குக் கொண்டு செல்லப்பட்டது. கி.பி. 13 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர்தான் தேயிலை பயிரிடும் முறை ஜப்பானில் நடைமுறைக்கு வந்தது. இங்கிலாந்தில் கி.பி. 1657ல் தாமஸ் கார்வே என்ற காபி கடைக்காரர்தான் தேயிலையை அறிமுகப்படுத்தினார்.





இங்கிலாந்து மன்னர் இரண்டாம் சார்லஸ், காதரின் என்ற போர்த்துகீசியப் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டபோது சீர் பொருட்களில் தேயிலையும் இருந்ததாம்!

1904 ஆம் ஆண்டு உலக வர்த்தக பொருட்காட்சியின்போது, வெயில் காலமாக இருந்ததால் சூடான பானமாக இருந்த தேநீரை விற்க முடியவில்லை. ரிச்சர்ட் பிளீச்சன்டன் என்பவர் ஐஸ் கட்டியைப் போட்டு ஐஸ் டீயை அறிமுகப்படுத்தினார்.

ஆசியாவிலுள்ள சீனா, ஜப்பான், தாய்வான், ஜாவா, சுமத்திரா தீவுகள், பங்களாதேஷ், இந்தியா மற்றும் இலங்கை போன்ற நாடுகள்தான் முக்கியமாகத் தேயிலை பயிரிடும் நாடுகளாகும். உலகிலேயே அதிகமாகத் தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகள் இந்தியாவும் இலங்கையும்தான். ஆண்டுதோறும் இந்தியாவுக்குத் தேயிலை மூலம் 200 கோடி ரூபாய் அந்நியச் செலவாணி கிடைக்கிறது.

தேயிலைக் குற்றுச் செடி என்று சொல்லப்பட்டாலும் கூட 30-50 அடி உயரம் வளரக் கூடியது. செடி அடர்ந்த புதராகவும், குட்டையாகவும், அதிக துளிர் இலைகளுடனும் இருக்க வேண்டும் என்பதற்காகத் தேயிலைச் செடியை 2-5 அடி உயரத்திற்கு மேல் வளர விடாமல் வெட்டி விடுகின்றனர்.

தேயிலைச் செடி பயிரிடப்பட்டு நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள் கழித்து இலையைப் பறிக்கத் துவங்குவர். இலையின் முதிர்ச்சிக்குத் தகுந்தாற் போல் அதன் தாமும் குணமும் மாறுபடும். இளந்துளிர் இலைகளில்தான் முதல்தரமான தேநீர் கிடைக்கிறது. தேயிலையை 7 முதல் 10 நாட்கள் இடைவெளியில் பறிக்கின்றனர்.

குளிர் நாட்களில் செடிகளில் அதிக வளர்ச்சி இருக்காததால் அப்போது தேயிலை பறிப்பதில்லை. தேயிலைச் செடியின் வாழ்நாள் இருநூறு ஆண்டுகள் என்றாலும் நாற்பது - ஐம்பது ஆண்டுகளுக்குப் பின் அதன் மகசூல் குறைந்து விடுகிறது.

தேயிலையில் வாசனையைத் தூண்டும் பொருட்களும், எளிதில் ஆவியாகி மண மூட்டும் எண்ணெய் பொருட்களும், பாலிஃபினால், டானின், காபின் மற்றும் தியோபுரோமின் என்ற வேதிப் பொருட்களும் உள்ளன. தேயிலையில் உள்ள காபின்தான் மணம், சுவைக்குக் காரணம் — நிறத்துக்கு டானின் காரணம்.

தேநீரிலுள்ள பாலிஃபினால் புற்றுநோய், இதயம், இரத்த குழாய் சம்பந்தமான வியாதிகள், கண், பல், தோல் மற்றும் சர்க்கரை நோய்கள் வர விடாமல் தடுப்பதுடன், வந்தால் கட்டுப்படுத்தவும் செய்கின்றன. இவையெல்லாம் பால், சர்க்கரை சேர்க்காத தேநீரில் மட்டுமே கிடைக்கும். தேநீரில் 4 கலோரி சத்து உள்ளது.

தேயிலையில் கறுப்பு தேயிலை, பச்சை தேயிலை, பிரிக் தேயிலை, ஓலாங் தேயிலை எனப் பலவகை உண்டு.

புத்துணர்ச்சியூட்டும் தேயிலை பானத்தை அதிகமாகப் பருகினாலும் கெடுதல்தான்.



பள்ளி மாணவ, மாணவியருக்கு உதவும் வகையில் ஒவ்வொரு மாதமும் இந்தப் போட்டி நடத்தப்படுகிறது. நீங்கள் பள்ளி மாணவர் என்பதற்கு அத்தாட்சியாக உங்கள் பெற்றோரின் கையொப்பம் இருக்க வேண்டும். பெற்றோர் கையொப்பம், முகவரி கூப்பன் இல்லாத படிவங்களை ஏற்றுக் கொள்ள இயலாது. மொத்தப் பரிசு ரூ.1000/-. சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொருவருக்கும் ரூ.200/- பரிசாக வழங்கப்படும். உங்கள் படிப்புக்குத் தேவையான பொருட்களை இதில் நீங்கள் வாங்கிக் கொள்ளலாம். உங்கள் பள்ளி, வீட்டு முகவரிகளை மறவாமல் குறிப்பிடவும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசி தேதி 20.10.2002.

இந்த மாதப் போட்டி

பொருத்துக :

1. கனடா	சீனா
2. அணில்	டென்னிஸ் வீராங்கனை
3. மாசே துங்	ஒட்டவா
4. ஜோக் நீர்வீழ்ச்சி	சிட்ரிக் அமிலம்
5. எலுமிச்சை	கர்நாடகா
6. மார்ட்டினா நவரத்திலோவா	கொறி விலங்கு

7. கண் இமைக்கும் நேரத்தில் அந்தரத்தில் படரும் கொடி, பூவும் பூப்பதில்லை, காயும் காய்ப்பதில்லை - அது என்ன?

8. மேலே உள்ள படத்தில் இருப்பது என்ன?

ஆசிரியர்
கோகுலம்
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.

வழக்கம் போல திருவேலன் அன்று காட்டிற்கு விறகு வெட்டப் போனான். முதல் நாள் காய்ந்து பட்டுப் போன மரத்தை வெட்டியிருந்தான். அதில் இன்னும் பாக்கி இருந்ததால் அதையே வெட்டிக் கொண்டு போகலாம் என்று எண்ணியபடி அந்த இடத்தை நோக்கி அகலமான பாதையிலே நடந்துகொண்டிருந்தான்.

அப்போது -

அந்தப் பாதையின் எதிர்திசையிலிருந்து வேகமாக ஓடி வந்து கொண்டிருந்த ஒரு சிறிய ஆட்டுக்குட்டி திருவேலனின் அருகில் வந்ததும் அவன் காலடியில் அப்படியே மயங்கி விழுந்தது.

திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தவனின் கண்களில் நரி ஒன்று வேகமாக வந்து கொண்டிருப்பது தெரிந்தது. இந்தச் சின்ன ஆட்டுக்குட்டி நரியிடமிருந்து தப்பித்துக் கொள்ளத்தான் நாலு கால் பாய்ச்சலில் வேகமாக வந்து மேற்கொண்டு ஓட முடியாமல் மயங்கி விழுந்துவிட்டது என்று அவனுக்குப் புரிந்துவிட்டது. தோளில் மாட்டி இருந்த கோடாரியை எடுத்து வேகமாக நரியை நோக்கி வீசினான்.

நரியின் நல்லகாலம் உயிர் தப்பியது. இனி இந்த ஆட்டுக்குட்டியின் வழிக்கே வர மாட்டேன் என்று மனத்திற்குள் கூறியபடி, தப்பித்தோம், பிழைத்தோம் என்று குதிகால் பிடரியில் பட அவ்விடத்தை விட்டு ஓட ஆரம்பித்தது நரி.

தன் காலடியில் விழுந்து கிடந்த ஆட்டுக்குட்டியை மெதுவாக எடுத்துத் தோளில் சாய்த்தபடி அருகில் ஓடிக் கொண்டிருந்த ஆற்றுக்கு எடுத்துச் சென்றான். முதுகை மெதுவாகத் தடவியபடி நீர் குடிக்கச் செய்தான். பசுந்தழைகளைப் பறித்துக் கொடுத்தான். அதனுடைய வெல்வட் போன்ற மென்மையான மேனி,



திருவேலன் காப்பாற்றிய ஆட்டுக்குட்டி!

குட்டை வால், குறுகுறுப்பான கண்கள், மென்மையான குரலில் சங்கீதம் பாடுவது போல் மே... மே... என்று ஒலி எழுப்புவது, எல்லாமே அவனுக்கு மிகவும் பிடித்து விட்டது. தன்னோடு தன் குடிசைக்கு அழைத்து வந்தான். 'ஜிங்லு' என்று அதற்குப் பெயர் வைத்தான். அன்போடும் பாசத்தோடும் வளர்த்தான். யாரும் அற்ற அவனுக்கு ஜிங்லு தான் துணையாக இருந்தது.

நரியிடமிருந்து தன் உயிரைக் காப்பாற்றிய திருவேலனை ஜிங்லுவிற்கும் பிடித்துவிட்டது. அன்போடு தன்னைப் பராமரித்து வரும் தன் ஏழை எஜமானுக்கு உதவி செய்ய அதன் உள்ளம் விழைந்தது. ஒரு நாள் குரங்காட்டி ஒருவன் குரங்கை வைத்து வித்தை செய்வதைப் பார்த்த திருவேலன் ஜிங்லுவிற்கும் பயிற்சி கொடுத்து சம்பாதிக்க விரும்பினான்.

ஜிங்லுவும் தன் எஜமானன் எதைச் சொன்னாலும் குறிப்பால் உணர்ந்து அதன்படி செய்தது. சில நாட்கள் கொடுக்கப்பட்ட பயிற்சியில் ஜிங்லு நீளந் தாண்டல், உயரந் தாண்டல், பாட்டிற்கு ஏற்ப நடனமாடுதல், வளையத்திற்குள் புகுந்து வெளியே



வருதல், நாலு காலில் குதித்தல், பந்து விளையாட்டு என்று பல தரப்பட்ட செயல்களைக் கற்றுக் கொண்டு பொது மக்கள் முன்னிலையில் செய்து காண்பித்தது. வேடிக்கை பார்த்த மக்களும் ஜிங்லுவின் சாகசச் செயல்களைக் கண்டு மகிழ்ந்து பணம் போட்டனர். திருவேலனுக்கும் கைநிறையக் காசு கிடைத்தது. வயிராறச் சாப்பிட்டான். ஜிங்லுவிற்கும் அவன் எந்தக் குறையும் வைக்கவில்லை.

இப்பொழுது ஜிங்லுவைப் பார்ப்பவர்கள் அசந்து போய்விடுவார்கள். வேளா வேளைக்கு நல்ல சாப்பாடு. பார்த்தாலே கொழு கொழுவென்று செழுமையோடு காட்சி அளித்தது.


அன்று ஜிங்லுவை அழைத்துக் கொண்டு நகரத்திற்கு வந்தான் திருவேலன்.

த. ஜானகி

''ஜிங்லு! இது பெரிய ஊர். இன்னும் ஆறு மாசத்திற்கு இந்த ஊரை விட்டுப் போக வேண்டாம். சாப்பாட்டுக்குக் காசு கிடைக்கும். கவலையே இல்லை'' என்று கூறினான். ஜிங்லுவும் 'மே...மே..' என்று ஒலி எழுப்பி தன் மகிழ்ச்சியையும் சம்மதத்தையும் தெரிவித்தது.

ஒரு மாதம் எந்தவித இடையூறும் இன்றி ஓடியது.

அன்று மாலை திருவேலன் ஜிங்லுவை அழைத்துக்கொண்டு தான் தங்கியிருக்கும் இடத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது பக்கிரி ஜிங்லுவைப் பார்த்து விட்டான். பக்கிரி சரியான போக்கிரி. பண



● அழுகிய தேங்காயை யானைக்குக் கொடுத்தால் யானை அதனைக் கண்டுபிடித்துவிடும்.

● ரெஃபிரோம்மர் என்ற போலந்துகாரர் 30 வருடங்களாக ஒரு வார்த்தைகூட பேசாமல் மௌன விரதம் பூண்டு மடிந்தார்.

● உலகிலுள்ள நாடுகளில் இருபத்தாறு நாடுகளுக்குக் கடற்கரை கிடையாது.

● வில்லியம் பராக் தன் தந்தையுடன் கூட்டாக பௌதிகத்திற்கான நோபல் பரிசை வாங்கும்போது அவரது வயது 23தான்.

- க. பூங்கொடி, சித்தோடு


● *நீர்யானைகள் தண்ணீரின் அடிப்பகுதியிலும் மிக வேகமாக ஓடக்கூடியவை.*

● *பல்லிகள் தனது வாலில்தான் உணவையும், நீரையும் சேமித்து வைத்திருக்கும்.*

● *குதிரைக்கும், சிங்கத்துக்கும் ஒரு மைல் தூரத்திற்கு மட்டும் ஓட்டப்பந்தயம் வைத்தால் சிங்கம்தான் வெற்றி பெறும். தூரத்தின் அளவு அதிகமாக இருந்தால்தான் குதிரை வெற்றி பெறும்.*

● *சூரியனை நேருக்கு நேர் பார்க்கக்கூடிய சக்தி பெற்ற ஒரே பறவை, கழுகு மட்டுமேயாகும்.*

- ஆர். பிரசன்னா



வசதி உள்ளவன். ஜிங்லுவைப் பற்றி கேள்விப்பட்டிருந்தான். 'கொழு கொழு' வென்று இருக்கும் ஜிங்லுவை நேரில் பார்த்ததும் அவன் கண்கள் விரிந் தன. 'ஆஹா, இந்த ஆட்டின் இறைச் சியைச் சாப்பிட்டால் எவ்வளவு சுவையாக இருக்கும்!' என்று நினைக்கும்போதே அவன் நாவில் எச்சில் ஊறியது.

அவ்வளவுதான்! நேராக திருவேலனின் அருகில் வந்து, ''மரியாதையா உன்னோட இந்த ஆட்டை எனக்கு விலைக்குக் கொடுத்து விடு'' என்றான் அதிகாரத்தோடு.

பக்கிரியை உற்றுப் பார்த்த திருவேலன் சில நொடிகள் யோசித்துவிட்டு, ''இது உயர்ந்த வகை ஆடு. அதனால என்ன விலை கேட்டாலும் கொடுப்பீங்களா?'' என்று கேட்டான்.

''நீ இந்த ஆட்டை வைத்து ஆடிப்பாடி சம்பாதிப்பதை விட நான் உனக்கு அதிக மாகவே தரேன். என்ன சொல்றே?''

''நெசமாவா?''

''என் வார்த்தையில நம்பிக்கை இல் லேன்னா இப்பவே என் வீட்டுக்கு வா.''

''நீங்க நிறைய பணம் தரேன்னு சொல்லும்போது வேண்டாம்னு சொல்ல நான் என்ன முட்டாளா? கட்டாயம் இந்த ஆடு உங்களுக்குத்தான். ஆனா... பாருங்க... இப்ப விளக்கு வைக்கப் போற நேரம். நாளைக்கு அமாவாசை. விரத நாள். சைவ சாப்பாடுதான் சாப்பிடுவீங்க. அத னால நாளை மறுநாள்... இதை உங் களுக்குத் தந்துடறேனே...''

''ஆமாம் நீ சொல்றதும் சரிதான். நாளன் னிக்கு மறக்காம உன் ஆட்டோட என் வீட்டிற்கு வந்துடு. பக்கிரின்னு சொன்னா இந்த ஏரியாவிலே பச்சப்புள்ள கூட என் வீட்டைக் காட்டும்'' என்று கூறிவிட்டுப் பக்கிரி சென்றுவிட்டான்.

இருவருக்கும் இடையே நடைபெற்ற உரையாடலை ஜிங்லு கேட்டுக் கொண் டிருந்தது. அன்று இரவு அதற்குத் தூக்கம் வரவில்லை. தன்னைத் தன் எஜமான் விற்கப் போகிறான் என்று எண்ணியதுமே அதனால் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை. கண்ணீர் ஊற்றாகப் பெருக ஆரம்பித்தது. பூனையிடம் மாட்டிக் கொண்ட எலி போல் துடித்தது.

'என் உயிரைக் காப்பாற்றிய இந்த ஆளை என் எஜமானாக நினைத்து மதிப்பு வைத்து, என் உடலை வருத்தி சம்பாதித்துக் கொடுக்கிறேன். கொஞ்சம் கூட நன்றி இல்லாதவன். பணப் பிசாசு. பக்கிரியின் கையால் சாவதைவிட நான் என் இடத்திற்கே சென்று விடுகிறேன்' என்று மனத்திற்குள் கூறிக் கொண்டபடி தன் இடத்தை விட்டு எழுந்தது.

ஜிங்லுவையே பார்த்துக் கொண்டிருந்த திருவேலன் அது மனத்தில் எண்ணியதைத் துல்லியமாக அறிந்துகொண்டான். வேகமாக எழுந்து தடிமனான கயிற்றினால் ஜிங்லு தப்பித்துச் செல்லாதபடி கயிற்றால் கட்டினான். பிறகு அதைத் தர தரவென்று இழுத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தான். அவனிடமிருந்து ஜிங்லு தப்பித்துக் கொள்ள செய்த முயற்சி பலன் அளிக்கவில்லை. கண்களை மூடியபடி உடைந்த உள்ளத்தோடும், தளர்ந்த நடையோடும் கால்கள் வலிக்க, வலிக்க தன் தலைவிதியை நொந்தபடி நடந்து கொண்டிருந்தது ஜிங்லு.

திடீரென்று புள்ளினங்கள் இசை பாடிக் கொண்டே விண்ணில் பறக்கும் ஒலி கேட்டதும்தான் சுயநினைவிற்கு ஜிங்லு வந்தது.

விழித்துப் பார்த்த அதன் கண்கள் வியப்பால் விரிந்தன. பொழுது மலர்ந்து கொண்டிருந்த அந்த நேரத்தில் தான் இருக்கும் இடம் காட்டுப்பகுதி என்று உணர்ந்து கொண்டது.

''ஜிங்லு! உன்னை என் குழந்தை போல நினைச்சு வளர்த்தேன். பக்கிரி உன்னை வாங்க நினைச்சபோது, அவன் கிட்டேயிருந்து உன்னை எப்படி காப்பாத்தறதுன்னு தவிச்சபோதுதான் மறுநாள் அமாவாசைன்னு ஞாபகம் வந்தது. பக்கிரி பொல்லாதவன். எப்படியாவது உன்னைக் கொன்னுடுவான். அவனை எதிர்க்க என் கிட்டே பலம் இல்லே. நாம எங்கே இருந்தாலும் மோப்ப நாய் மாதிரி கண்டுபிடிச்சுடுவான். அதனால்தான் அவன்கிட்டே அப்படி பேசினேன். நீ கூட என்னை பேராசைக்காரன்னு தப்பா நினைச்சுட்டே. இன்னிக்குப் பக்கிரி கிட்டேயிருந்து தப்பிச்சிட்டாலும் இன்னும் கொஞ்ச நாள்லே எவனாவது போக்கிரி பலவந்தமா என் கிட்டேயிருந்து உன்னைப் பறிச்சிட்டுப் போகலாம். இனிமேல் என்கிட்டே இருந்தா உனக்கு ஆபத்துன்னு தோணுச்சு. என்னைத் தப்பா நினைச்சு என்கிட்டேயிருந்து தப்பிக்க நினைச்ச நீ வேறு யார் கிட்டேயாவது மாட்டிக்குவேன்னு பயந்துகிட்டுதான் உன்னைக் கயிற்றாலே கட்டினேன். கழுத்து வலிக்குதா... நடந்து நடந்து கால் வலிக்குதா... என்னை மன்னிச்சுடுடா ஜிங்லு'' என்று கூறியபடி கயிற்றை அவிழ்த்துவிட்டான்.

'மே..மே...' என்று கூறியபடி கண்ணீர் வடித்தது ஜிங்லு.

''உன்னை விட்டுப் பிரிய எனக்குக் கஷ்டமா இருந்தாலும், நீ உன் இனத்தாரோடு சுதந்திரமா... சந்தோஷமா இரு. அழாதே ஜிங்லு'' என்று கூறிய திருவேலன் ஜிங்லுவின் கண்ணீரைத் துடைத்துவிட்டு தன் கண்களில் வழியும் நீரை கட்டுப் படுத்த முடியாமல் மெதுவாக அங்கிருந்து நகர்ந்தான்.

புதிர் உலகம்-விடைகள்

I) ஐந்து நாட்களில் வாங்கியவை = 5 x 5 = 25
25 காலி உறைகளுக்கு = 25/5 = 5
5 காலி உறைகளுக்கு = 5/5 = 1
———
31

II) 120 பூக்கள்
III) தீப்பெட்டி
IV) அப்பா கொடுத்தது = 1+2+3+4+5 = 15
நான் திருப்பிக் கொடுத்தது = 5
———
மீதி ரூபாய் = 10

V) எதுவுமே அதிக கனமாக இருக்காது. ஏனெனில் இரும்பு, பஞ்சு இரண்டுமே ஒரு கிலோ என்பதால் அவை சமமான எடை உள்ளதாகவே இருக்கும்.

VI) ஐந்து நிமிடத்தில் ஒரு நிமிடத்தைச் செலவு செய்து சிந்தனை செய்வான். மீதி நான்கு நிமிடத்திற்குள் இரண்டு அரிசி மூடைகளையும் தண்டவாளத்தை விட்டு அப்புறப்படுத்துவான். குதிரையை நோக்கி வந்த இரயில் தானாக நின்றுவிடும். எப்படி? குதிரையின் மீதுதான் சிவப்புத் துணி போர்த்தியிருக்கிறதே.


இயற்கையைப்
பாதுகாப்போம்!


அக்டோபர் 3 - உலக இயற்கை தினம்

கேட்கட்டுமா டாக்டர்?

ஆந்த்ராக்ஸ் என்றால் என்ன?

● ந. குமரேசன், நாமக்கல்.


? என் வலது காதிற்குள் குச்சியை விட்டுக் குடைந்ததில் லேசாக ரத்தம் வந்தது. பிறகு தானாகவே ரத்தம் வருவது நின்று விட்டது. இரண்டு வாரங்களுக்குப் பிறகு அந்தக் காதில் மட்டும் வலி எடுத்தது. நானாக மருந்துக் கடையில் மருந்து வாங்கிச் சாப்பிட்டேன். வலி சரியாகி விட்டது. இப்போது மீண்டும் அதே காதில் வலி எடுக்கிறது. என்ன செய்யலாம், டாக்டர்?

! தம்பி குமரேசா! உன் உடல் நலனில் நீ எவ்வளவு அலட்சியமாக இருக்கிறாய் என்று நினைக்கும்போது எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. முதலில் குச்சியை வைத்துக் காது குடைவது தவறு. அப்படி செய்தால் காதில் உள்ள செவிப் பறை கிழிந்து விடும். உனக்கும் அவ்வாறே ஏற்பட்டிருக்கும் என்று நினைக்கிறேன். அதனால்தான் உன் காதிலிருந்து ரத்தம் வந்திருக்கிறது. உடனே டாக்டரைப் பார்க்க வேண்டாமா? அதை நீ செய்ய மறந்தது இரண்டாவது தவறு. சரி, காதில் வலி ஏற்பட்ட பிறகாவது டாக்டரைப் பார்த்திருக்கலாமே. நீயாகக் கடையில் மருந்து வாங்கிச் சாப்பிட்டது அடுத்த தவறு. ஏன் தெரியுமா? செவிப்பறையில் துவாரம் விழுந்துவிட்டால் நோய்க்கிருமிகள் வெளிக்காதிலிருந்து உள் காதிற்குள் புகுந்து நோய்த் தொற்றை ஏற்படுத்தும். குளிக்கும்போது தண்ணீர் உள்காதிற்குள் போய்விடும். இதனால் நோய்த் தொற்று அதிகமாகும். விளைவு காதுவலி. காதில் சீழ்கூட வடியலாம். அப்போதும் கவனிக்கத் தவறினால் நோய்க்கிருமிகள் மூளைக்குச் சென்று மூளைக்காய்ச்சல், மூளை உறைக்காய்ச்சல் ஆகிய உயிருக்கு ஆபத்தைத் தருகின்ற நோய்களை உருவாக்கி விடும். இதெல்லாம் தெரியாமல் நீயாக மருந்து வாங்கிச் சாப்பிட்டிருக்கிறாயே! சரி, இப்போதாவது ஆலோசனை கேட்டாயே! நீ உடனடியாக காது - மூக்கு - தொண்டை நிபுணரை நேரில் சந்திக்க வேண்டும். உன் செவிப்பறையில் உள்ள குறைபாடு சிறிதளவில் இருந்தால் மருத்துவ சிகிச்சை மட்டும் போதுமானது. குறைபாடு அதிகமென்றால் அறுவை சிகிச்சை தேவைப்படும். சிகிச்சை முறை எதுவாயினும் உனக்கு நோய் முற்றிலும் குணமடைந்துவிடும். பயப்படாதே!

● ஆ. இலக்கியா, சிதம்பரம்

? சென்ற வாரம் ஒருநாள் சைக்கிளிலிருந்து கீழே விழுந்துவிட்டேன். என் முன் பற்களில் மூன்று உடைந்து விட்டன. உடைந்த பற்களைச் சரி செய்ய முடியுமா டாக்டர்?

! பற்கள் முழுவதுமாக உடைந்து விட்டதென்றால், அதாவது எலும்புக் குழியில் பல் வேர் எதுவும் இல்லை என்றால், அந்தப் பற்களை அகற்றி விடுவதே நல்லது. அப்படியில்லாமல், பற்கள் மட்டும் பாதி உடைந்து, அவற்றின் வேர்கள் எலும்புக் குழியில் உள்ளதென்றால், அப்பற்களை அகற்றாமல், 'வேர் சீரமைப்புச் சிகிச்சை' (Root Caral Treatment) மூலம் மீண்டும் பற்களை அதே இடத்தில் நல்ல நிலைமையில் பொருத்திவிடலாம். உடைந்த பற்களின் மேற்பரப்புகளைப் 'பல் உறை' (Tooth cap) போட்டு மூடிக் கொள்ளலாம். உடைந்த பற்களை அகற்ற வேண்டிய நிலைமை ஏற்படுமானால் அந்த



டாக்டர் கு.கணேசன்

இடத்தில் எடுத்து, எடுத்துப் போட்டுக் கொள்ளும் செயற்கைப் பற்களைப் பொருத்திக் கொள்ளலாம். அல்லது தாடை எலும்பில் 'பற்பதியம்' (Tooth Implant) மூலம் ஒவ்வொரு பல்லாகப் பொருத்தி விடலாம். இந்தச் சிகிச்சை முறை மூலம் பற்களை நிரந்தரமாகப் பொருத்த முடியும்.

● க. உத்தண்டராமன்,
கோயம்புத்தூர்.

? செயற்கைக் கால்களை எதில் செய்கிறார்கள் டாக்டர்?

! ஆரம்ப காலத்தில் செயற்கைக் கால்கள், கைகள், விரல்கள், காதுகள் ஆகியவற்றை மரக்கட்டைகளை வைத்துத் தயாரித்தனர். அவற்றில் சில சிரமங்கள் ஏற்பட்டன. குறிப்பாக அந்தச் செயற்கை உறுப்புகளின் எடை அதிகமாக இருந்தது. தேவையின்றி எடையைத் தூக்குவதுபோல் இருந்தது. எளிதில் மடக்கி, நீட்ட இயலவில்லை. பின்பு, ரப்பரில் அவை தயாரிக்கப்பட்டன. இவற்றின் எடை குறைவு; விலையும் குறைவு. மடக்கவும், நீட்டவும் எளிதாக இருந்தது. ஆனால் தோலில் ஒவ்வாமை உண்டாகியது. அரிப்பை ஏற்படுத்தி புண்ணாக்கியது. இதனால் காலப் போக்கில் இந்த மூலப் பொருள்களில் மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அண்மைக்காலமாக 'பாலியுரேத்தேன் ஃபோம்' (Ployurathane Foam) - சுருக்கமாக 'பஃப்' (Puf) - எனப்படும் ஒருவகை வேதிப் பொருளால் தயாரிக்கிறார்கள். இதன் மூலம் தயாரிக்கப்படும் செயற்கை உறுப்புகள் நிஜ உறுப்புகளைப் போலவே உள்ளன. எளிதில் வளைக்க நீட்ட, மடக்க முடிகிறது. தோலில் ஒவ்வாமை ஏற்படுவதில்லை. இந்தியாவில் ஜெய்ப்பூர், கான்பூர், சென்னை ஆகிய நகரங்களில் இந்தச் செயற்கை உறுப்புகளைத் தயாரிக்கிறார்கள்.



● பஞ்சவண்ண மகள், கருப்பம்புலம்

? ஆந்த்ராக்ஸ் என்றால் என்ன? அதன் அறிகுறிகள் என்ன? அதனைத் தடுக்க என்ன வழி டாக்டர்?

! 'பேசில்லஸ் ஆந்த்ராசிஸ்' (Bacillus Anthracis) எனும் பாக்டீரியாவால் ஏற்படுகிற நோய் ஆந்த்ராக்ஸ். அடிப்படையில் இது ஒரு கால்நடை நோய். ஆனால் கால்நடைகளிடமிருந்து மனிதனுக்கும் இது தொற்றும். இந்த நோய் வந்து இறந்த ஆடு, மாடுகளைத் தொட்டவர்கள், அவற்றின் இறைச்சிகளைச் சாப்பிட்டவர்கள் ஆகியோருக்கு இந்த நோய் பரவும். தோல் பதனிடும் தொழில் மற்றும் கசாப்புக்கடைகளில் உள்ளவர்களுக்கு ஆந்த்ராக்ஸ் பரவும் வாய்ப்புகள் அதிகம். கால்நடைகளின் மூக்குச்சளி வழியாக இந்த நோய்க்கிருமிகள் வெளியேறுவதால் அவை காற்றில் கலந்து, சுவாசித்தல் மூலமும் ஒருவரின் உடலுக்குள் இக் கிருமிகள் பரவி விடும். ஆனால் ஆந்த்ராக்ஸ் வந்த ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு இந்த நோய் பரவாது என்பது ஆறுதல். பூச்சிக் கடித்தது போல் உடலெங்கும் அரிப்பும் தடிப்பும் ஏற்படுதல் இந்த நோயின் முதல் அறிகுறி. கட்டுக்கடங்காத காய்ச்சல், வாந்தி, வயிற்றுப் போக்கு ஆகிய அறிகுறிகளும் அடுத்தடுத்து உண்டாகும். நெஞ்சில் சளி பிடிக்கும். இருமல் வரும். நெஞ்சு வலிக்கும். சளியில் ரத்தம் வெளிப்படும். தோலில் கொப்புளங்கள் ஏற்படும். மருந்து, மாத்திரைகளால் இந்த நோயை எளிதில் குணப்படுத்தி விடலாம். இதனைத் தடுக்க தடுப்பூசி உள்ளது. இந்த நோய்த் தொற்று உள்ள இடங்களில் வசிப்பவர்கள் அவசியம் தடுப்பூசியைப் போட்டுக் கொள்ள வேண்டும். ஆந்த்ராக்ஸ் நோய் வந்து இறந்த ஆடு, மாடுகளை எரித்து விடுவது நல்லது. இந்த விலங்குகளின் இறைச்சிகளைச் சாப்பிடக்கூடாது.

பண்ணையாருக்குப் பாடம்!

மதுகாபுரியில் லட்சுமணன் என்ற வியாபாரி இருந்தான். அவ்வூரில் உள்ள ஒரு பண்ணையாரிடம் நெல் கொள்முதல் செய் வதற்காகச் சென்றான்.

பண்ணையார் மகா மோசடி பேர்வழி. பிறரை ஏமாற்றிப் பணம் சேர்ப்பதில் வல்லவர். அப்படி அவர் ஏழைகளின் வயிற்றில் அடித்து சேர்த்த சொத்துகளும், நிலபுலன்களும் ஏராளம்.

பண்ணையார் வியாபாரியைத் தன் வீட்டு வாசல் திண்ணையிலேயே அமரச் செய்துவிட்டு உள்ளிருந்து ஒரு கூடையில் நெல்லைக் கொண்டு வந்து காட்டினார்.

''இந்த நெல் போதுமா?'' என்று கேட்டார். லட்சுமணன் அந்த நெல்லைப் பார்த்துவிட்டு ''இதுவே போதும்'' என்று நெல் ரகத்தைக் கண்டு திருப்தியுற்றவாறு பத்து மூட்டை நெல்லுக்கு உண்டான பணத்தைக் கொடுத்தான். ''வண்டி அனுப்புகிறேன், நெல்லைக் கொடுத்து அனுப்புங்கள்'' என்று கூறி விட்டுச் சென்றான்.


வியாபாரி தனது கடைக்குச் சென்று மாட்டு வண்டியொன்றை அமர்த்தி நெல் மூட்டைகளைத் தூக்கி வரும்படி வண்டிக்காரனிடம் சொன்னான்.

வண்டிக்காரன் திரும்பி வரும்போது ஒரு கூடை நெல்லை மட்டுமே ஏற்றிக் கொண்டு வந்தான். அதைப் பார்த்த வியாபாரி அதிர்ச்சியானான். பண்ணையாரைப் பார்த்து 'என்னை ஏமாற்றி விட்டீர்களே' என முறையிட்டான்.

பண்ணையாரோ சிறிதும் அலட்டிக் கொள்ளாமல் ''நீர் சொன்ன மாதிரியேதான் நெல்லைக் கொடுத்து அனுப்பினேன். ஒரு கூடை நெல்லைக் காட்டி 'இது போதுமா?' என்றேன். 'போதும்' என்றீர். இப்போது வந்து தகராறு செய்கிறீரே, இதென்ன நியாயம்?'' என்று சூடாகப் பேசினார்.

வியாபாரிக்குப் பண்ணையாரின் தந்திரம் புரிந்துவிட்டது. தான் சொன்ன வார்த்தையைக் கொண்டு தன்னை ஏமாற்றுகிறார். இவருக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டுமென நினைத்தான்.

உடனே நீதிபதியிடம் சென்று வழக்குத் தொடுத்தான். முழு விபரத்தையும் சொல்ல நீதிபதி பண்



ணையாரின் மோசடித் தனத்தைப் புரிந்துகொண்டார். அவரிடம் இதுபோல ஏற்கெனவே பலர் புகார் கூறியிருந்தனர். ஆகவே பண்ணையாரை மடக்குவதற்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது என்று எண்ணியவராய் பண்ணையாரை வரவழைத்தார்.

வழக்கு ஆரம்பமாயிற்று. பண்ணையார் தாம் சொன்னதையே திரும்பத் திரும்ப சொன்னார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி பண்ணையாரிடம் "வியாபாரியின் மேல்தான் தவறு உள்ளது. சரியானபடி பேசி நெல்லை வாங்குவதற்கு அவருக்குத் தெரியவில்லை. ஆகவே அதற்கு தண்டனையாக அவர் வீட்டில் உமக்கு ஒரு மாத காலம் உணவளிக்கும்படி தீர்ப்பு வழங்குகிறேன். வியாபாரி எந்த அளவு சாப்பிடுகிறாரோ அதே அளவு உமக்கும் உணவளிக்க வேண்டும்" என்று தீர்ப்பு கூறினார்.

அதன்படியே பண்ணையார் வியாபாரியின் வீட்டில் சாப்பிட ஆரம்பித்தார்.


வியாபாரி ஒரு தட்டில் சிறிதளவே சோறு போடுவான். பண்ணையாருக்கும் அதே அளவு சோற்றைப் போடுவான். 'யானைப் பசிக்குச் சோளப் பொறி' என்பது போல வியாபாரி போட்ட உணவு பண்ணையாருக்குப் போதுமானதாக இல்லை. இரண்டு நாட்கள் சென்றதும் பசி வயிற்றைக் கிள்ளியதுடன் மனிதர் மிகவும் உடல் மெலிந்து, முகமும் வாடினார். போகிற போக்கைப் பார்த்தால் ஒரு மாத காலத்திற்குள் இறந்து விடுவோமோ என்ற பயம் மனதில் உண்டாயிற்று.

பண்ணையார் நீதிபதியைப் பார்த்து தனக்கு நேரும் கொடுமையை எடுத்துச் சொல்லி முறையிட்டார்.

நீதிபதியோ "தீர்ப்பு சொன்னால் சொன்னதுதான். அதை மாற்ற முடியாது. அதே அளவு சோற்றை உண்டு வியாபாரி வாழ்கிறான். உம்மால் அது ஏன் முடியாது?" என்று கேட்டார்.

பண்ணையார் தன் தவறைப் புரிந்து கொண்டார். நீதிபதியிடம் மேலும் வாதம் புரிந்தால் தான் பட்டினி கிடந்தே சாக வேண்டியதுதான் என்று நினைத்தார். நீதிபதியிடம் வியாபாரியை ஏமாற்றியதை ஒப்புக்கொண்டதுடன் இல்லாமல் அவருக்குரிய நெல்லைக் கொடுத்து விடுவதாகவும், இனிமேல் யாரையும் ஏமாற்றி பிழைக்கமாட்டேன் என்றும் உறுதியளித்தார். நீதிபதி மனமிரங்கி தீர்ப்பை மாற்றி அமைத்தார். அதன்படியே வியாபாரிக்கும் முழுமையான நெல் கிடைத்தது. பண்ணையாரும் திருந்தி வாழ்ந்தார்.

ஜெயகவிதா



காந்தியடிகளின் அரசியல் குரு

தமது குறைந்த ஊதியத்தில், தம் பிள்ளைகளைப் படிக்க வைத்து, அறிவாளர்கள் ஆக்க முயன்றார் ஒரு தந்தை. பிள்ளைகளும் தந்தையின் உழைப்பையும், ஊதியத்தையும் நன்கு அறிந்து, காசையும், காலத்தையும் வீணாக்காமல், நன்கு கற்றுத் தந்தைக்கு மகிழ்ச்சியூட்டினர்.

தம்பிக்கு வயது பத்து. அண்ணனுக்கு வயது பதினெட்டு. அப்போது, அந்த ஏழைத் தந்தையும் இறந்து விட்டார். குடும்பத்தைக் காக்கும் பொறுப்பினை அப்பாவுக்குப் பின்பு, அண்ணன் ஏற்றுக் கொண்டார். அப்பாவின் கொள்கைப்படி, தம்பியை நன்றாகப் படிக்க வைக்கும் உறுதியையும் ஏற்றுக் கொண்டார். அப்பா உயிருடன் இருந்து, தானும் படிக்க முடியவில்லையே என்ற வருத்தம் அவருக்கு இருந்தபோதும், தன் தம்பிக்கு அவ்வித வருத்தம் இருக்கக் கூடாது என்றே அவர் எண்ணினார். எப்பாடு பட்டாவது தம்பியை நன்றாகப் படிக்க வைக்க வேண்டும் என்று நினைத்த அண்ணனின் அன்பை நன்கு அறிந்துகொண்டு, படிப்பில் முன்பு இருந்ததைவிட மேலும் ஆர்வம் காட்டிப் படித்தான் தம்பி.

தந்தையின் மறைவுக்குப் பின்பு, ஓரிடத்தில், மாதம் பதினைந்து ரூபாய் சம்பளத்தில், வேலைக்குச் சேர்ந்த அண்ணன், அதில் எட்டு ரூபாயைத் தம்பியின் படிப்பிற்காக அனுப்பி வைத்தார். அண்ணன் அனுப்பிய எட்டு ரூபாயை வைத்துக் கொண்டு, வெளியூரில் தங்கி, ஒரு நாளைக்கு ஒரு வேளை மட்டுமே உண்டு, ஆர்வத்தோடு படித்து முன்னேறினான் தம்பி.

பள்ளி இறுதி வகுப்பில் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி அடைந்தான் தம்பி.

உயர்நிலைப் பள்ளிக் கல்வியோடு, தம்பியை நிறுத்திவிட எண்ணவில்லை அண்ணன். தன் தம்பி கல்லூரியிலும் சேர்ந்து, பெரிய படிப்பெல்லாம் படித்துப் பட்டம் பெற வேண்டும் என்று அண்ணன் விரும்பினார். தம்பியை மேலும் ஊக்குவித்தார். தம்பியின் நண்பர்களும் அவருக்கு ஆதரவாக



இருந்தனர். சிறிது நேரத்தையும் வீணே செலவழிக்காமல், பி.ஏ. பட்டம் பெற்றார் தம்பி. அண்ணன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அண்ணனை உயிர் உள்ளவரை, நன்றி மறவாமல் போற்றினார் தம்பி. அண்ணனை மட்டுமல்ல, தான் பிறந்த பொன்னாட்டையே, தன் இன்னு யிருக்கும் மேலாக எண்ணிப் போற்றினார் அந்தத் தம்பி.

அந்தத் தம்பிதான் கோபால கிருஷ்ண கோகலே. அண்ணனின் பெயர் கோவிந்தராவ் கோகலே. அவர்கள் தந்தையாரின் பெயர் கிருஷ்ண ராவ் கோகலே.

மராட்டிய மாநிலத்திலே, ஓர் ஏழைக் குடியிலே பிறந்தவர்தான் கோபால கிருஷ்ண கோலே. கோகலே நினைத் திருந்தால், நிறைய ஊதியம் கொடுக்கும் பணி ஒன்றில் அமர்ந்திருக்கலாம். தம் குடும்பத்தின் வறிய நிலையைத் துரத்தி அடித்திருக்கலாம். ஆனால் அவர், அவ் வாறு செய்யவில்லை. கல்வியின் பெரு மையை அவர், நன்கு உணர்ந்திருந்தார். அந்தக் கல்வி ஒளியை ஏழை எளிய வர்களுக்கு வழங்கும் சிறந்த பணியிலே, தம்மை ஈடுபடுத்திக் கொள்ளவே விரும்பினார். அதில் குறைந்த வருவாயே வந்தபோதும் . அறியாமை பிணி நீக்கும் ஆசிரியப் பணியே சிறந்த பணி என்று கொண்டார்.

பெர்கூசன் கல்லூரியிலே, பேரா சிரியராக அமர்ந்தார். பால கங்காதர திலகரும், அவர்தம் நண்பர்களும் சேர்ந்து, தன்னல நோக்கமின்றிப் பாடுபடும் தட்சிண கல்விச் சங்கத்தின் சார்பாக ஆரம்பிக்கப் பெற்ற கல்லூரி அது.

அங்கே, ஆயுட்காலம் வரை உழைப் போம் என்றும், சம்பளம் எழுபது ரூபாய் மட்டுமே பெற்றுக் கொள்வோம் என்றும் உறுதி கூறி உழைக்க முன் வந்த நல்ல வர்களுள் கோகலேயும் ஒருவரானார்.

தாம் வருந்தினாலும் பிறர் மகிழ்ச்சி அடைவதைக் காண விழைவதும், அதற்காக உழைப்பதும்தானே சிறந்த வாழ்க்கை. அந்தச் சிறந்த வாழ்க்கையை மேற்கொண்டு, பிற்காலத்தில் நாட்டு விடுதலைக்காக அரும்பாடு பட்டார் கோகலே. காந்தியடிகள் அவரையே, தம் அரசியல் குருவாக ஏற்றுக் கொண்டார்.

- எஸ். துர்கா காத்யாயனி,
பத்தாம் வகுப்பு,
புனித அலாய்சியஸ் மகளிர்

1000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவு

ஆகஸ்ட் மாதம் அறிவித்த போட்டியில் ஏராளமான பள்ளி மாணவ, மாண வியர் கலந்து கொண்டனர். அதில் பாதி பேர் சரியான விடைகளையும் அளித் திருந்தனர். சரியான விடை அளித்தவர் களிலிருந்து ஐந்து பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பரிசு பெற்றவர்கள்:

1. கே. மொய்தீன், ஒன்பதாம் வகுப்பு, அ.மே.நி.பள்ளி, நல்லூர்.
2. கே.வி. திவாகர், ஆறாம் வகுப்பு, அ.மே.நி.பள்ளி, தருமபுரி.
3. க. தனலட்சுமி, ஒன்பதாம் வகுப்பு, மகளிர் தேசிய மே.நி.பள்ளி, மயிலாடுதுறை.
4. ஸ்ரீவரலக்ஷ்மி, ஐந்தாம் வகுப்பு, ரோசரி மெட்ரிகுலேஷன் மே.நி. பள்ளி, மயிலாப்பூர், சென்னை.
5. ஜி. பாரதி, பத்தாம் வகுப்பு, டி.எம்.மே.நி.பள்ளி, நெல்லிக்குப்பம்.


சரியான விடைகள்:


1. அக்பர் - தீன் இலாஹி,
2. ஜோர்டான் - தினார்,
3. கங்காரு - மார்சுபியல்,
4. எல்லைகாந்தி - கான் அப்துல் கஃபார்கான்,
5. ரிவால்டோ - கால்பந்தாட்ட வீரர்,
6. இந்தோனேஷியா-ஜகார்தா.
7. தேன்கூடு, 8. ஜந்தர் மந்தர்.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.


உழைப்பிற்கு ஏற்ற பலன்!

வேணுவாரியத்






எஜமானரை எப்படி ஏமாற்றலாம்னு எனக்குத் தெரியும். நீ போய் வேலை செய்.
கறுப்புப் பன்றி நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த, பகல் முழுவதும் உழைத்தது.
கறுப்புப் பன்றி வேலையை முடித்து வயலை விட்டு வெளியே வர, வெள்ளைப் பன்றி வயலுக்குள் நுழைந்தது!
கடுமையாக உழைத்த மாதிரி எஜமானை முட்டாளாக்கி விடலாம்.
வெள்ளைப் பன்றி சேற்றுக்குள் புரண்டது.
கடுமையாக வேலை செய்தீர்களா?
ஆமாம். இருவரும் மிகவும் களைப்புற்று இருக்கிறோம்.



உழைக்காமல், ஏமாற்றி உண்டு களித்த வெள்ளைப் பன்றி மிகவும் குண்டானது.
ஒரு நாள் சங்குவுக்குப் பணம் தேவைப்பட்டது.
எப்படியாவது பணத்தைப் புரட்டியாகணும்.
ஒரு பன்றியை விற்றுவிட வேண்டியதுதான்.
இரண்டு நாட்களில் ஒரு வியாபாரி பன்றியை வாங்குவதற்கு வந்தார்.
நான் இதில் ஏதாவது ஒன்றை எடுத்துக் கொள்ளலாமா?
தாராளமா எடுத்துக்கலாம். ஆனால் பணம் அதிகமாகத் தரணும்.
நான் வெள்ளைப் பன்றியை எடுத்துக்கறேன். 20 செப்புக்காசுகள் தரேன்.
எனக்கு 25 செப்புக் காசுகள் வேண்டும்.


சரி. இதோ பெற்றுக் கொள்ளுங்கள்.
விவசாய வேலைகளுக்குப் பயன்படுத்தப் போறீங்களா?
இல்லை.
இந்தக் கொழுத்த பன்றி அந்த வேலைகளுக்குச் சரிப்படாதுன்னு நினைக்கிறேன்.
என் மகள் திருமணம் அடுத்த வாரம். விருந்துக்கு இதைப் பயன்படுத்தப் போறேன்.
SAI FEATURES, ALUVA-683101, KERALA
வெள்ளைப் பன்றிக்குச் சோம்பேறித்தனத்தாலும், ஏமாற்று புத்தியாலும் இந்த நிலை ஏற்பட்டது.
என் கடின உழைப்பும், நேர்மையும் என்னைக் காப்பாற்றி விட்டன.
சோம்பேறியே, சீக்கிரம் நட.
ராஜம்



7

பை க்குள் கைவிட்ட உதாரணம், அந்தப் பொருளை எடுத்து வெளியே போட்டான். எட்டணா அளவில் ஒரு டாலர் போல் இருந்தது அது.

அதைக் கையில் எடுத்துப் பார்த்த கனகசபை, முன்னும் பின்னுமாகப் புரட்டிப் பார்த்தார். "அட இது ஒரு டாலர்தான். இது என்னத்துக்கு ஆகும்?" என்றார்.

"சார், ஆதாரம் கேட்டீங்களே,

சின்னமனூர் சின்னப்பட்டாளம்



அதற்கு இது உதவலாம் என்றுதான் பத்திரப்படுத்தி வைத்தேன்'' என்றான் உதாரணம்.

''ஆதாரமா, இதுவா?'' என்று உதட்டைப் பிதுக்கினார் கனகசபை.

''சார், இது சிட்டழகைக் கடத்திக்கிட்டுப் போன கூட்டத்தில் ஒருவன் கழுத்தில் இருந்து விழுந்தது. இந்த டாலர் யாருதுன்னு கண்டுபிடித்தால் சிட்டழகைக் கடத்தியவர்களைக் கண்டுபிடிக்கலாம்தானே'' என்றான் உதாரணம்.

'அட இது நம்ம உதாரணம்தானா?' என்று ஆச்சரியப்பட்டுப் போனார்கள் நண்பர்கள்.

''யோசித்துப் பார்த்தால் நீ சொல்றதும் சரிதான். எதற்கும் இது என்னிடம் இருக்கட்டும். நான் என் மேலதிகாரிகளிடம் பேசிவிட்டு உங்கள் விஷயத்தில் நடவடிக்கை எடுக்கிறேன்.''

''இனி நாம் அடிக்கடி சந்திப்போம் என்றாலும் நம் சந்திப்பு ரகசியமாகவே இருக்கட்டும். யாருக்கும் சந்தேகம் வந்து விடக் கூடாது. குறிப்பாக உங்க பண்ணையாருக்கோ, அவங்க ஆட்களுக்கோ சிறிதும் சந்தேகம் வந்து விடக்கூடாது. எனவே எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும். உதாரணம் கொடுத்தது சின்ன டாலராக இருந்தாலும் பெரிய உதவியாக அமையும்னு நினைக்கிறேன். எதற்கும் நாம் மீண்டும் சந்திப்போம்'' என்று எழுந்து நின்று விடை கொடுத்தார் கனகசபை.

எல்லோரும் அவருடன் கை குலுக்கிவிட்டுப் புறப்பட்டனர். வாத்தியார் சுப்பிரமணி சொன்னார்: ''நீங்கள்ளாம் உதாரணத்தை அவ்வப்போது கிண்டல் அடிப்பதைப் பார்த்திருக்கிறேன். ஆனால் அவன் அமைதியாக இருந்து உருப்படியான காரியத்தைப் பண்ணி இருக்கிறான். இனி கிண்டலடிக்க மாட்டீங்களே'' என்றார்.

''இல்லை'' என்றனர் எல்லோரும் கோரஸாக.

உதாரணம் ''சே...சே... அப்படி எல்லாம் சொல்லாதீங்கடா. நீங்கள் கிண்டல் பண்ணினா நான் கோவிச்சுக்க மாட்டேன். நாம் எப்போதும் போல இருப்போம்'' என்றான்.

''இதுதான் நட்புக்கு அழகு'' என்றார் வாத்தியார். எல்லோரும் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு ரோட்டுக்கு வந்தனர்.

''நான் முன்னாடி போறேன். நீங்கள்ளாம் மெதுவாக வாங்க. எல்லாம் ஒண்ணா சேர்ந்து ஊருக்குள் போக வேண்டாம்'' என்ற வாத்தியார் புறப்பட்டார்.

''உதாரணம், நல்ல காரியம் செஞ்சே'' என்று அவன் கையைப் பிடித்துக்கொண்டான் கிட்டான். எல்லோருமே அவனை மாறி மாறி பாராட்டினர். முத்துக்குமாரும் செந்திலும் ''உன்னை ரொம்ப கிண்டலடித்து விட்டோமோ'' என்றனர்.

ரா.சுந்தரமூர்த்தி

''அதெல்லாம் இல்லடா. நீ இப்படி பேசுறதுதான் எனக்கு மனசுக்குக் கஷ்டமாக இருக்கு. நான் ஒண்ணும் செய்துடலை'' என்றான் உதாரணம்.

''இல்லை... சின்ன சின்ன விஷயங்

களிலும் கவனமாக இருக்க வேண்டும் என்று புரிந்துவிட்டது எங்களுக்கு'' என்றான் செந்தில்.

கண் விழித்துப் பார்த்தாள் சிட்டழகு. வெளிச்சம் மங்கலாக இருந்தது. சுவரில் இருந்த சில துளைகள் வழியே வெளிச்சம் உள்ளே வந்து கொண்டிருந்தது. இது ஒரு நிலவறையாக இருக்கலாம் என்று யூகித்தாள்.

கண்களை நன்றாகக் கசக்கிக் கொண்டாள். அந்த அகன்ற அறையில் நிறைய பெட்டிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. தரை எங்கும் தூசி படலம் படிந்து கிடந்தது. ஏதோ ஒரு மருந்து நெடி மூச்சை அடைத்தது.

அழுது, அழுது எப்போது தூங்கினோம் என்பது தெரியவில்லை அவளுக்கு. கன்னங்களில் நீர் வடிந்து காய்ந்து போய் பிசு பிசுத்துக் கிடந்தது. பாவாடை எடுத்து முகத்தை அழுந்த துடைத்துக் கொண்டாள்.

ஒரு காக்கா, குருவி சத்தம்கூட வெளியே இருந்து உள்ளே நுழைந்து விடாத இறுக்கமான சூழல் நிலவியது அங்கே. மெல்ல எழுந்து கதவு அருகில் சென்றாள். அதைத் திறக்க முயன்றபோது வெளிப்புறம் தாழ் இடப்பட்டிருந்தது புரிந்தது.

அவளுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. உள்ளே எத்தனை நாளாக இருக்கிறோம் என்பதும் புரியவில்லை. நண்பர்களும், அப்பா, அம்மாவும் எப்படி தவித்துக் கொண்டிருப்பார்கள் என்று நினைத்துப் பார்த்தபோது அழுகை வந்தது அவளுக்கு.

அது இரவா, பகலா என்றுகூட தெரியவில்லை. ஒளி வரும் சின்ன துளையைத் தவிர வேறு வழி எதுவும் இல்லை. தப்பிப்பது என்பது துர்லபம் என்பது மட்டும் புரிந்தது. அவர்களாக விடுவித்தால் தவிர வெளியே போகவே முடியாது.

சிறிது நேரம் ஆக ஆக பசி வேறு வயிற்றைக் கிள்ளியது. உள்ளே எங்காவது தண்ணீர் பானை இருக்கிறதா என்று தேடிப் பார்த்தாள். ஊஹூம், இல்லை. பெட்டிகள் எல்லாம் நன்றாக 'பேக்' செய்யப்பட்டிருந்தன. அதைத் திறக்க முயன்றாலும் சாப்பிட ஏதாவது இருக்கும் என்ற உத்திரவாதம் ஏதுமில்லை.

என்னவோ யோசித்தவளாய் கதவருகில் போய் படபடவென்று தட்டினாள். அவள் யூகித்தது சரிதான். ஆட்கள் காவலுக்காக வெளியே இருந்தனர்.

"ஏய்...ஏய்... நிறுத்து" என்று கத்தியபடியே நான்கு பேர் கதவைத் திறந்தனர். அவர்கள்



யார் என்று தெரியவில்லை. அவளைத் தூக்கி வந்தவர்கள் யாரும் அதில் இல்லை. எல்லாம் புதிய ஆட்களாக இருந்தனர். அவர்கள் உள்ளூர் ஆட்களும் அல்ல என்பதும் அப்பட்டமாகத் தெரிந்தது.

கரடு முரடாக இருந்த அவர்கள் "ஏன் கதவை இப்படி காட்டுத்தனமாகத் தட்டுறே?" என்று எரிச்சலோடு கேட்டனர்.

'தண்ணி' என்று சைகை காட்டினாள் சிட்டழகு.

"ஏய் தண்ணி கூட வைக்கலையாடா உள்ளே. முட்டாள் பசங்களா!" என்று கத்தினான் அவர்களில் பெரியவனாக இருந்த ஒருவன்.

"போடா, போய் தண்ணி கொண்டா!" என்று உத்திரவும் போட்டான்.

உள் அறை போலவே வெளியிலும் ஒரு அறை இருந்தது. இந்த அறை போலவே வேறு அறைகளும் அருகில் இருக்கும் போலும். வெவ்வேறு திசைகளில் கதவுகளும் இருந்தன. அது மைய அறையாக இருக்கலாம்.

அறையின் மூலையில் இருந்த படிக்கட்டை நோக்கி ஓடினான் ஒருவன்.

''ஏய் நில்லுடா. தண்ணி எதுல கொண்டு வருவே?'' என்றான் பெரியவன்.

''டம்ளர்ல'' என்றான் அவன்.



''முட்டாள், பெரிய ஜக்குல கொண்டா போ'' என்றான் பெரியவன். அவன் படிகளில் மேலேறி ஓடினான்.

''என்னை வெளியே விடுங்களேன். நானே போய் குடிச்சுக்கிறேன்'' என்றாள் சிட்டழகு அப்பாவியாய்.

''ரொம்ப புத்திசாலித்தனமா பேசுறே. உன்னை வெளியே விடவா நாங்கள் காவல் இருக்கோம்'' என்றான் ஒருத்தன்.

''உள்ளே போய் மூலையிலிரு. தண்ணி வந்ததும் கூப்பிடுகிறோம்'' என்றான் அவன்.

''ஏன் என்னை அடைச்சி வைச்சிருக்கீங்க?'' என்றாள் சிட்டழகு.

''அதெல்லாம் உனக்கு அனாவசியம். நாங்க இதுக்கெல்லாம் பதில் சொல்ல முடியாது. போ உள்ளே'' என்றான் அவன்.

மறுபடியும் ஏதோ பேச வாயைத் திறந்தாள் சிட்டழகு.

அதற்குள் ''முதல்ல அவளை உள்ளே தள்ளி கதவைச் சாத்துடா'' என்று கத்தினான் பெரியவன்.

''ஓடு உள்ளே'' என்று சத்தம் போட்டபடி கதவு சாத்தப்பட்டது.

ஐந்து நிமிடம் கழித்து கதவு திறக்கப்பட்டது. படியேறிப் போன அந்த ஆள் தண்ணீர் ஜக்குடன் உள்ளே வந்தான். அவன் கையில் ஒரு பொட்டலமும் இருந்தது.

''இதோ தண்ணி. இதுல டிபனும் இருக்கு. சாப்பிடு'' என்றான்.

''எனக்குச் சாப்பாடு வேண்டாம். நீயே எடுத்துக்கிட்டு போ'' என்றாள் சிட்டழகு.

''என்னது, சாப்பாடு வேண்டாமா? பட்டினி கிடந்து சாவாதே'' என்றான்.

''எனக்கு வேண்டாம்னா வேண்டாந்தான்'' என்றாள் அவள்.

''பீட்டர்'' என்று வெளியே நின்றவனுக்குக் குரல் கொடுத்தான் அவன்.

பீட்டர் உள்ளே நுழைந்து ''என்னடா?'' என்றான்.

''இவளுக்குச் சாப்பாடு வேண்டாமாம்.''

''ஏய் பொண்ணு, ஒழுங்கா சாப்பிட்டுட்டுத் தூங்கு. பிரச்னை பண்ணி சங்கடப்படுத்தாதே எங்களை எல்லாம். கோபம் வந்தா பொல்லாதவனாக ஆயிடுவேன்'' என்று உருமினான்.

''எனக்கு வேண்டாம்'' என்றாள் சிட்டழகு.

''ஏய் நாயே ஒழுங்கா சொன்னா கேட்க மாட்டே?'' என்று பெரும் குரல் எடுத்து அவன் கத்தியபோது கண்கள் சிவந்தன.

சிட்டழகு ஒருகணம் நடுங்கிப் போனாள்.

வெளியிலிருந்து வந்த மற்றொருவன் ''டேய், அவளை மிரட்டாதடா பயந்திடப் போறாள். மெதுவா சொல்லு'' என்றபடியே வந்தான்.

டிபன் பொட்டலாம் அவள் கையில் திணிக்கப்பட்டது. செய்வதறியாது விழித்தாள் சிட்டழகு.

''நீங்க வாங்கடா, அவ சாப்புடுவா'' என்றான் பெரியவன். அவர்கள் வெளியேறினர். கதவு 'படார்' என்று இழுத்து சாத்தப்பட்டது.

தோட்டத்தின் மையத்தில் ஒரு 'ஸ்டூல்' மீது சட்டை போடாமல் உட்கார்ந்திருந்தார் பண்ணையார். இரண்டு பேர் எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்தனர்.

எதிரில் நின்றிருந்தவர்களைப் பார்த்து ''அந்தப் பசங்க விஷயம் என்னாச்சுடா?''



"சீக்கிரம் ஒரு எலிப்பொறி கொடுங்க, நான் பஸ்ஸைப் பிடிக்கணும்..."

"பஸ்ஸைப் பிடிக்கிற அளவுக்குப் பெரிய எலிப்பொறி நம்ம கடையிலே இல்லீங்களே...!"

- தி. ஆர்த்தி, காங்கேயம்.

என்றார்.

"பசங்களை இருட்டில் பார்த்ததுதான். சரியா அடையாளம் தெரியலை. மறுபடி எதிலாவது வந்து மாட்டினா புடுச்சிடலாம்."

"வந்து மாட்டுவாங்கன்னு காத்துக்கிட்டு கிடங்க. அவனுங்களுக்கு என்ன பைத்தியமா? மறுபடியும் உங்ககிட்ட வந்து மாட்டிக்கிட்டு. புடுச்சிக்கோங்கன்னு சொல்றதுக்கு. உங்களுக்கு அறிவில்லை. அடையாளம் தெரியலைன்னு சொல்றீங்களே?" என்று ஆத்திரப்பட்டார்.

எல்லோரும் மௌனமாகவே நின்றனர்.

"இப்ப நில்லுங்க சிலை மாதிரி. ஒரு மண்ணுக்கும் துப்பில்ல. ஊர்ல என் தலை உருளுது. அவனவன் போலீசுக்குப் போகணும்னு பேசிக்கிட்டுத் திரியறான். அவங்களை எப்படி சமாளிக்கிறதுன்னு தெரியாமல் முழிக்கிறேன். சரி, மத்த வேலைகளாவது ஒழுங்காக நடக்குதா?"

"நடக்குது ஐயா"

"மறுபடியும் ஏதாவது வில்லங்கத்தக் கொண்டு வந்தீங்க, பிச்சு புடுவேன் பிச்சு. ஜாக்கிரதை...! அந்த பெண் எப்படி இருக்கா?"

"சாப்பிட மாட்டேன்னு அழுது ஆர்ப்பாட்டம் பண்றாளாம். காவலுக்கு இருக்கிற ஆள் வந்து சொன்னான். வேற ஒண்ணும் பிரச்னையில்ல. நாலு பேர் காவலுக்கு இருக்காங்க."

"ஒழுங்காகப் பார்த்துக்கச் சொல்லு. ஒரு வேலை இருக்கு. அது முடிந்ததும் அவளை ரிலீஸ் பண்றதைப் பத்தி யோசிக்கலாம்... சரி, சரி போய் வேலையைப் பாருங்க" என்று அவர்களை வழியனுப்பி வைத்தார் பண்ணையார்.

பண்ணையாருக்கு ஊரில் நிறைய தோப்புகள் இருந்தன. அதில் யாரும் அவ்வளவு சுலபமாக நுழைந்துவிட முடியாது. எல்லா இடங்களிலும் கண்காணிப்பு இருந்தது.

கனகசபை கம்பீரமாக ஸ்டேஷனுக்குள் நுழைந்தார். எல்லோரும் எழுந்து நின்று சல்யூட் அடித்தனர். பதிலுக்கு மரியாதை தெரிவித்துவிட்டு, தன் இருக்கை நோக்கி நடந்தார் அவர். பையில் வைத்திருந்த டாலரை எடுத்து மேசையின் மேல் வைத்தார். அது களிம்பு ஏறிப்போய் அழுக்காய் இருந்தது.

"யோவ் 847 இங்க வாய்யா" என்றார்.

ஒரு கான்ஸ்டபிள் வந்து "என்னங்க ஐயா?" என்றார்.

"போய் வீராபுரம் கேஸ் பைலை எடுத்துக்கிட்டு வா."

சிறிது நேரத்தில் பைலைக் கொண்டு வந்தார் அவர்.

பக்கங்களைப் புரட்டிக்கொண்டு வந்தார் கனகசபை. அதில் எழுதி இருந்தவற்றைப் படிப்பதைவிட அதில் உள்ள புகைப்படங்களிலேயே அவரது கவனம் இருந்தது. ஒவ்வொன்றாகக் கூர்ந்து பார்த்துக் கொண்டே வந்தார். அவர் தேடும் விஷயம் அதில் புலப்படவேயில்லை. பைலை மூடி மேஜையில் வீசிவிட்டு, யோசனையில் ஆழ்ந்தார்.

அதற்குள் ஒரு போலீஸ்காரர் வந்து மேலதிகாரி கூப்பிடுவதாகக் கூறினார்.

எழுந்து அருகில் இருந்த அதிகாரியின் அறைக்குள் நுழைந்தார் கனகசபை.

"வாங்க மிஸ்டர் கனகசபை. ஏதேனும் புது விஷயம் உண்டா?"

"சார், நேற்று ஒரு புதுத் தகவல் வந்தது. அன்அபிஷியலான புகார்தான் அது. என்றாலும் அதைச் சாதாரணமாக நினைத்து ஒதுக்க முடியலை. அதுதான் யோசித்துக் கொண்டிருந்தேன். அதற்குள் நீங்கள் கூப்பிட்டுட்டீங்க."

"உட்காருங்க. எனக்கு ஒரு ஆர்டர் வந்திருக்கு. மேலிடத்தில் இருந்து ரிப்போர்ட் கேட்டிருக்காங்க. விஷயம் கிரிட்டிக்கலா இருக்கறதுனாலே அதை உங்கக்கிட்ட ஒப்படைக்கலாமுன்னு நினைச்சேன்."


மேஜையில் இருந்த டெலிபோன் அலறியது. அதை எடுத்துப் பேசத் தொடங்கினார் அதிகாரி. பேசப் பேச அதிகாரியின் முகம் அதிர்ச்சியில் உறைந்தது.

(தொடரும்)

திமிங்கிலங்கள்

— பிரசாத்

ஐந்து பேருந்துகளின் நீளமும் முப்பது பெரிய யானைகளின் எடையும் கொண்ட உயிரினம் நம் பூமியில் வாழ்கிறது என்றால் உங்களால் நம்ப முடிகிறதா? இது முற்றிலும் உண்மை. அந்த மிகப் பெரிய பிராணி நீலத் திமிங்கிலம்தான்! நீரில், நிலத்தில் வாழக் கூடிய பிராணிகள் எல்லாவற்றிலும் பெரியது. இதன் நாக்கு மட்டும் ஒரு யானையின் எடை இருக்கும். இதயம் ஒரு மோட்டார் காரை விடப் பெரியது. பிறந்த குட்டி ஆறு மீட்டர் நீளமும் ஒரு நீர்யானையின் எடையுடனும் காணப்படும். உருவம் பெரிதாக இருந்தாலும் இது தீங்கு செய்யாத பிராணி. மிதவை உயிரினங்களும் சிறிய கடல் வாழ் உயிரினங்களுமே நீலத் திமிங்கிலத்தின் உணவு.



• நீலத் திமிங்கிலம்

அதிக சத்தம் செய்யக் கூடிய பிராணி இது. இதன் ஒலி ஜெட் இஞ்ஜின் சத்தம் அளவு இருக்கும். ஒலி காற்றை விட நீரில் வேகமாகப் பயணிக்கிறது. நீலத் திமிங்கிலத்தின் ஒலியை 100 கிலோ மீட்டர் தூரம் வரை கேட்க முடியும்.


திமிங்கிலங்கள் சில விஷயங்களில் மீன்களை ஒத்திருந்தாலும் பாலூட்டி வகையைச் சேர்ந்தவை. மனிதனைப் போல வெப்ப ரத்த பிராணி.

திமிங்கிலத்தின் மூதாதையர் நிலத்தில் வாழ்ந்த நாயின் உருவத்தை ஒத்த ஒரு பிராணி என்கிறார்கள். அந்தப் பிராணி பல கோடி வருடங்களுக்கு முன் பரிணாம வளர்ச்சியடைந்து கடலுக்குள் சென்று விட்டது. அதுதான் திமிங்கிலம்.




• திமிங்கிலத்தின் மூதாதையர்


திமிங்கிலம் கடல் வாழ் உயிரினங்களில் செட்டசன் பிரிவைச் சேர்ந்தது. இதில் டால்ஃபின்களும் கடற்பன்றிகளும் அடக்கம். டால்ஃபின்களில் 37 வகைகளும், கடற்பன்றிகளில் 6 வகைகளும் உள்ளன. திமிங்கிலம் மீன்களைப் போல் நீரில் வாழ்ந்தாலும் நுரையீரல் மூலம் தான் சுவாசிக்கின்றது. இதற்கு மூக்கு என்று தனியான உறுப்பு கிடையாது. தலையின் உச்சியில் மூச்சுத் துவாரங்கள் உள்ளன.



ஸ்பெர்ம் திமிங்கிலம் தண்ணீருக்கு அடியில் இரண்டு மணி நேரம் கூட மூச்சை அடக்கிக் கொண்டிருக்கும். மற்ற திமிங்கிலங்கள் சில நிமிடங்களுக்கு ஒருமுறை தண்ணீர் மட்டத்துக்கு மேலே வந்து மூச்சு விடுகின்றன.




சில வகை திமிங்கிலங்களுக்கு எதிரொலிக்கும் சத்தத்தைக் கிரகித்துக் கொள்ளும் தன்மை அதிகம் உண்டு. இந்த ஒலி அலைகளை வைத்து தங்கள் அருகில் வரும் பிராணியின் உருவம், தன்மை, எவ்வளவு தூரத்தில் வருகிறது, எதிரியா, உணவா? என்பதையெல்லாம் இவற்றால் அறிந்து கொள்ள முடிகிறது.




விஞ்ஞானிகள் திமிங்கிலங்களை இரண்டு பிரிவாகப் பிரித்துள்ளனர். ஒன்று பல் திமிங்கிலம். மற்றது தாடை எலும்புடைய திமிங்கிலம்.

• பல்ஹெட் திமிங்கிலம்




தாடை எலும்புடைய திமிங்கிலம் மிகச் சிறிய உயிரினங்களைச் சாப்பிடக் கூடியது. சீப்பு போல் மேல் தாடையில் எலும்புகள் அமைந்துள்ளன. இவ்வகை திமிங்கிலங்கள் நிறைய தண்ணீரை வாய்க்குள் இழுத்து அதில் வரும் உயிரினங்களை வடிகட்டிச் சாப்பிடுகின்றன.




• பிரைட்ஸ் திமிங்கிலம்

இந்தத் திமிங்கிலம் தண்ணீரை வாயிலிருந்து தாடை எலும்பு வழியாக வெளியேற்றுகிறது.




• ஹம்பேக் திமிங்கிலம்




தாடை எலும்புகள் வடிகட்டியைப் போல் செயல்படுகின்றன.

• ஃபின் பேக் திமிங்கிலம்



பல் உடைய திமிங்கிலங்களுக்கு வரிசையாகப் பற்கள் அமைந்திருக்கும். இந்த வகையில் டால்ஃபின்கள், பெலுகா மற்றும் பைலட் திமிங்கிலங்கள் அடங்கும். பல் இருக்கும் திமிங்கிலங்களில் மிகப் பெரியது ஸ்பெர்ம் திமிங்கிலம். இது 26 மீட்டர் நீளமும், 30 டன் எடையும் கொண்டது. ஸ்பெர்ம் திமிங்கிலத்துக்குக் கீழ்த் தாடையில் மட்டும்தான் பற்கள் உண்டு. இந்தப் பற்கள் 20.செ.மீ. நீளம் இருக்கும். இது மீன்கள் உள்பட பல வகை உணவுகளையும் சாப்பிடுகிறது. 3000 மீட்டர் ஆழம் வரை சென்று ஆக்டோபஸ், சிப்பி மீன்களைப் பிடித்து சாப்பிடுவது என்றால் இதற்கு விருப்பம் அதிகம். ஸ்பெர்ம் திமிங்கிலம்தான் மிகப் பெரிய மூளை உள்ள பிராணி.




• ஸ்பெர்ம் திமிங்கிலம்


• ஸ்பெர்ம் திமிங்கிலத்தின் பல்

• கடல் பன்றியின் பல்

• டால்ஃபின் பல்




• ஆர்கா (கொலைகாரத் திமிங்கிலம்)




ஆர்கா திமிங்கிலத்துக்குக் கொலைகாரத் திமிங்கிலம் என்று பெயர் வந்ததற்குக் காரணம் அது சாப்பிடும் விதம்தான். இது 9 மீட்டர் நீளம் வரை வளரும். கூட்டமான மீன்கள், சீல்கள், மற்ற திமிங்கிலங்களை வேட்டையாடி சாப்பிடக் கூடியது.

சில வகை திமிங்கிலங்கள் ஆபத்தான பற்களைக் கொண்டவை. நார்வல் திமிங்கிலம் அந்த வகையைச் சேர்ந்தது. இதற்கு நீளமான தந்தம் உண்டு. இந்தத் தந்தத்தின் நீளம் 2.7 மீட்டர். தந்தம் உண்மையில் திமிங்கிலத்தின் பல்தான்! இதே போல் வித்தியாசமான பல்லுடைய மற்றொரு திமிங்கிலம் ஸ்ட்ராப். இதற்கு இரண்டு தட்டையான, வளைந்த பற்கள் கீழ்த்தாடையில் முளைத்திருக்கும்.




நீளமான பல்,
திமிங்கிலம் உணவைப் பிடிக்கவும்
எதிரியை மிரட்டவும் பயன்படுகிறது.

திமிங்கிலங்கள் மனிதர்களுக்குப் பல விதங்களில் பயன்படுகின்றன. அதனால் அதிகமாக வேட்டையாடப்பட்டு வந்தன. திமிங்கிலங்களின் கொழுப்பு மெழுகுவர்த்தி மற்றும் சோப் தயாரிக்கப் பயன்படுகிறது. தாடை எலும்பு அலங்காரப் பொருட்கள் செய்யப் பயன்படுகிறது. திமிங்கில மாமிசத்தையும் மனிதன் உணவாகப் பயன்படுத்திக் கொண்டான்.



பெரிய கப்பல்கள், போர் – ராணுவக் கப்பல்கள், எண்ணெய் கப்பல்கள் மற்றும் கடலில் கலக்கும் கழிவுகளால் ஆயிரக்கணக்கான திமிங்கிலங்கள் இறந்து போயின. தற்போது திமிங்கில வேட்டை தடைசெய்யப்பட்டுள்ளது. திமிங்கிலங்களை நாம் பாதுகாக்காவிட்டால் உலகிலேயே மிகப் பெரிய பிராணியை எதிர்கால சந்ததி பார்க்க முடியாமல் போய்விடும்.



கர்நாடகத்தில் பானு நகரத்தை வல்லவராஜா ஆண்டு வந்தான். அவனுக்குப் பிறந்த குழந்தை, பிறக்கும் போதே செவிடு, ஊமை, குருடாகப் பிறந்திருந்தான். அதோடு உடலெல்லாம் கொப்புளங்கள். அரசி கமலாவதி இது கண்டு மிகுந்த துயரம் கொண்டாள். குழந்தைக்குத் தட்சன் என்று பெயர் சூட்டினர். குழந்தையின் குறைகள் தீர நாடெங்கிலுமுள்ள வைத்தியர்கள் வரவழைக்கப் பட்டனர். பொருள் செலவழிந்ததே தவிர எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை!

தட்சனுக்குப் பன்னிரண்டு வயதாயிற்று. தட்சனைத் தொடவே தாதிகள் அருவருப்புற்றனர். 'அரசனும், அரசியும் என்ன பாவம் செய்தனரோ' என்ற அவப் பேச்சுகள் நாடெங்கிலும் எழுந்தன. இதனால் வெறுப்புற்ற மன்னன் மனைவியையும், தட்சனையும் வெகு தொலைவிலுள்ள அடர்ந்த காட்டில் விட்டு வர உத்தரவிட்டான்.

கொள்ளையர்கள் அவர்களின் ஆபரணங்களைப் பறித்துக் கொண்டனர். தட்டுத் தடுமாறி மகனை அழைத்துக் கொண்டு குண்டினபுரம் வந்து சேர்ந்தாள் கமலாவதி. ஊருக்கு வெளியே இருந்த கோயிலில் தங்கி பிச்சை எடுத்து மகனைக் காப்பாற்றி வந்தாள்.

ஒருநாள் தட்சன், "அம்மா! தனியாக இருக்கப் பயமாக இருக்கிறது. நானும் உன் கூட வருகிறேன்" என்று பிடிவாதம் பிடித்தான். கமலாவதி மகனை அழைத்துக் கொண்டு பிச்சைக்குச் சென்றாள்.

எதிரே முற்கலமுனிவர் வந்தார். கமலாவதி மகனை அவரை நமஸ்கரிக்கச்

ஆண்டி அரசனானான்!

ஆர்.பொன்னம்மாள்

சொல்லி தானும் அவரை வணங்கினாள். அப்போது காற்று பலமாக வீசியதால் அவரது மேலாடை பறந்து நமஸ்கரித்துக் கொண்டிருந்த தட்சன் உடலைப் போர்த்தியது. அக்கணமே தட்சன் உடலிலிருந்த புண்கள் மறைந்தன. கண்கள் தெரிந்தன. 'குழந்தாய் எழுந்திரு' என்ற முனிவரின் சொற்கள் நன்றாகக் காதில் விழுந்தன.

''அம்மா, என்னால் பேச முடிகிறது'' என்றான் தட்சன். கமலாவதி அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை! 'எல்லாம் முற்கல முனிவரின் அருள்' என்று கொண்டாடினாள். ஊரார் அவர்களுக்கு நல்ல ஆடைகளைக் கொடுத்தனர்.



கமலாவதி, முனிவரிடம், "ஸ்வாமி! என் கணவர் பானுதேசத்து அரசர். அருவருப்பாயிருந்த மகனைக் காட்டில் கொண்டு விடுவோம் என்றார். செவிடும், குருடும், ஊமையுமாகப் பிறந்த அவன் எப்படி பிழைப்பான் என்று நான் தடுத்து வந்தேன். அதனால் அவனோடு சேர்த்து என்னையும் விரட்டி விட்டார். மறுபடியும் தேடிப் போக என் தன்மானம் இடம் கொடுக்கவில்லை! என் மகனுக்குப் படிப்பில்லை. அரச கலைகள் எதுவும் தெரியாது. இப்படியிருக்க அவன் புகழோடு வாழ வேண்டும் என்று என் பெற்ற மனசு துடிக்கின்றது. தாங்கள் தான் வழிகாட்ட வேண்டும்" என்று பிரார்த்தித்தாள்.

''அம்மணி! மூலமுதற் கடவுள் விநாயகர். விக்னங்களைத் தகர்த்தெறியக் கூடியவர். 'ஓம் கணேசாய நம:' என்று சொல்லிக் கொண்டே இருவரும் கடமையைச் செய்யுங்கள். விநாயகர் அருளால் சகல சௌபாக்கியங்களும் கிட்டும்"

என்றருளினார் முனிவர்.

கௌண்டின்யபுரம் என்ற ஊரிலே ஒரு விநாயகர் கோயிலைச் சுத்தப்படுத்தி, நந்தவனத்திலிருந்து பூப்பறித்து மாலை தொடுத்து, சந்தனம் அரைத்து அபிஷேகம் செய்து, தாங்கள் சமைப்பதை நிவேதனம் பண்ணி முடிந்த உபகாரங்களை ஊராருக்குச் செய்து பன்னிரண்டு ஆண்டுகள் வாழ்ந்தனர்.

தட்சன் அழகிய வாலிபனானான். ஒரு ஆசிரியரிடம் கல்வி கற்றிருந்தான். யானையேற்றம், குதிரை சவாரி, மல்யுத்தம், கத்திச் சண்டை இவற்றிலும் பயிற்சி பெற்றிருந்தான்.


கௌண்டின்யபுரத்தின் வேந்தன் சரித்திர சேனன் நோய் கண்டு மடிந்தான். அவனுக்குச் சந்ததி இல்லாததால் ஈமச் சடங்குகள் முடிந்ததும் கஜபூஜை செய்து, பட்டத்து யானையிடம் மாலையைக் கொடுத்து அனுப்பி வைத்தனர். யானை ஊரெல்லாம் சுற்றி விட்டுப் பிள்ளையார் கோயிலில் மாலை கட்டிக் கொண்டிருந்த தட்சன் கழுத்தில் மாலையைப் போட்டுத் தும்பிக்கையால் தூக்கி முதுகில் வைத்துக் கொண்டது.

கமலாவதியின் சந்தோஷத்தைச் சொல்லி முடியாது. "கணேசாய நம:' என்று ஒரு மாமாங்கமாகப் பொறுமையோடு சொன்ன தவம், கணேசரே யானை வடிவிலே வந்து மாலையைப் போட்டு அரச பதவியைக் கொடுத்துட்டார்" என்று சந்தோஷப்பட்டாள்.

'முற்கலமுனிவரே தனக்கு முடிசூட்ட வேண்டும்' என்று தீர்மானமாகச் சொன்னான் தட்சன். இதையெல்லாம் கேள்விப்பட்ட வல்லவராஜன் மகனின் முடிசூட்டு விழாவுக்கு வந்து சேர்ந்தான்.

தந்தையை எதிர்கொண்டழைத்து பாதங்களில் விழுந்து ஆசிபெற்றுக் கொண்டான் தட்சன். வீரசேனன் என்ற அரசன் தன் ஒரே மகளை முடிசூட்டு விழாவன்று திருமணமும் செய்து கொடுத்தான்.

குறுக்கெழுத்துப் புதிர் விடை




1 சி	வ	த	னு	சு		ல்	லா	2 பு
று				டா		ட		த்
து		ல்		ட்		ண்		த
ளி		3 வி	த	4 ப		5 சு	வ	ர்
ம்	ன	6 சி		7 கா	ளா	ன்		க்
ற		க்		ம்		8 வா		டி
ற்		க		ப				ர்
9 கு	ர	ல்		ஸ்	ப	டோ	க்	10 ஆ

வலையில் சிக்கியவை

பலம் வாய்ந்த மிருகம் எதுு?

இந்த மாதம் முதலில் சில ஜோக்ஸ் ரசிக்கலாமா?

ஒரு பெண்மணி, தன் கணவரிடம், தங்கள் வீட்டு நாய் பற்றி ரொம்பப் பெருமையாகக் கூறினாள்.



''தினமும் காலையில், நான் கதவின் தாழ்ப்பாளைத் திறந்தவுடன் வெளியில் பாய்ந்து சென்று, நியூஸ் பேப்பரைக் கவ்விக்கொண்டு வந்து விடுகிறது.''

கணவன், ''இதிலென்ன அதிசயம். பழக்கப்படுத்திய வீட்டு நாய்கள் எல்லாமே இதைச் செய்யுமே!''

அதற்கு மனைவி சொன்னாள்: ''ஆனால், நாம் பேப்பர் வாங்குவதை நிறுத்தி, பல மாதங்களாகிறதே!''

காட்டில் ஒரு புலி இருந்தது. ஒருநாள் காலை எழுந்ததும், உறுமியபடி, தன் குகையைவிட்டு வெளியில் வந்தது.எதிரில் தென்பட்ட நரியிடம், ''நரியே! மிகவும் பலசாலியான மிருகம் எது?'' என்று கேட்க, பயந்து போன நரி, ''வேறு யார்! நீங்கள்தான்!'' என்றது.

அடுத்து, எதிரில் வந்தது மான். அதனிடமும் அதே கேள்வியைப் புலி கேட்க, ''நீங்களே பலசாலி!'' என்றது மான்.

அடுத்து, ஒரு குரங்கிடம் கேட்க, அதுவும் இதே பதிலைச் சொன்னது.

கடைசியில் ஒரு யானையிடம் ''யார் பலசாலியான மிருகம்?'' என்று அதிகாரத்துடன் கேட்டது புலி. அடுத்த விநாடி, தன் தும்பிக்கையால், புலியை அப்படியே பிடித்து, ஒரு சுழற்றி சுழற்றி தரையில்






''கால் இல்லாத நாயை என்ன பெயர் சொல்லி அழைப்பது?''

''என்ன பெயர் சொல்லி அழைத்து என்ன பிரயோஜனம். அதனால் நடந்து வர முடியாதே!''

ஓங்கி அடித்தது. மறுபடியும் இன்னொரு அடி. அவ்வளவுதான் புலியால் எழுந்திருக்க முடியவில்லை.

மெதுவான குரலில், யானையைப் பார்த்து புலி கேட்டது: "கேட்ட கேள்விக்குப் பதில் தெரியவில்லை என்றால், தெரியாது என்று சொல்ல வேண்டியதுதானே! எதற்கு ஆத்திரப் பட்டு, என்னைப் போட்டு, இப்படி அடித்து, துவைத்து எடுக்க வேண்டும்?"




படத்தில் உள்ள பன்றிக் குட்டி முகத்தைப் பாருங்கள்! ஆமாம்! உண்மையில் இது ஒரு முட்டைக்கோஸ் தான்!

ஒரு புள்ளி விவரம் பார்க்கலாமா?

இன்று உலகம் முழுவதும் இன்டர்நெட் மிகவும் பிரபலமாக இருக்கிறது. இந்த இன்டர் நெட்டை, யார் மிக அதிகமாகப் பயன்படுத்து கிறார்கள் என்பது குறித்த ஒரு புள்ளி விவரம் இதோ:

வட அமெரிக்கா : 82%



ஐரோப்பா : 10%

ஆசியா : 2 %

தென் அமெரிக்கா : 0.6%

ஆப்ரிக்கா : 0.4%

இன்டர்நெட்டைப் பயன்படுத்து கிறவர்களில் ஆண்கள் 32%தான். பெண்கள்: 68%.

அடுத்து சில கேள்விகள்: அவற்றுக்கு வித்தியாசமான கோணத்தில் யோசித்து பதில் சொல்லுங்கள் பார்க்கலாம்!

1) ஆர்டிக் பிரதேசத்தில் வசிப்பவர் கள், எப்படிப்பட்ட சூழ்நிலையிலும், பெங்குவின் முட்டையையோ, இறைச்சியையோ சாப்பிட மாட் டார்கள். ஏன்?

2) ஒரு மூலையில் அழுத்த மாய் உட்கார்ந்து கொண்டு, உலகத்தில் எந்தப் பகுதிக்கும் மிகச் சுலபமாகச் சென்று விடக்கூடியது எது?

3) ஒரே கேள்வியை, நாள் முழுக்க கேட்டுக் கொண்டே இருந்தாலும் கூட, வெவ்வேறு வித மான விடைகள் வரும். ஆனால் அத்தனையும் சரியான விடைகள்தான். அப்படிப்பட்ட கேள்வி எது?

4) அப்பா காளைமாடு தினமும் ஐந்து லிட்டர் தண்ணீர் குடிக்கும். அதன் குட்டி காளைமாடு இரண்டு லிட்டர் குடிக்கும். அப்படியெனில் அம்மா காளைமாடு எத்தனை லிட்டர் தண்ணீர் தினமும் குடிக்கும்?

விடைகள்:

1) ஆர்டிக் பிரதேசத்தில் பெங்குவின்களே கிடையாது. பெங்குவின்கள் வசிப்பது அண்டார்டிக் பிரதேசத்தில்தான்.

2) தபால் தலைதான்.

3) இப்போது நேரம் என்ன?

4) காளை மாட்டில் பெண் ஏது?

- கௌதம் ராம்

ஓவியப் போட்டி
முடிவுகள்!

தேவாலயம்

செப்டெம்பர் இதழில் 'சர்ச்' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஐந்து தேவாலயங்கள் இங்கே அணி வகுத்துள்ளன.



முதல் பரிசு :
எஸ்.ஜெயலக்ஷ்மி,
பதினோராம் வகுப்பு,
அரசினர் மேல்நிலைப் பள்ளி, ஆர்.கே.பேட்டை,
திருவள்ளூர் மாவட்டம்.



இரண்டாம் பரிசு :
சி.டி. இலக்கியா, பத்தாம் வகுப்பு,
தூய ஜோசப் மெட்ரிகுலேஷன் பள்ளி,
கோவை.




மூன்றாம் பரிசு :
த். மாரிமுத்து, பத்தாம் வகுப்பு,
எம்.கே.வி.கே. மெட்ரிக் பள்ளி,
தென்காசி.

ஆறுதல் பரிசு :
ரா.விஷால், எட்டாம் வகுப்பு, ஜவஹர்
வித்யாலயா, அசோக் நகர், சென்னை.



ஆறுதல் பரிசு :
ஆர். அனந்து,
மூன்றாம் வகுப்பு,
எம்.சி.எம்.ஹெச்.எஸ். பள்ளி,
ஆதம்பாக்கம், சென்னை




எங்கள் ஊரில் நடந்தது

சீனி மேல் எறும்பு!

ஏன்?

பக்கத்து வீட்டுச் சிறுவனும் தம்பியும் அமர்ந்து தாயம் விளையாடிக் கொண்டிருந் தனர். பக்கத்து வீட்டுச் சிறுவன் தாய




ஆட்டத்தின் சுவாரஸ்யத்தால் தன் காலில் மொய்க்கும் எறும்புகளைக் கவனிக்க வில்லை! இதை அருகில் இருந்து கவனித்துக் கொண்டிருந்த இன்னொரு பையன் ''டே சீனி மேல் எறும்பு மொய்க்குதுடா!'' என்றான். உடன் விளையாடிக் கொண்டிருந்த தம்பி '' 'சீனி' மேல எறும்பு மொய்க்காமல் ஏண்டா உன் மேலயா மொய்க்கும்?'' என்று சொன்ன வுடன் அங்கே சிரிப்பலை எழுந்தது.

- ப.காளிதாசன், நீர்விளங்குளம்

பாக்கு...

அடுத்தவீட்டுச் சுட்டிப் பையன் அஜித். அவனது தாத்தா செய்தித்தாள்




படிக்கும்போது இவனும் அருகில் நின்று எழுத்துக் கூட்டிப் படிப்பது வழக்கம். ஒவ்வொரு தலைப்புச் செய்தியையும் முழுமையாகச் சத்தம் போட்டு வாசிப்பான். ஒரு நாள் 'பாக்.குடன் பேசப்போவதில்லை - பிரதமர்' என்று நாளிதழில் கொட்டை எழுத்துகளில் அச்சாகியிருந்ததைச் சத்தம் போட்டுப் படித்தவன் தனது தாத்தாவிடம் ''தாத்தா நீங்களும் இனிமேல் வாயில் பாக்குப்போட்டுக்கிட்டுப் பேசாதீங்க'' என்றான். நாங்களெல்லாம் 'களுக்'கென்று சிரித்துவிட, தாத்தா அவனிடம், ''பாக் என்றால் பாகிஸ்தானைக் குறிக்கும்'' என்று விளக்கினார்.

- பிரசன்னா, தஞ்சாவூர்

வியர்க்குது

சமீபத்தில் இந்திய-இங்கிலாந்து அணி




களுக்கு இடையிலான ஒரு தின இறுதி போட்டியில் இந்தியா வென்றதும், இந்திய கேப்டன் கங்குலி சட்டையைக் கழற்றி வீசினார் அல்லவா? இந்தியா வென்ற மகிழ்ச்சியில் நாங்கள் சந்தோஷ குரலிட அப்போது எழுந்த என் தம்பி தூக்கக் கலக்கத்தில் ''பாவம்! கங்குலிக்கு ரொம்ப வியர்க்குதுபோல, அதுதான் இப்படி விசுறுகிறார்?'' என்றான். நாங்கள் அவனது

பேச்சைக் கேட்டு இரட்டை மகிழ்ச்சியில் சிரித்தோம்.

- பெ. நடராசன், பத்தாம் வகுப்பு
ஸ்ரீசேதுமாணிக்கம் உயர்நிலைப் பள்ளி,
மேலச்சீத்தை, இராமநாதபுரம்.

இட்லி

என் தங்கை மினுவுக்கு இட்லி என்றாலே சுத்தமாகப் பிடிக்காது. வீட்டில் இட்லி அவித்தால் சரியாகச் சாப்பிடமாட்டாள். எனவே, ஒரு நாள் எங்கள் அம்மா



அவளிடம், "உனக்கு அஞ்சு வயசாகுது. ஒரு வயசுக்கு ஒரு இட்லின்னா கூட இன்னிக்கு நீ அஞ்சு இட்லி சாப்பிடணும்" என்றார். அதைக் கேட்டவுடன் மினு, "அப்படீனா தாத்தாவுக்கு எண்பது வயசாகுது. அவர் என்ன எண்பது இட்லியா சாப்பிடுறார்?" என்று கேட்டாள். உடனே நாங்கள் அனைவரும் சிரித்துக் கொண்டிருந்ததில் இட்லி ஆறிவிட்டது.

- எம். வினோத், விருத்தாசலம்

விடுகதை

எங்கள் பாட்டியிடம் விடுகதை கேட்டுக் கொண்டிருந்தோம். அப்போது எங்கள் பாட்டி சொன்ன விடுகதைக்கு விடை சொன்னால் 'எட்டுகட்டு வெற்றிலை பரிசு' என்று விடுகதைப் பாட்டிலேயே வந்தது. விடை தெரியாமல் நான் முழித்து கொண்டிருக்க என் தம்பி, "வெற்றிலைதான் நான் சாப்பிட மாட்டேனே; நான் விடையும் சொல்ல வேண்டாம், பரிசும் வேண்டாம்"



என்று சமாளித்து விட்டு விளையாடச் சென்றுவிட்டான்.

- பாண்டியம்மாள், பத்தாம் வகுப்பு,
ஸ்ரீசேதுமாணிக்கம் உயர்நிலைப் பள்ளி,
மேலச்சீத்தை, இராமநாதபுரம்.

படிப்பு...

அம்மா டீ.வி. பார்த்துக் கொண்டே தெரியாமல் ஒரு புத்தகத்தை மிதித்து விட்டார். அம்மா அதைத் தொட்டுக் கும்பிடாமல் மேஜை மேல் எடுத்து வைத்தார்.




அதைப் பார்த்த என் தங்கை ஸ்ரீமதி, "புத்தகத்தைக் கும்பிடாமல் எடுத்து வச்சிட்டீங்களே, சாமி கண்ணைக் குத்தும்" என்றாள். உடனே அம்மா "நான்தான் இப்ப பள்ளியில் படிப்பதில்லையே" என்றார். "பள்ளிப் புத்தகம் படிக்காவிட்டால் என்ன? கோகுலம், கல்கி, விகடன் படிக்கும்போது சாமி கண்ணைக் குத்தும்" என்றாளே பார்க்கலாம்! அனைவரும் சிரித்து விட்டோம்.

- ஜி.கே.எஸ். பரிமளா,
கோபிசெட்டிபாளையம்


எது சிறந்தது?
கதை :
சு.துர்கா காத்யாயனி, பதினோராம் வகுப்பு, புனித அலாய்சியஸ் ம.மே.நி. பள்ளி, தூத்துக்குடி
படம் : முத்து
அரசர் சந்திரசூடன் நேர்மையானவர்.
மன்னரின் புகழ் ஓங்குக!
மக்களின் தேவை அறிந்து அவர்களுக்குச் சேவை செய்தார் மன்னர்.
மன்னரின் ஒரே மகள் பூங்கொடி.
அமைச்சரே, என் மகளுக்குத் திருமணம் செய்ய நினைக்கிறேன்.
நல்லது மன்னா. சுயம்வரத்துக்கு ஏற்பாடு செய்கிறேன்.
சுயம்வரத்துக்கு ஓலை அனுப்பப்பட்டது.
பூங்கொடியை நான்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும்.
பக்கத்து நாடுகளில் உள்ள அரசர்கள் தங்கள் குமாரர்களோடு வந்திருந்தனர்.
போட்டி தொடங்கியது.



நிறைய பேர் தோல்வி அடைந்தனர்.
நான் கொடுத்து வைக்கவில்லை
இறுதியில் சோலை நாட்டு இளவரசனும் வேங்கி நாட்டு இளவரசனும் வெற்றி பெற்றனர்.
!
இப்பொழுது என்ன செய்வது? ஒருவருக்குப் பெண் கொடுத்தால் இன்னொருவர் கோபம் அடைவாரே?
அமைச்சரே நீங்கள்தான். வழி சொல்லணும்
இருவரில் ஒருவரைத் தேர்வு செய்ய வேண்டும்.
நாளை அதற்கும் ஒரு சோதனை வைத்துவிடலாம்.
மறுநாள் -
உங்கள் இருவருக்கும் ஒரு சோதனை.
நீங்கள் இருவரும் சகல கலைகளிலும் சிறந்து விளங்குகிறீர்கள். உங்கள் புத்திசாலித்தனத்துக்கு ஒரு சவால்.


அதோ மேஜையில் இரண்டு பொருட்கள் உள்ளன. இவற்றில் எது சிறந்தது எனக் கூற வேண்டும்.
முதலில் சோலை நாட்டு இளவரசன் சென்றான்.
இதிலும் நான்தான் வெல்லணும்.
தங்கக் கத்திரிக் கோலும் ஊசியும் இருந்தன.
அமைச்சரே, தங்கக் கத்தரிக்கோல்தான் சிறந்தது.
எப்படி சொல்கிறீர்?
தங்கத்தால் ஆன கத்திரி உடைந்தாலும் உருக்கி வேறு பொருளாகச் செய்யலாம். ஊசி உடைந்தால் ஒன்றும் செய்ய முடியாது.
அடுத்து வேங்கி நாட்டு இளவரசன் -
அமைச்சரே ஊசியே சிறந்தது.
!
ஏனென்றால் கத்திரி ஒரு பொருளை இரண்டாகப் பிரிக்கிறது. ஊசியோ பிரிந்த பொருளை ஒன்றாகச் சேர்க்கிறது.
சபாஷ்!
வேங்கி நாட்டு இளவரசனுக்கும் பூங்கொடிக்கும் திருமணம் நடைபெற்றது.



உங்கள் நூலகம்

இன்டர்நெட் பற்றிய அடிப்படை விஷயங்கள் - ராஜமலர், பக் 96, ரூ. 50, மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தி.நகர், சென்னை - 17.

இன்டர்நெட் பற்றி பல நூல்கள் வெளிவந்துள்ளன. அந்த வரிசையில் இதுவும் ஒன்று என்று பொதுப்படையாகக் கூறிவிடாது சில சிறப்புத் தகவல்களையும் தந்துள்ளனர். குறிப்பாக BITNET & FIDNET அமைப்புகள், ஈபோன் நெட்வொர்க் போன்றவை குறிப்பிடத் தக்கவை. எளிய நடையில் ஆங்கில அறிவு பெறாதவர்களுக்கும் புரியும்படி தெளிவாக விளக்கப்பட்டுள்ளது பாராட்டத் தக்கது.

அறிவியல் களஞ்சியம், ஆத்மா கே.ரவி, பக். 80, ரூ.30, கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 17.

டோஃபூ என்றால் என்னவென்று தெரியுமா? சோயா பீன்ஸ் பாலிலிருந்து எடுக்கப்படும் பாலாடைக் கட்டிக்குத்தான் இந்தப் பெயர். மெட்டல் டிடெக்டர் எப்படி வேலை செய்கிறது என்பது தெரியுமா? இது போன்ற 150க்கும் மேற்பட்ட சுவையான வினாக்களுக்குப் படவிளக்கங்களோடு இந்த நூல் பதிலளிக்கிறது. வினாடி வினா நடத்துவோருக்கும், பள்ளி மாணவர்களுக்கும் பொது அறிவுப் புதையல் இது.

உலக அதிசயங்கள்

உலக அதிசயங்கள், சந்திரன், பக். 125, ரூ.35, கலைஞன் பதிப்பகம், 19, கண்ணதாசன் தெரு, தியாகராய நகர், சென்னை - 17.

பழைய உலக அதிசயங்களோடு புதிய ஐந்து அதிசயங்களையும் சேர்த்து இதில் பல அதிசயங்கள் பட்டியலிட்டு படங்களோடு தரப்பட்டுள்ளன. ஒவ்வொன்றின் வரலாற்றுப் பின்னணியும், அழிந்த விதம் அல்லது உருவாக்கப்பட்டுள்ள இடம் போன்றவையும் மிகவும் சுவையாக விளக்கப்பட்டுள்ளன. சிறுவர்களை மட்டுமல்ல பெரியவர்களையும் ஈர்த்துப் படிக்க வைக்கும் படைப்பு.

அழகான தமிழ் எழுத்துப் பயிற்சி நுணுக்கங்கள் - பஜிலா ஆசாத், பக்.88, ரூ.40/- மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தி.நகர், சென்னை - 17.

இந்தத் தலைமுறைக் குழந்தைகள் கொடுத்து வைத்தவர்கள். எல்லா மொழி எழுத்துகளுக்கும் அமைப்பு இலக்கணம் என்று ஒன்று உண்டு. ஒரு எழுத்தை இப்படித்தான் எழுத வேண்டும் என்பதே அது. வளைவுகள், விசிறிச் சுழிப்புகள், கீழ் இறக்கங்கள் என்று அந்த எழுத்தை எப்படி உருவாக்க வேண்டும் என்பதற்கு வழி வகைகள் உண்டு. தமிழ் எழுத்துகளை எழுதிப் பழக இத்தகைய குறிப்பேடுகள் அதிகம் வருவதில்லை. அப்படியே வந்தாலும் குறைபாடுகளோடு வருகின்றன. இந்தக் குறையைப் போக்கும் வகையில் இந்தத் தமிழ் எழுத்துப் பயிற்சி நூல் வெளிவந்துள்ளது. எழுத்தை எங்கே தொடங்கி, எப்படியெல்லாம் வளைத்து உருவாக்க வேண்டும் என்பதைக் கெட்டித்தாளில், தக்க படங்களோடு, பார்த்தாலே எடுத்து எழுத வேண்டும் என்று உந்துதலை ஏற்படுத்தும் வகையில் தயாரித்திருக்கிறார்கள்.

— ரே

குருதட்சிணை

தர்மத்வஜன் என்று ஓர் அரசன். நீதி தவறாதவன். அவன் ஆட்சியில் மக்கள் குறை ஏதும் இன்றி வாழ்ந்தனர்.

அந்த அரசனுக்கு இரண்டு பேரன்கள். ஒருவன் பெயர் கேசித்வஜன். அவன் ஒரு மாவீரன். வேத சாஸ்திரங்களை நன்கு கற்றுத் தேர்ந்தவன். ஆத்ம ஞானி. அத்துடன் யாகம் செய்வதில் அதிக நாட்டம் உடையவன்.

இன்னொருவன் காண்டிக்யன். அவனும் பெரிய ஞானிதான். ஆனால், அவனது ஆர்வம் முழுவதும் கர்மயோகத்திலேயே அமைந்திருந்தது.

காலப் போக்கில் பேரரசன் தர்மத்வஜன் மரணம் அடைந்தான். அவனுக்குப் பிறகு, நாடு யாருக்கு...? கேசித்வஜனுக்கா அல்லது காண்டிக்யனுக்கா? இருவருக்கும் இடையே வாக்குவாதம். அதுவே பெரும் போராக வெடித்தது.

அந்தப் போரில் கேசித்வஜன் வெற்றி பெற்று, நாட்டைக் கைப்பற்றி ஆளத் தொடங்கினான். தோற்றுப் போன காண்டிக்யன் தனது ஆதரவு அமைச்சர்கள் சிலரை அழைத்துக் கொண்டு, காட்டுக்கு ஓடி விட்டான். அங்கு ஓர் ஆசிரமத்தை அமைத்துக் கொண்டு, அதில் தங்கி வசித்து வரலானான்.

ஆட்சிபீடம் ஏறிய கேசித்வஜன், நாட்டில் அமைதியை உண்டாக்கினான். மக்களுக்கு நல்லாட்சியை வழங்கினான். அதன் பிறகு, ஒரு யாகத்துக்கு ஏற்பாடு செய்தான். தானே முன் நின்று, எல்லா ஏற்பாடுகளையும் செய்து, யாகத்தைத் தொடங்கினான்.

அப்போது ஒரு துயரச் செய்தியின் வரவு. அவனது பசு ஒன்றைக் காட்டில் ஒரு சிங்கம் அடித்துக் கொன்று விட்டது. அதைக் கேட்டதும் மன்னன் மிகுந்த வேதனை அடைந்தான். தனது கவனக் குறைவால்தான் இப்படி நடந்து விட்டது என்று கருதினான். அந்தப் பாவம் தன்னையே வந்தடையும் எனப் பயந்தான்.

எனவே, யாகத்தை உடனே நிறுத்தி விட்டு, அங்கிருந்த முனிவர்களிடமே, "என்ன பிராயச்சித்தம் செய்யலாம்...? சொல்லுங்கள்..." என்றான்.

அதற்கு அவர்கள், "அரசே...! இதில் தங்கள் குற்றம் ஏதும் இல்லை என்றாலும், தங்களது பயமும் வேதனையும் தீர வழி சொல்கிறோம். ஷௌனகர் என்று ஒரு முனிவர் இருக்கிறார். அவரிடம் செல்லுங்கள்... உரிய பிராயச்சித்தத்துக்கு வழி காட்டுவார்..." என்றனர்.

கேசித்வஜன் அந்த முனிவரிடம் போய் நடந்ததை எடுத்துக் கூறி வேண்டினான். அதற்கு அவர், "இத்தகைய சூழ்நிலை இதுவரையில் எனக்கு ஏற்பட்டதில்லை. நானே எனது ஐயப்பாடுகளைக் காட்டில் வசித்துவரும் உங்கள் சகோதரர் காண்டிக்யனிடம்தான் விளக்கம் பெறுவேன். நீங்களும் அங்கு போங்கள். நல்ல தீர்வு கிடைக்கும்..." என்றார்.

"அப்படியா?" என்ற கேசித்வஜன் "எனது சகோதரன்தான் என்றாலும், அவன் என்னுடைய விரோதி. எனினும் வேறு வழி ஏதும் இல்லை என்பதால், அவனிடம் போகிறேன். ஆனால், அரசனாக அல்ல.. ஒரு யாசகனாகப் போகிறேன்" என்று கூறிவிட்டு, நேராக அரண்மனைக்குத் திரும்பி வந்தான்.

அரச உடைகளைக் கழற்றி விட்டுக் கறுப்பு நிறத் தோல் ஆடைகளை அணிந்து கொண்டு, காட்டுக்குப் போனான்.

தன் ஆசிரம வாசலில் வந்து நிற்பது தனது சகோதரன் என்பதைக் காண்டிக்யன் புரிந்து கொண்டு விட்டான். உடனே

ஜானகிமணாளன்

கடும் கோபம் கொண்டு கூச்சலிடத் தொடங்கி விட்டான்.


"எனது நாட்டைப் பறித்துக் கொண்ட பிறகும் கூட, உனது பேராசை அடங்கவில்லையா? மாறு வேடத்தில் இங்கும் வந்து விட்டாயே? உன்னை விட்டேனா பார்..." என்று உறுமியவாறு, பழி தீர்த்துக் கொள்ளத் தனது வில்லில் நாண் ஏற்றினான்.

ஆனால், கேசித்வஜன் பதிலுக்கு ஆத்திரப்படவில்லை. அமைதியோடு சொன்னான்: "காண்டிக்யனே! உனக்கு நான் ஜன்ம விரோதிதான். ஆனால், இப் போது அப்படி வரவில்லை. என் மனத் தில் ஒரு தீராத சந்தேகச் சுமை! அதை உன் முன் இறக்கி வைத்துத் தீர்வு காணவே வந்துள்ளேன். இக் கணம் முதல் என்னை உன் சீடனாகக் கருதித் தகுந்த விளக்கம் அளித்து உதவு... அது போதும்" என்று வேண்டினான்.

உடனே சற்றுச் சாந்தமடைந்த காண்டிக்யன், தனது அமைச்சர்களைச் சந்தித்து ஆலோசித்தான்.

அதற்கு அவர்கள், "இவர் இப்போது உங்கள் எதிரி. நிராயுதபாணியாக வந்து நிற்கிறார். நல்ல வாய்ப்பு. இவரைக் கொலை செய்துவிட்டு உங்கள் நாட்டைத் திரும்பக் கைப்பற்றிக் கொள்ளுங்கள்..." என்று யோசனை கூறினர்.

ஆனால் காண்டிக்யன் அதை ஏற்க வில்லை. "அமைச்சர்களே! உலகியல்



ரீதியில் நீங்கள் சொல்வது சரிதான்... ஆனால், நிராயுதபாணியைக் கொல்வது பாவம். அந்தப் பாவம் எனக்குப் பரலோக வாழ்வு கிடைப்பதைத் தடுத்துவிடும்'' என்று கூறிவிட்டுத் தனது வில் – அம்பைக் கீழே போட்டு விட்டு, வெளியில் வந்தான்.

"சரி, கேசித்வஜா. உன் பிரச்னைதான் என்ன? சொல்... என் அறிவுக்கு எட்டிய வரையில் தீர்வு கூறுகிறேன்'' என்றான்.

குரு வந்தனத்தோடு தொடங்கிய கேசித்வஜன், நடந்த அனைத்தையும் கூறி விட்டுப் பதிலுக்காகக் கை கட்டி நின்றான்.

காண்டிக்யனும் உரிய பிராயச்சித்த வழி முறைகளை விளக்கிக் கூறி, விடை கொடுத்தான்.

நாடு திரும்பிய கேசித்வஜன் பிராயச்சித்த யாகத்தையும், பாதியில் நின்று போன யாகத்தையும் இனிதே செய்து முடித்தான். எல்லாருக்கும் மனக்குறை ஏதும் இன்றித் தான தர்மங்களை வாரி வழங்கினான்.


ஆனால், அவன் மனத்தில் மட்டும் ஒரே ஒரு குறை உறுத்திக் கொண்டிருந்தது. தனக்கு நல்வழி காட்டிய காண்டிக்யனை அவன் தனது குருவாகவே கருதினான். எனவே, அந்தக் குருவுக்குக் குருதட்சிணையாக எதுவும் கொடுக்கவில்லையே என்ற குறை அவன் மனத்தை அரித்தது.

உடனே, அவன் அரச உடைகளை எடுத்து அணிந்து கொண்டு, தன்னுடைய அரச பரிவாரங்களுடன் காண்டிக்யனைக் காணப் புறப்பட்டான்.

''யார் எதைச் சொன்னாலும் ஏன், எதுக்கு, எப்படின்னு கேட்கணும்.''

''ஏன்? எதுக்கு? எப்படி?''

- மு. பெரியசாமி.



கேசித்வஜனின் வருகையைக் காண்டிக்யன் தவறாகக் கருதிவிட்டான். தன் மீது அவன் படையெடுத்து வந்து விட்டதாகவே நினைத்தான். உடனே, தனது அமைச்சர்களிடம் ஆலோசனை கேட்டான்.

அதற்கு அவர்கள், "அப்போதே சொன்னோம். நீங்கள் தான் கேட்கவில்லை. தனியாக வந்த அன்றைக்கே இவரைக் கொன்றிருக்க வேண்டும். விட்டு விட்டீர்கள். இப்போது ஒரே ஒரு வழி தான் உள்ளது. இங்கிருந்து நாம் ஓடி விடலாம். ஆனால், அது கோழைத்தனம். எனவே, ஆயுதம் ஏந்திப் போரிட்டு மடிவோம். வேறு வழியில்லை..'' என்றனர்.

அதன்படி காண்டிக்யன் வாளை உருவிவிட்டான். ஆனால், கேசித்வஜன் நிதானம் இழக்காமல், சட்டென்று அவன் காலில் விழுந்து வணங்கி எழுந்தபடி சொன்னான் :

'நீங்கள் என் குரு. அன்று நான் தங்களுக்கு எதுவும் காணிக்கை செலுத்தாமல் சென்று விட்டேன். அதற்கு என்னை மன்னியுங்கள். குருதட்சிணையாக என்ன வேண்டும்..? அதைச் செலுத்தி விட்டுப் போகத்தான் வந்துள்ளேன். கொல்வதற்கு அல்ல..'' என்றான்.

உடனே, காண்டிக்யன் வாளைக் கீழே போட்டு விட்டுத் தனது அமைச்சர்களுடன் மீண்டும் கலந்து பேசினான். அவர்கள், "இது மூன்றாவது நல்ல வாய்ப்பு. இதையும் கோட்டை விட்டு விடாதீர்கள். 'குருதட்சிணையாக நாட்டை என்னிடம் கொடுத்துவிட்டு நீ இந்தக் காட்டில் வந்து வசி' என்று கூறுங்கள்'' என்றனர்.

ஆனால், காண்டிக்யன் அதைக் கேட்பதாக இல்லை. ஏனெனில் அவனிடம் ஒரு நல்ல குணம். அமைச்சர்களிடம் யோசனை கேட்பானே தவிர, அதைச் சீர்தூக்கிப் பார்த்துத் தனது மனசாட்சிப்படி தான் நடந்து கொள்வான்.

எனவே அவன், "கேசித்வஜா! உன்னிடமுள்ள ஆத்மஞானம் முழுவதையும் எனக்குக் குருதட்சிணையாகத் தா...'' என்று கேட்டு விட்டான்.

கேசித்வஜன் மகிழ்ச்சியோடு அவ்வாறே கொடுத்து விட்டு, மன நிம்மதியோடு நாடு திரும்பி நல்லாட்சியில் ஈடுபட்டான்.

இன்பம்!

இரண்டாம் பரிசு பெற்ற 'விட்டுக் கொடுப்பதில் இன்பம்' கதை அருமை. தங்கை, தம்பிகளுடன் போட்டி போட்டுக் கொண்டும், சண்டையிட்டுக் கொண்டும் இருந்த எங்களுக்கு நல்ல செய்தியினை உணர்த்தியது. எல்லோரும் விட்டுக் கொடுத்து வாழ்ந்தால் நாடே சண்டை, சச்சரவு இன்றி அமைதியாக மாறி விடும்.

- முத்து பார்கவி, ஆலம்பட்டு.

நீலன்

கொ.மா.கோதண்டத்தின் கதைகள் வனப் பகுதிக்குப் பயணம் செய்த அனுபவத்தைத் தருகின்றன. அத்துடன் காட்டு விலங்குகள் பற்றிய உண்மைகளையும் அறியச் செய்கின்றன. நீலன் பாத்திரம் அருமை.

- உ. தங்கவேல் சரவணன், விக்கிரமசிங்கபுரம்.

ஆர்வம்...

புதையல் விளையாட்டைப் பலமுறை ஆடிவிட்டோம். ஜோக்ஸ் படித்து வயிறே வலித்துவிட்டது. டேபிள் டென்னிஸ் பற்றிய செய்திகள் புதுமையாக இருந்தன. சின்னமனூர் சின்னப் பட்டாளம் ஒவ்வொரு மாதமும் மிகவும் ஆர்வத்தை உண்டாக்குகிறது.

- பி. சுஜாதா, ஒன்பதாம் வகுப்பு,
அரசுமேல்நிலைப் பள்ளி, நல்லூர்.

அழகு!

சாகாவரம், நாய் மனிதனுக்கு நண்பனானது எப்படி? வரம் கேட்ட காகங்கள் என மூன்று படக்கதைகளும் நன்றாக இருந்தன. பூக்களுக்கு நிறம், மணம் எதற்கு? என்ற கட்டுரையும் படங்களும் வெகு அழகாக இருந்தன.

- வி.ஆர். கிருத்திகா, திருச்சி.

சுவாரசியம்..

ஓவியப் போட்டியில் வரைந்த குரங்குகள் நன்றாக இருந்தன. 'மூட முடியாத வாய்' கதை சுவாரசியமாக இருந்தது. மாலா தேடிய மாயப் பெண் கதை நன்றாகப் போய்க் கொண் டிருக்கிறது.

- எம். ரேவதி, ஒன்பதாம் வகுப்பு,
அரசு மே.நி.பள்ளி, நல்லூர்.

சிரிப்பு...

செப்டெம்பர் பரிசு ஜோக்ஸ் அனைத்தும் பயங்கர சிரிப்பை வரவழைத்துவிட்டன!

- பி. விஜயகுமார், ஆட்டையாம்பட்டி.

விளையாட்டு

புதையல் வேட்டை விளையாட்டு சூப்பர். மான்கள் பற்றிய செய்திகளை அறிந்து வியந்தேன். பூக்களுக்கு நிறம், மணம் எதற்கு? என்ற கட்டுரையைப் படித்து நிறைய விஷயங்களை அறிந்து கொண்டேன். படங்கள் அசத்தல்.

- செ. டாவின்செல்வா,
ஏழாம் வகுப்பு,
செ.பா.மெ. பள்ளி,
முகுந்தன் ஹல்லி,
தருமபுரி மாவட்டம்.



வனத்திற்குச் சென்ற அனுபவம்!

ஓவியப் போட்டி

நவம்பர் மாதத்தில் எல்லோருக்கும் பிடித்த தீபாவளி வருகிறது. புத்தாடை அணிந்து, பட்டாசு (வாண வேடிக்கை) வெடித்து மகிழ்வோம் அல்லவா? இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு: வாண வேடிக்கைகள். ஓவியம் வண்ணத்தில் இருக்க வேண்டும். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. முகவரியை மறக்காமல் குறிப்பிடுங்கள். கடைசிதேதி

4.10.2002




• சச்சின்

சச்சினின் டெஸ்ட் சாதனை!

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையே 4 டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றன. முதல் டெஸ்டில் இங்கிலாந்து வென்றது. இரண்டாவது டெஸ்ட் டிரா ஆனது. மூன்றாவது டெஸ்டில் இந்தியா இன்னிங்ஸ் வெற்றியைப் பெற்றது. 1986 ஆம் ஆண்டுக்குப் பின் இங்கிலாந்தில் முதல்முறையாக டெஸ்டில் இந்தியா வென்றுள்ளது. வெளிநாட்டில் இரண்டாவது முறையாக இந்தியா இன்னிங்ஸ் வெற்றியைப் பெற்றுள்ளது. இதற்கு முன்னர் 1977-ஆம் ஆண்டில் சிட்னியில் நடைபெற்ற டெஸ்டில் ஆஸ்திரேலியாவை ஓர் இன்னிங்ஸ் மற்றும் 2 ரன் வித்தியாசத்தில் இந்தியா வென்றிருக்கிறது. நான்காவது டெஸ்ட் டிராவில் முடிய இரு அணிகளும் பரிசைப் பகிர்ந்து கொண்டுள்ளன.

இளம் வயதில் நூறு டெஸ்ட் போட்டிகளில் விளையாடி சாதனை படைத்திருக்கிறார் சச்சின் டெண்டுல்கர். 29 வயதான டெண்டுல்கர் இந்தியா - இங்கிலாந்துக்கு இடையே நடைபெற்ற 4வது டெஸ்டில் இச் சாதனையை நிகழ்த்தியிருக்கிறார். 100வது டெஸ்ட் ஆடும் 26வது சர்வதேச வீரர் டெண்டுல்கர், நான்காவது இந்திய வீரர்.

• பூபதி



செஸ்

விஸ்வநாதன் ஆனந்த், ஆர்த்தி ராமசாமி, விஜயலக்ஷ்மி, ஆர்.பி. ரமேஷ் வரிசையில் தீபன் சக்கரவர்த்தி தமிழகத்துக்குப் பெருமை சேர்த்திருக்கிறார். இலங்கையில் 20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய ஜூனியர் சாம்பியன் போட்டி நடைபெற்றது. இதில் சிறப்பாக விளையாடி ஆசிய ஜூனியர் சாம்பியன் பட்டத்தை வென்றிருக்கிறார் தீபன் சக்கரவர்த்தி. இப்பட்டத்தை இளம் வயதில் வென்றவர் என்ற பெருமையும் இவருக்குக் கிடைத்திருக்கிறது. மதுரை டால்ஃபின் பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்து வருகிறார் தீபன். ஆனந்தைத் தவிர ஜி.எம்.கள் உள்ளிட்ட முன்னிலை வீரர்கள் அனைவருடனும் விளையாடியதைப் பெருமையாகக் கூறுகிறார் இவர்.

டென்னிஸ்

அமெரிக்காவில் நடைபெற்ற யு.எஸ்.ஓபன் டென்னிஸ் போட்டியின் இரட்டையர் ஆட்டத்தில் இந்தியாவின் மகேஷ் பூபதி பட்டத்தை வென்றிருக்கிறார்.

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual : 24 U.S. Dollars, Srilanka Rs.400/-



ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்

விடை : 1.ஆமையின் கை விரல், 2.பறவையில் உள்ள புள்ளிகள், 3.மரத்தில் உள்ள இலைகள், 4.கீழே விழுந்துள்ள இலைகள், 5.மரத்தில் கிளை ஒடிந்த இடம்.





Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / Chief PMG-154 / 2002*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 * Registered as a Newspaper in Srilanka

